பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்( ) புரட்டாதி 26 ஞாயிற்றுக்கிழமை (12.10.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 319

# அனைத்துக் கட்சிக் கூட்டம் வெறுமனே கலைந்தது
# தீர்வுக்கான வழிமுறைகள் எதுவுமே ஆராயப்படவில்லை

கொழும்பு, ஒக்.12

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய்வதற்கென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நேற்றுக் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டம் வெறுமனே கூடிக்கலைந்தது. அரசியல் தீர்வு குறித்து எதுவுமே ஆராயப்படவில்லை. பயங்கரவாதத்தை அழிப்பதிலும், நாடு எங்கணும் ஜனநாயகத்தை நிலைநிறுத்துவது குறித்தும் ஜனாதிபதி ஆற்றிய உரையே கூட்டத்தில் மேலோங்கி நின்றது.

அலரிமாளிகையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தமிழர் தரப்பில் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் விநாயக மூர்த்தி முரளிதரன் (கருணா), மேலக மக்கள் முன்னணி சார்பில் பிரபாகணேசன், எஸ். குமரகுருபரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வடக்கு விரைவில் மீட்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்த கருத்தை வரவேற்று அரசுசார்புக் கட்சிகள் உரையாற்றின.

தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என வலியுறுத்திய மேலக மக்கள் முன்னணிப் (20 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதங்களைக் களைந்து சரணடைந்து
# ஜனநாயக நீரோட்டத்தில் இணைக!



## சர்வகட்சி மாநாட்டில் ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 12

ஆயுதங்களைக் களைந்து விட்டுச் சரண் அடையுமாறு மிகத் தெளிவாக விடுதலைப் புலிகளை மீண்டும் அழைக்கின்றேன். அவர்கள் அவ்வாறு செய்துவிட்டு, ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டும். தமிழ்ச் சகோதரர்களின் ஜனநாயக அரசியல் உரிமைகளை வழங்குவதை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நேற்று அலரிமாளிகையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் வைத்து ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்தார். (20 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு பாலையடியில் தாக்குதல்: மூன்று அதிரடிப்படைச் சிப்பாய்கள் பலி

மட்டக்களப்பு, ஒக்.12

மட்டக்களப்பு மாவட்டம் பாலையடி வெட்டை பகுதியில் சிறப்பு அதிரடிப் படையினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய மின்னல் வேகத்தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். இருவர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (20 ஆம் பக்கம் பார்க்க)

## 750 மெ.தொன் உணவுப் பொருள்களுடன் ஓரிரு தினங்களில் வன்னிக்கு வாகனத் தொடரணி

கொழும்பு, ஒக்.12

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்களுடன் 50 லொறிகள் ஐ.நாவின் மேற்பார்வையில் ஓரிருதினங்களில் வன்னி செல்லவுள்ளன. அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவாரத்தின இதனைத் தெரிவித்தார்.

வன்னி செல்லும் வாகனங்களில் பொருள்களை ஏற்றும் பணிகள் நடை[illegible]று வரு (20 ஆம் பக்கம் பார்க்க)

## தண்ணிமுறிப்புக் குளத்தில் வெள்ளியன்று 12 மணிநேரம் கடும் மோதல்; முன் நகர்வு முறியடிப்பு

கிளிநொச்சி, ஒக்.12

மணலாறில் உள்ள தண்ணிமுறிப்புக் குளம் பகுதியில் நேற்று முன்தினம் படையினர் மேற் கொண்ட முன்நகர்வு நடவடிக்கையினை தாம் முறியடித்திருக்கின்றனர் என்றும் இந்த மோதலில் படையினரின் இரு சடலங்களும் மற்றும் ஆயுதங்களும் கைப்பற் றப்பட்டுள்ளன என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

தண்ணிமுறிப்புக்குளம் பகுதியில் வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு படையினர் பாரிய எடுப்பில் சரமாரியான ஷெல் தாக்குதலை நடத்தியவாறு முன் நகர்வுத்தாக்குதலை மேற்கொண்டனர்.

இம்முன்நகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் காலை 6 மணி தொடக்கம் பிற்பகல் 6மணிவரை தாக்குதல் நடத்தி படையினரின் முன்நகர்வினை முறியடித்தனர்.

இதில் படையினர் பலர் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட படையினரின் இரு சடலங்கள் மற்றும் ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட் (20 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாகுழு உறுப்பினர் நேற்றுமாலை சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஒக்.12

களுவாஞ்சிக்குடியில் நேற்றுமாலை 6 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத் (20 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சியின் வவுனியா அமைப்பாளர் வீதியில் நடந்து சென்றவேளை சுட்டுக் கொலை

கொழும்பு, ஒக்.12

வவுனியாவில் ஐக்கிய தேசியக்கட்சியின் மாவட்ட அமைப்பாளர் நேற்றுச் சனிக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரான மகேஸ்வரன் தவச்செல்வன் (வயது 55) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

வவுனியா ரயில் நிலைய வீதியில் அவரது வீட்டிற்கு அருகில் நடந்து சென்று கொண்டிருந்தபோது நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகளால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றனர்.

மோட்டார் சைக்கிளில் வந்ததாகத் தெரிவிக்கப்படும் ஆயுதபாணிகள், இவரை சுட்டுக்கொன்றுவிட்டு தப்பிச்சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## தமிழ் ஆசிரியையிடம் புத்தகக் குண்டு மீட்கப்பட்டது

பண்டாரவளையில் நேற்று ஆசிரியை ஒருவரிடம் இருந்து புத்தகக் குண்டு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரஸ்தாப ஆசிரியை பண்டாரவளையில் 20 வருடங்களாக பணியாற்றுகிறார். அவரிடம் இருந்து மீட்கப்பட்ட புத்தகம் ஒன்றில் சில பக்கங்கள் வெட்டப்பட்டு அதற்குள் குண்டு புதைக்கப்பட்டிருந்தது - என்று பொலிஸ் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்தார். (அ-1)

## ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து தமிழகத்தில் வரும் 17 இல் கடையடைப்பு

### வணிகர் சங்கப் பேரவை அறிவிப்பு

சென்னை, ஒக். 12

ஈழத் தமிழர்களை இனவெறி பிடித்த இலங்கைச் சிங்கள இராணுவம், அரக்கத்தனமாக - கண்மூடித்தனமாக - விலங்குகளை விடக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்படுகின்றமையைக் கண்டித்து தமிழகம் முழுவதும் எதிர்வரும் 17ஆம் திகதி தமிழக வணிகர் சங்கங்களின் பேரவை (20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 04 - 09 - 1947

இறப்பு 23 - 09 - 1999

### அமரர் சின்னத்தம்பி கந்தசாமி

திதி: திரயோதசி (12.10.2008)

எங்கள் தெய்வமே!
எங்களைத் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள்?
தவியாய்த் தவிக்கும் எங்களை
மீட்க ஒருமுறை வரமாட்டீங்களோ?

எருவன்,
கொடிகாமம். (சி-555092)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கற்கோவளம் மெதடிஸ்த ஆலயப் பிரதிஸ்டை - 12.10.2008 (இன்று)

கற்கோவளத்தில் புனரமைக்கப்பட்ட இலங்கை மெதடிஸ்த சபை ஆலயப் பிரதிஸ்டையும், புதிதாக அமைக்கப்பட்ட மெதடிஸ்த குருமனைத் திறப்பு விழாவும் இன்று (12.10. 2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இலங்கை மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் அருட்திரு. W.P.எபனேசர் ஜோசப் அவர்களால் நிகழ்த்தப்படும்.

இந்த மகத்தான நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

திருச்சபை மக்கள், திருப்பணியாளர்கள்,
இலங்கை மெதடிஸ்த திருச்சபை -
பருத்தித்துறை, கட்டைவேலி சேகரம். (சி-555093)

## உள்நாட்டு வெளிநாடுகளிற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை



FedEx Express
(யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்)

வாடிக்கையாளரின் நலன்கருதி

லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.

கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

HNBL Money Master

Money Master

### திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### கிட்டினர் பரமேஸ்வரன்

(ஆசிரியர், OLR, சங்கீதம்)

பிறப்பு 25-09-1963

இறப்பு 03-10-2005

விழி அருவி சொரிய நின்றோம்
வழி எல்லாம் விழிவைத்தோம்
வாழ்வெமக்கு ஏதிங்கு
வருவீரென்றெதிர் பார்த்தோம்
வாயாரப் பேசுதற்கு
வந்தெம்மைத் தேற்றுமையா.

கட்டைப்பிராய்.
கோப்பாய் தெற்கு,

சாந்தினி (79185)

## மணமகள் தேவை

சுவிற்ஸர்லாந்தில் நிரந்தர வதிவிடம் பெற்ற, 28 வயதுடைய, உதயச் செவ்வாயில் பிறந்த இந்து மணமகனுக்கு படித்த, இந்து மதத்தைச் சேர்ந்த மணப்பெண் தேவை. விரும்புவோர் ஜாதகக் குறிப்பின் பிரதியுடன் தொடர்புகொள்ளவும்.

விளம்பர இல: 3150
மே/பா உதயன்.

(சி-555090)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு மிக அண்மையில் அமைதியான சூழலில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0214591438, 0776916929

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 13.10.2008 விநியோகிக்கப்படும்.

★ றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ மதுரா ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
★ P.ரவி, சாவகச்சேரி
★ சிற்றிபாம் றேடேர்ஸ், கல்வியங்காடு.
★ திருமகள் களஞ்சியம், சிவலிங்கப்புளியடி. (79174)

## ஐங்கரன் திருமண சேவை

எங்களிடம் யாழ்.இந்து கௌரவ குடும்பம் 32, 30 வயது UK citizen, 28 வயது ஆஸ்திரேலியா citizen, 32 வயது கனடா PR, 29 வயது ஜேர்மனி PR, 38 வயது பிரான்ஸ் PR, உள்ள மணமகன்மார் உள்ளனர். மணமகள் ஆங்கில அறிவுடையவராகவும் கொம்பியூட்டர் அறிவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

லண்டன் தொடர்பு:
00447961139759, 00447535384166,
00447502340714
(79000) Fax No: 00442086810707

## எழுதுவினைஞர் தேவை

தமிழ் மொழியில் பணியாற்றக்கூடிய மொழி அறிவும் உறுப்பான கையெழுத்தும் அமைந்த பெண் எழுதுவினைஞர் தேவை. மாநகர சபை எல்லைக்குள் வாழ்பவர்கள் மட்டும் 13,14,15-10-2008 ஆம் திகதிகளில் முற்பகல் 9.30 மணிக்கும் பிற்பகல் 4.00 மணிக்கும் இடையில் நேரில் வரவும்.

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி,
யாழ்ப்பாணம்.



## யோகா சென்ரர் YOGA CENTRE

யாழ்.பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் யோகாசனப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன.

நீண்டகால நோய்கள், உடற்பருமன், மன அழுத்தங்கள், உடல் ஆரோக்கியக் குறைவு, ஆண்மை சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும் இதர உடல், மன ரோகங்கள் போன்றவற்றைவை சிறந்த யோகப் பயிற்சிகள் மூலம் நிவர்த்தி செய்யலாம்.

குறிப்பு: உங்கள் தனிப்பட்ட நேர வசதிக்கேற்ப பயிற்சி வகுப்புகள் வழங்கப்படும்.

தொடர்பு:
இல.532, பலாலி வீதி,
(இலங்கை வங்கி அருகில்)
திருநெல்வேலி.
தொ.பே.: 021 222 2316,
0775590492.
(சி-555091)

## இறுதியாட்டம்

வலி.வடக்கு, ஒக்.12

2010ஆம்ஆண்டில் நூற்றாண்டைக் கொண்டாடவுள்ள மானிப்பாய் இந்துக் கல்லூரி , கொக்குவில் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆகியவற்றுக்கு இடையே இடம்பெறும் இருபதுக்கு இருபது முக்கோணத் தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ்.சிவனேசன் தலைமையில் இடம்பெறுகிறது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தங்கரட்ணம் (மங்கை) இராஜசுந்தரம்



யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகக் கொண்டவரும் மங்கை என அழைக்கப்பட்டவருமான திருமதி தங்கரட்ணம் இராஜசுந்தரம் 09.10.2008 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் C.V.இராஜசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், முதலியார் வினாசித்தம்பி - அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் பாலசரஸ்வதி (சுபத்திரா - கனடா), சந்திரிகாதேவி (நல்லூர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராஜேஸ்வரன், சத்தியகுலரத்தினம், இராஜசேகரம், ராஜலட்சுமி, விஜயலட்சுமி, இராஜேந்திரம், மற்றும் காலஞ்சென்றவர்களான மனோகரன், சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ரவிகுமார், சிவகுமார், கௌரிதேவி, ராஜ்குமார், உமாதேவி, விக்னகுமார் ஆகியோரின் பாசமிகு தாயும், ரஜனி, திலகா, குபேந்திரன், சிவனேஸ்வரன், வதனி, அபர்ணா ஆகியோரின் பாசமிகு மாமியும், அனுஜா, ஹரிஜா, யதுர்ஷன், ஆதிஷன், மயூஷன், ஐங்கிஷன், கிர்ஷான், றொஷான், பகவன், ஹரிஷாந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிமுதல் 9.00 மணிவரை Warden & Sheppard சந்திப்பில் இல.3280 Sheppard Ave East இல் அமைந்துள்ள Highland Funeral Home இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, நாளை (13.10.2008) திங்கட்கிழமை முற்பகல்10.00 மணிக்கு இல.1200 Heines Street இல் அமைந்துள்ள Bowmanville மயானத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- கணவர் - C.V.இராஜசுந்தரம்
மக்கள் - ரவிகுமார் (416) 520-3611, சிவகுமார் (905) 294-1773, ராஜ்குமார் (416) 729-8011, விக்கி (416) 712-0801 } கனடா

இ.இராஜேஸ்வரன், மைத்துனர், 69, செட்டித்தெரு,நல்லூர். (79178)

## நீலயினார் முத்துக்குமாரு கணபதிப்பிள்ளை

(முன்னாள் கொழும்பு, தெமட்டகொட பிரபல வர்த்தகர்)



புங்குடுதீவு, கிழக்கூரைப் பிறப்பிடமாகவும் 3ஆம் வட்டாரம், பெருங்காட்டை வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான நீலயினார் முத்துக்குமாரு கணபதிப்பிள்ளை 09.10.2008 வியாழக்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு -நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அருளம்பலம் (அம்பலவர்) -தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் நாகம்மா(நல்லம்) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, தியாகராசா, பண்டிதர் ஆறுமுகன், திருமதி பொன்னம்மா செல்லத்துரை, கிருஷ்ணபிள்ளை, திருமதி நாகரத்தினம் காராளபிள்ளை மற்றும் பாலசுந்தரம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (தம்பிமுத்து), கனகரத்தினம் (சின்னத்துரை), தருமலிங்கம், திருமதி கனகம்மா பொன்னையா ஆகியோரின் அன்பு மைத்துனரும் சீவரத்தினம் (ஓய்வுபெற்ற கிராம அபிவிருத்தி மாவட்ட உத்தியோகத்தர்), கனடாவில் வசித்து வருபவர்களான புஸ்பராணி, ரஞ்சிதராணி, பங்கயற்செல்வி, செல்வமலர் (முன்னாள் சங்கீத ஆசிரியை, யா/பெரியபுலம் ம.வி.), செல்வகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், லலிதாதேவி, ஆர்.என். கனகலிங்கம் (முன்னாள் யா/ இந்துக் கல்லூரி, சங்கீத ஆசிரியர்), எம்.கனகசபாபதி, எஸ்.பாலரத்தினம், கே.மதுரநாயகம், B.சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனும் கனடாவில் வசிக்கும் முரளி, பார்த்தீபன், பகீரதன், கார்த்திகா, மயூரதன் மற்றும் விப்ரப்பிரியா், உருத்திரப்பிரியா, விப்ரரூபா, உருத்திரகுமாரி,பிரஸன்னா, விஜி, கனடாவில் வசிக்கும் கௌரி, அகிலன், சண்முகப்பிரியா, தாட்சாயினி, கர்யத்திரி, கார்முகி, சரவணா, சாருகி, மதுஷன், நயனி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆரணன், சாருஜன், அனுராகன், பிரணவன், பிரணவி, ஷேஷன், பாரதி, ஆரணி, ஆரபி, அஸ்வினி, அம்பிகை, அபிநயா, பூஜா, ஹரிஸ், துவாரகா, லக்ஷா, அஸ்விதா, ஜஷானி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.10.2008 செவ்வாய்க்கிழமை கனடாவில் (Tronto) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

370, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,
தொ.பே.: 021 222 5870

தகவல்:
திருமதி லலிதாதேவி சீவரத்தினம்
(மருமகள்). (79187)

## நடராஜா அற்புதானந்தராஜா



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா அற்புதானந்தராஜா நேற்று (11.10. 2008) சனிக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - தங்கம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் முத்தம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், தேவசங்கர் (லண்டன்), ராஜ்சங்கர் (ராஜ் - கொனிக்கா கலர் லாப்), கிரிதர் (மகாலட்சுமி ஜூவெல்லர்ஸ்), கஜகோபன் (HNDA இறுதி வருட மாணவன், உயர் தொழில்நுட்ப நிறுவனம்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தங்கராணி (கனடா), வசந்தராணி (ஆஸ்திரேலியா), செல்வராணி (உரும்பிராய்), ஸ்ரீரங்கராஜா (சுவிஸ்), ஜெயலோகராஜா (சுவிஸ்), சோதிராணி (பிரான்ஸ்), இந்திரானந்தராஜா (சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற விஸ்வரட்ணம் மற்றும் சௌரிராஜன் (ஆஸ்திரேலியா), மகாதேவன் (ஓய்வுபெற்ற ஆசிரி யர்); தவமணி (சுவிஸ்), பரமேஸ்வரி (சுவிஸ்), சதானந்தராஜா (பிரான்ஸ்), நந்தினி (சுவிஸ்), விஜயகுமார் - மாலா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுரேஸ், சுமதி, ரமேஸ், பிரதீஸ், சுகதீஸ், அகிலா - உமாகஜன், நந்தராஜ், வினோகாந்தன், அகல்யா, ஜிந்துயா, ஆதவன், சாவீகா ஆகியோரின் அன்பு மாமனும், ஜானுயா, அசோஜன், ருக்ஷன், வேணுசன், ஆரூரன், அஜந்தன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்கள். (79186)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளித்துப் பிடித்து விளையாடும் மின்சாரத்தினால் நித்தமும் பாதிப்புறும் யாழ்ப்பாண மக்கள்!

இணைபிரியாத வாழ்வுக்கு உதாரணமாகத் திருமணச் சடங்குகளில் வடதுருவ விண்மீன்களோடு ஒட்டிக் கொண்டு இருக்கும் அருந்ததி நட்சத்திரத்தைக் காண்பிப்பதுண்டு. ஆனால் இப்போதெல்லாம் இணை பிரியாத தன்மைக்கு யாழ்.மக்களையும் மின்வெட்டினையும் உதாரணமாகக் கூறக்கூடிய சூழல் தோன்றியுள்ளது. தினமும் அடிக்கடி மின்சாரம் தொலைந்து போகின்ற இரவுகளிலேயே யாழ்.மக்கள் தட்டுத்தடுமாற வேண்டியுள்ளது.

இலங்கையில் இனப்பிரச்சினை கோரத்தாண்டவம் ஆடத் தொடங்கிய போது, 'லக்ஸபான' மின் நிலையத்திலிருந்து யாழ். குடாநாட்டுக்கு வந்து கொண்டிருந்த நீர் மின்சாரம் தடைப் பட்டுப்போனது. அதன் பின்னான சிலவருடங்கள் மின்சாரத்தை கண்ணாலும் காணாத கதையே தொடர்ந்தது. அவ்வேளைகளில் வானொலிகளையும், சிறியரகத் தொலைக்காட்சியையும் இயக்குவதற்கு சைக்கிள் டைனமோக்களே யாழ். மக்களுக்குக் கைகொடுத்தன. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்தை அரச படைகள் மீண்டும் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, [illegible]ல் நிர்வாகத்தை இயங்க வைக்க நடவடிக்கை எடுத்தது. அதன்போது இயல்பு வாழ்வை ஏற்படுத்துவதில் மின்சாரத்தின் முக்கியத்துவம் உணரப்பட்டது. எனினும் 'லக்ஸபான' மின்நிலையத்திலிருந்து மின் விநியோகத்தை மேற்கொள்வதற்கான தரைமார்க்கங்கள் இல்லாததால், மின் பிறப்பாக்கிகள் மூலம் மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டது. ஆரம்பத்தில் மட்டுப் படுத்தப்பட்டளவில் வழங்கப்பட்டு தெரிவிக்கின்றன.

**சீனாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ள மின்பிறப்பாக்கிகள்**

வலுக்குறைந்த மின்பிறப்பாக்கிகள் மூலம் யாழ்.குடாநாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியாது என்பதனால், நீண்டகால இழுத்தடிப்புகளுக்குப் பின்னர் உயர்வலுக் கொண்ட மின் பிறப்பாக்கிகள் சீனாவிலிருந்து காங்கேசன்துறைக்கு நேரடியாகத் தருவிக்கப்பட்டன. மிகவிரைவில் இந்த மின்பிறப்பாக்கிகளை இயக்கி அதனூடா இன்னும் ஒருமாத காலத்துக்குள் யாழ்.மாவட்ட மக்களின் தேவையை ஈடுசெய்யும் வகையில், தங்குதடையற்ற மின்விநியோகத்தை வழங்கவிருப்பதாக ஆர்ப்பாட்டமான அறிவிப்புகளும் வெளிவந்தன.

அமுல்படுத்தி வருகின்ற சூழலிலே,வெகு எளிதாகத் திருடர்கள் தம்கைவரிசையைக் காட்டுவதற்கு 'மின்வெட்டும்' உதவி செய்கின்றது. இரவு நேரங்களில் எப்போது மின்சாரம் தடைப்படும், எப்போது மீண்டும் வரும் என்பது தெரியாமல் பொதுமக்கள் தலையைப் பிய்த்துக் கொள்ள, திருடர்கள் மட்டும் மின்வெட்டும் நேரமும், அது மீளவரும் நேரத்தையும் சரியாகக் கணித்து, அந்தந்தப் பிரதேசத்தில் ஒவ்வொரு வீடாகப் பதம் பார்த்து வருகிறார்கள். இப்போதெல்லாம்,மின்சாரம் நின்று விட்டாலே பதை பதைக்கும் இதயத்தோடு 'திருடர்கள் இன்று எங்கள் வீட்டைத்தான் கபளீகரம் செய்யப்போகிறார்களோ?' என்று மின்சாரம் மீளவரும்வரை பயத்தோடு பரிதவித்திருக்கின்ற வாழ்வே யாழ்.

கல்விக்குக் குந்தகம் விளைவிக்கும் கைங்கரியத்தை மின்சாரம் செய்வதும் யாழ்.மாவட்ட மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியுற்றுக் கொண்டே செல்வதற்கான காரணிகளில் ஒன்றாகக் கூறலாம்.

இதுதவிர மக்களின் நாளாந்தச் செயற்பாடுகள் பலவும் மின்சாரத்தை நம்பியேயிருக்கின்றன. பல தொழில்நிலையங்கள் அடிக்கடி காணாமல் போகின்ற மின்சாரத்தால் பொருளாதார ரீதியாகப் பல்வேறு நஷ்டங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. அரைக்கும் ஆலைகள் (மில்) இடை நடுவிலேயே நின்று விடுவதால் மக்களின் வாழ்க்கைச் செயற்பாடுகளும் அந்தரத்திலேயே தொங்க வேண்டியிருக்கிறது. மீண்டும் மின்சாரம் வந்து அரைக்கக் கொடுத்த

## அது 'ஷொக்' அடித்து பாழ்படுத்தாத துறையே இல்லை!

இந்த அறிவிப்புகள் தொடர்ச்சியான மின்வெட்டுகளால் இருளில் மூழ்கிக்கிடந்த மக்களின் மனங்களில் வெளிச்சத்தைப் பாய்ச்சின. யாழ்ப்பாணத்தின் தேரோடும் தெருவெங்கும், திருவிழாவைப்போல வண்ண வண்ணமாய் மின்சார விளக்குகள் இருபத்து நான்கு மணிநேரமும் ஒளிரப்போகின்றன என்ற கனவில் மக்கள் மிதக்கத் தொடங்கினர்.

ஆனால் புதியமின் பிறப்பாக்கிகள் வந்தவுடன் இதுவரை காலமும் அமுலில் இருந்த மின்வெட்டு நேரம், மின்சாரம் வெட்டப்படுகின்ற தடவைகளின் எண்ணிக்கை என்பன வீழ்ச்சியுறுவதற்குப் பதிலாக,

மக்களுக்கு நிரந்தரமாகப் போய்விட்டது. திருடர்கள் மட்டும் இருளைத் தமக்கு சாதகமாக்கிக் கொள்ள வில்லை. மற்றும் அசம்பாவிதங்களும் அவ் வேளைகளிலேயே தாராளமாக நடைபெறுகின்றன.

**மாணவர்களின் கல்விக்கு ஆப்பு**

கல்வியென்பது யாழ்.மக்களின வாழ் வாதாரங்களில் ஒன்று. மாணவர்கள் பாடசாலை, தனியார் வகுப்புகள் என்று அலைந்து திரிந்து விட்டு, உண்மையாக அவர்கள் மனம் வைத்துப் படிக்கத் தொடங்குவது முன்னிரவு நேரங்களில் தான். அதற்கும் அடிக்கடி நிகழும் மின்வெட்டு ஆப்பு வைத்து விடுகிறது. பாடசாலையில் வழங்கப்பட்ட மேலதிக

பொருள்களை எடுக்கும் வரையில் கால்கடுக்கக் காத்திருப்பதனால் பயனுள்ள மனித மணித்தியாலங்கள் தேவையின்றி வீணே விரயமாக வேண்டியுள்ளது.

**விவசாயத்தையும் பாதிக்கின்றது**

எரிபொருள் விலை கிடுகிடுவென உயர்ந்து செய்வதனால், உற்பத்திச் செலவைக் குறைப்பதற்காக மின் மோட்டர்களைப் பயன்படுத்தியே விவசாயத்திற்கான நீர்ப்பாசனத்தை பெரும்பாலான விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் பொறுத்த நேரங்களில் கைவிடுகின்ற மின்சாரத்தால், உரிய பருவங்களில் நீர்ப்பாசனத்தைச் சீரான வகையில் மேற்கொள்ள முடியாதிருப்பதனால் விவசாயப் பயிர்களும், விவசாயிகளும் வாடுவதைத்தவிர வேறுவழியேதும் இருப்பதில்லை. இதனால் யாழ். குடாநாட்டின் விவசாய உற்பத்தித் துறையிலும் வீழ்ச்சியை உண்டு பண்ணுவதில் மின்வெட்டும் தன் பங்கினை வழங்கத் தவறவில்லை.

இதனைவிட திடீரென நின்று, திடீரென வருகின்ற மாயாஜால விளையாட்டை மின்சாரம் நிகழ்த்தி வருவதனால் பல வீடுகளிலுள்ள மின்சாதனப் பொருள்கள் உயர்வலுக் கொண்ட மின்சாரத்தை தாங்கமுடியாது செத்துப் போய்விடுகின்றன. மின்னழுத்தி, தொலைக் காட்சி, கணனி எனப் பெறுமதியான பொருள்கள் தாறுமாறான மின்விநியோகத்தால் செயலிழப்பதால், நாளும் பொழுதும் இழப்புகளுடனேயே மக்கள் வாழ வேண்டி யுள்ளது.

இந்தச் சூழலில் காங்கேசன் துறையில் அமைக்கப்பட்டு வருகின்ற புதிய மின்நிலையத்தை இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இம்மாத

## தினமும் திடீரெனப் போய் திடீரென வந்து மாஜா ஜாலம் காட்டும் மின்சக்தி

[illegible]த மின்சாரம் காலகதியில் இருபத்து நான்கு மணிநேரமும் வழங்கப்படலாயிற்று. அதன்பிறகுதான் நித்தியகண்டம் பூரண ஆயுசு என்கிற ரீதியில் மின்வெட்டு விஸ்வரூபமெடுக்கத் தொடங்கியது. இயந்திரக் கோளாறு, எரிபொருள் தட்டுப்பாடு, திருத்தவேலைகள், விஷமிகளின் கைவரிசை என இந்த மின்வெட்டுகளுக்கு வரிசையாகக் காரணங்களும் சொல்லப்பட்டன.

மின்வெட்டு அதிகரிக்கும் வேகத்திற்கு ஏற்ப அதற்கான காரணங்களும் அதிகரித்ததே தவிர, சீரான மின் விநியோகத்துக்கான எவ்வித அறிகுறிகளும் தென்படவேயில்லை.

நான்காவது ஈழப்போரின் ஆரம்பத்தோடு முகமாலையூடான ஏ-9 பாதை மூடப்பட்டதன் பின்னர் மின்சாரம் வழங்கப்படும் நேரத்தை விடவும் மின்வெட்டு அமுலில் இருக்கும் நேரமே அதிகமானதாக மாறியது. நாளடைவில் இந்நிலை ஓரளவு சீரானாலுங்கூட பொதுமக்கள் அதிகளவில் மின்சாரத்தை பயன்படுத்துகின்ற முன்னிரவுக் காலங்களில் மின்வெட்டு தொடரத்தான் செய்கிறது.

குடாநாட்டில் உள்ள பொதும்க்களின் பாவனையைப் பூர்த்தி செய்வதற்கு ஏறக்குறைய தினமும் 33 மெகாவாற்ஸ் மின்சாரம் தேவையாக உள்ளதாகவும், எனினும் தற்போதுள்ள மின்பிறப் பாக்கிகளினூடாக வெறும் 21 மெகாவாற்ஸ் மின்சாரத்தை மாத்திரமே உற்பத்தி செய்ய முடிவதாலேயே இவ்வாறான முன்னிரவுக்கால மின்வெட்டு தொடர்வதாகவும் மின்சாரசபை வட்டாரங்கள்

ஏறுவரிசையிலேயே செல்லத் தொடங்கின.

முன்னெரெல்லாம் தினமும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட நேரங்களில் மட்டுமே மின்விநியோகத்தில் வெட்டு விழுந்தது. ஆனால் நேர காலம் இல்லாது நினைத்தபோதெல்லாம் மின்சாரம் ஒளித்துப் பிடித்து விளையாடத் தொடங்கியது. இந்தக் கண்ணாம்பூச்சி விளையாட்டால் ஏற்கனவே நொந்து போய்க் கிடந்த யாழ்.குடாநாட்டு மக்கள் மென்மேலும் பல்வேறுவிதமான இடையூறுகளை எதிர்கொள்ள நேர்ந்தது.

**சமகால விவகாரம்**

ஏ-9 வீதி மூடப்பட்டபின் யாழ்ப்பாணத்தில் கொள்ளையர்களின் அட்டகாசம் எல்லை மீறிப்போயுள்ளது. முன்னரெல்லாம் வீட்டுக்காரர்கள் நித்திரையாக இருக்கும் போது சந்தடியில்லாமல் உள்நுழைந்து கையில் அகப்பட்டதை மட்டும் எடுத்துக் கொண்டு தப்பினோம் பிழைத்தோமென்று ஓடி மறைவதே திருடர்களின் வழிமுறையாக இருந்தது. ஆனால் இப்போதெல்லாம் மின் வெட்டினால் உண்டாகும் இருளில் தம்முக அடையாளங்களை மறைத்துக் கொண்டு, அதிகாரத்தொனியோடு வீடுகளில் நுழைகின்ற திருடர்கள், வீட்டில் மறைத்து வைக்கப்படிருக்கும் நகைகள் பணம், தளபாடங்கள், இலத்திரனியல் உபகரணங்கள் என்பவற்றையெல்லாம் ஏதோ காசு கொடுத்து வாங்கியவர்கள் போல சாவகாசமாக வழித்துத் துடைத்து எடுத்துச் செல்லத் தொடங்கியுள்ளனர். இத்தனைக்கு[illegible] மிகக்கடுமை[illegible]

பயிற்சிகள், பொதுப் பரீட்சைகளுக்கான தயார்ப்படுத்தல்கள் என்பவற்றுக்காக மேசை முன் ஆர்வத்தோடு அமர்கின்ற மாணவர்கள், மின்வெட்டு நிகழும் நேரங்களில், மின்சாரம் வரும், வரும் என்று எதிர்பார்த்தபடியே நித்திரையாகி விடுகிறார்கள். பின்னர் நடுநிசியை அண்மித்த நேரப்பகுதியில் மின்சாரம் வரும்போது தூக்கத்தின் பிடியிலிருந்து மாணவர்கள் மீளமுடியாது இருப்பதால், அன்றைய கற்றல் செயற்பாட்டை மாணவர்கள் மூடை கட்டி வைக்க வேண்டிய நிலையே ஏற்படுகின்றது. பொதுவாகவே க.பொ.த உயர் தரப்பரீட்சை, சாதாரண தரப்பரீட்சை,

## வெறும் வாய்ச்சொல் வேதாந்தம் குடாநாட்டு மக்களுக்குப் பயன்தருமா?

புலமைப்பரிசில் பரீட்சை போன்ற மிகமுக்கியமான தேர்வுகளை அண்மித்த காலப்பகுதிகளில் மின்வெட்டின் நேரம் வழமையை விடவும் அதிகரித்ததாகவே காணப்படுவதாக மாணவர்களும் பெற்றோர்களும் விசனம் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் நடைபெற்று முடிந்த க.பொ.த (உ/த) பரீட்சை, புலமைப்பரிசில் பரீட்சை என்பவற்றுக்காகத் தம்மைத் தயார்ப்படுத்தும் கற்றல் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது மூச்சுக்கு முந்நூறுதரம் அமுல் படுத்தப்பட்ட மின்வெட்டுக் காரணமாக, ஒரு கிரமமான முறையில் கற்[illegible]கள் மேற்கொள்ள [illegible]போனது. இவ்வாறு

இறுதியில் திறந்து வைக்க இருப்பதாகவும், இதன் மூலம் 30 மெகாவாற்ஸ் மின்சாரத்தை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் இலங்கை மின்சாரசபை வட்டாரங்கள் அண்மையில் அறிவித்துள்ளன.

இந்த அறிவிப்பு தாழவுற்று நிற்கும் மக்களின் வயிற்றிலே பாலை வார்த்துள்ளது. இதன் மூலமாவது

— ஒளண்யன் —

மின்வெட்டு நீங்கி, சீரான மின்சாரத்தை பெற்று இருண்டு கிடக்கின்ற மக்களின் வாழ்வு ஒளிபெற வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

ஆனால் கைக்கு வருமுன் நெய்க்கு விலை பேசுவது அர்த்தமற்றது, அரசியல் வல்வாதிகளும் அதிகாரிகளும் வாய்ச்சொல்லிலே தான் சூரதீரர்கள்.

அவர்களின் வேலையும் நேரமும் முடிந்ததும், பாவம் மக்களின் கதி அதோ கதியவதே இந் நாட்டின் வரம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் மனங்களை வெல்வதானால் அர்த்தமுள்ள முழு அளவிலான அதிகாரப் பகிர்வே தேவை

**தமிழ் மக்களும், அவர்களது உரிமைப் போராட்டமும், விடுதலைப் புலிகள் அமைப்பும் என்று இம்மூன்றுமே இன்று தெற்கில் தமிழர் விரோத மனோபாவத்தை வளர்த்துவிட்டுள்ளதாகவும், அந்த மனோபாவத்துக்கு உரமூட்டிவிடுவதற்கும் போஷிப்பதற்கும், விடுதலைப் புலிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் இந்த யுத்தம் பெரும் பங்களிப்பை வழங்கி வருவதாகவும் இக்கட்டுரை சுட்டிக்காட்டுகிறது.**

**தமிழ் மக்களும் இந்நாட்டின் சகோதர மக்களே எனத் தென்புலத்தைக் கருதவைப்பதற்கும் - தாமும் இந்நாட்டின் குடிமக்களே எனத் தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கும் வகை செய்யும் விதமான விரைவான காத்திரமானதொரு அரசியல் தீர்வு அரசால் முன்வைக்கப்படாத பட்சத்தில் எதிர்காலத்தில் இந்த நாடு பயங்கரங்கள் மிக்க காரிருளுக்குள் தள்ளப்படுவதைத் தவிர்க்க இயலாது போய்விடும் என்பதையும் சுட்டிக்காட்டும் வகையில் அமைகிறது இக்கட்டுரை.**

**சங்கஜய நாணயக்கார என்பவரால் எழுதப்பட்ட இக்கட்டுரை "ராவய" பத்திரிகையில் சமீபத்தில் பிரசுரமாகியது. அதன் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.**

மிகச்சிறந்த போரியல் சிந்தனையார்களுள் ஒருவரான மாவோ சேதுங், ஒரு சந்தர்ப்பத்தில் கெரில்லாப் போராளியை மீனுக்கு ஒப்பிட்டிருந்தார். அதாவது, மீனொன்றுக்கு நீரே கதி - நீரில் அல்லாது அதனால் உயிர் வாழ இயலாது. அதேபோன்று கெரில்லாப் போராளிக்கும் கூட மக்களை விட்டுப் பிரிந்து தனித்து நின்று செயற்பட இயலாது- சாத்தியமற்றது என்பதேயாகும். அந்த வகையில், விடுதலைப் புலிகள் அமைப்பென்பது, தமிழ் சமுதாயத்தின் குறிப்பிடத்தக்க தரப்பொன்றின் ஆதரவையும் ஆசீர்வாதத்தையும் ஈட்டியுள்ளதொரு கெரில்லா அமைப்பாகும். எனவே, விடுதலைப் புலிகள் அமைப்பை நீண்ட தோல்வி நிலைக்கு உள்ளாக்கி விடவேண்டுமானால், அவர்களது இருப்புக்கு அடிப்படை ஆதாரமாக விளங்கும் தமிழ்மக்களிடமிருந்து அவர்கள் தனிமைப்படுத்தப்படவேண்டியுள்ளது. அதற்கமைய, தமிழ்மக்களைப் பீதிக்குள்ளாக்குவது மற்றும் அவலங்களுக்கு உள்ளாக்கி வதைப்பதால் அக்கருமத்தை நிறைவேற்றிவிட இயலாது. அவர்களது இதயங்களை மற்றும் மன உணர்வுகளை வென்றெடுப்பதன் மூலமே அதைச் சாத்தியப்படுத்திக்கொள்ள முடியும்.

### தமிழ் மக்களது இதயங்களை வென்றெடுத்தல்

தமிழ் மக்களது இதயங்களை வென்றெடுக்கும் முயற்சியானது, கபடத்தனமான சமாதானத் தந்திரோபாயம் என்பதற்குப் பதிலாக 'நியாயமான அரசியல் தீர்வு தொடர்பானதொரு முயற்சியாகவே அமையவேண்டியுள்ளது. அந்தவகையில், 'கிழக்கின் உதயம்' என்றதொரு திட்டத்தின்மூலம் யுத்தத்தினால் சிதைவுற்று அழிந்துபோயுள்ள கிழக்கில், தமிழ்மொழி பேசும் மக்கள் வாழும் பிரதேசங்கள் மீளவும் அபிவிருத்தி செய்யப்பட்டு வாழ்வாதாரங்கள் சீர்செய்யப்பட்டு அவர்களது வாழ்க்கை மேம்படுத்தப்படுவதே தலையாய கருமமாகும். ஆனாலும், அவர்களது இதயங்களை வென்றெடுப்பதற்கு அது போதுமானதல்ல. இந்த மோதல் நிலை உண்மையில் இனச்சிக்கலே என்பதால், அச்சிக்கல் தீர்த்து வைக்கப்படுவதற்கு அரசியல் தீர்வொன்று மிகுந்த அவசியமாகிறது. அத்தகைய தீர்வொன்றுக்கான காத்திரமான நோக்காக அமைய வேண்டியது, அதிகாரப் (அரசமைப்பு ரீதியிலான) பகிர்வேயாகும். இத்தகையதொரு செயற்பாடு, இலங்கையைத் துண்டாடிவிடும் கபடத்தனமான திட்டத்தின் ஆரம்பத் தடம் பதித்தலொன்றே என்ற சந்தேகம் சில தரப்புகள் மத்தியில் இருக்கவே செய்கிறது. அந்தவகையில், இலங்கையை நேசிக்கும் எவரொருவர் மத்தியிலும் அத்தகையதொரு சந்தேகம் தலைதூக்குவதென்பது நியாயமானதே. ஆனால், அதிகாரம் பகிர்ந்துகொள்ளப்பட்டதன் மூலம் இந்தியாவின் மாநிலமொன்றான தமிழ்நாடு இந்தியாவிலிருந்து பிளவுபட்டுப்போன வேறானதொரு மாநிலமாக நிர்வகிக்கப்படுகின்றதா? என்ற வினாவை நாமிங்கு முன்வைக்கவேண்டியுள்ளது. அவ்வாறின்றேல், அதிகாரப் பகிர்வின் காரணமாக கனடாவின் 'குவிபெக்' மாநிலம் துண்டாடப்பட்டு தனியானதொரு மாநிலமாகிப் போயுள்ளதா? என்பது குறித்தும் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இவற்றுக்குப் பதில் வரவேற்கத்தக்கதாகவே அமைகிறது. அதாவது, தமிழ்நாடும், குவிபெக் மாநிலமும் தனித்த மாநிலங்களாக இயங்க முடிந்ததன் மூலம் அந்த மாநிலங்களில் தலைதூக்கியிருந்த பிரிவினைவாத அரசியல் கலாசாரம் நலிவடைந்து போவதற்கே வழி வகுத்தது. இனங்களுக்கிடையிலான தொடர்பாடல்களைச் சிறப்பாக முகாமைத்துவப்படுத்திக்கொள்ள முடிந்ததன் காரணமாக இன்று இந்த நாடுகளின் பொதுமக்களுக்கு அபிவிருத்தியின் பலாபலன்களைத் தமதாக்கிக்கொள்ள முடிந்துள்ளது.

எனவே, தொடர்ந்தும் காலத்தை இழுத்தடிக்காது, இலங்கை அரசு, நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை முன்வைக்கவேண்டியுள்ளது. இராணுவ ரீதியில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தோற்கடிப்பது என்ற தமது கோட்பாடு நிறைவேற்றப்படும் வரையில் அரசு காலம் தாழ்த்தக்கூடாது. அத்தகையதோர் அரசியல் தீர்வு முன்வைக்கப்படுவதானது, அரசு தனது அந்தக் கோட்பாட்டை நிறைவேற்றிக்கொள்வதற்கான முதற்கட்ட நடவடிக்கையாகும். அத்தகையதொரு செயற்பாட்டின் ஊடாகத் தமிழ் சமூகத்தினதும், அதேபோன்று சர்வதேச சமூகத்தினதும் நம்பிக்கையையும் வென்றெடுப்பதென்பது இலங்கை அரசுக்குச் சிரமமானதொரு கருமமாக ஆகமாட்டாது. அதேசமயம், அத்தகையதொரு அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் வரையிலும், அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. குறிப்பாக கிழக்கு மாகாண சபைக்குக் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் சட்டபூர்வமாக வழங்கப்படும் விதத்தில் அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

## அரசால் கட்டுப்படுத்த இயலாத இனவாத சக்திகளை இந்த யுத்தம் தெற்கில் உருவாக்கி உள்ளது

### மனிதாபிமான நடவடிக்கை?

அரசோ, தான் முன்னெடுத்துவரும் இந்த யுத்தத்தை விடுதலைப் புலிகளிடமிருந்து தமிழ் மக்களை மீட்டெடுக்கும் தனது மனிதாபிமான நடவடிக்கையென்றே அர்த்தப்படுத்தி வருகிறது. எனவே, இந்த யுத்தம் எந்த விதத்திலும் தமிழர் - விரோத யுத்தம் என உருவகப்படுத்தப்படுவதற்கு இடமளிக்கப்படாதவிதமாக அரசு மிகுந்த விவேகத்துடன் செயல்படவேண்டியுள்ளது.

ஏனெனில் இந்த யுத்தச்சூழல், இன்று, தெற்கில் இருள்நிறைந்த அதர்மவழி நிற்கும் தீவிர சக்திகளையே வெளிக்கொணர்ந்த வண்ணமுள்ளது. துரதிஷ்டவசமாக, இந்த யுத்தமானது தென்புலத்தில் - தமிழர் விரோத, சிங்கள இனவாதத்துக்கு உரமூட்டுவதற்கும் அதனைப் போஷிப்பதற்குமே பங்களிப்பு வழங்கி வருகிறது. அது தொடர்பாக முகம்கொடுக்க நேர்ந்த எனது தனிப்பட்ட அனுபவங்கள் சிலவற்றை இங்கு குறிப்பிட்டாகவேண்டியுள்ளது.

அந்தவகையில் அண்மையில் எனது நண்பரொருவரின் இல்லத்தில் இடம்பெற்ற அவரது திருமண வைபவத்தில் நான் கலந்துகொண்டிருந்தேன். அங்கு மணமக்களுக்கு ஆசிவழங்கி வாழ்த்துத் தெரிவிக்கும் நிகழ்வின்போது, மணமகனின் உறவினரொருவராகக் கருதப்பட்ட- ஓரளவுக்கு நகர்ப்புறவாசியென அனுமானிக்கப்படக்கூடிய சிங்கள மத்தியதர வகுப்பைச் சேர்ந்த முதியவரொருவர், மணமக்களுக்கு வாழ்த்துக்கூறி ஆசி வழங்கினார். அவரது ஆசிமொழிகளோ, "தமிழ் விரோதிகளை அழித்துவிடுவதற்கு மென்மேலும் குழந்தைச் செல்வங்களைப் பெறுவீர்களாக" என்பதாகவே அமைந்திருந்தது. இங்கு ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. அதாவது, சிங்களப் பேரினவாதம் முன்னுள்ள சிக்கல், தமிழர்களையும் புலிகளையும் வேறுபடுத்திப் பார்ப்பதற்கு இயல்பாகவே அதனிடம் அமைந்துள்ள இயலாத்தனமாகும். அதேபோன்று, நகர்ப்புற உயர்மட்ட சிங்களச் சமூகத்தைச் சேர்ந்த சகோதரன் முறையான எனது உறவினரொருவரோடு நான் உரையாட நேர்ந்தவேளையில், மீட்டெடுக்கப்பட்ட கிழக்கு [illegible] மேலாண்மைவா[illegible]வது தொடர்பாக உடனடியாகவே அங்கு சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியம் பற்றி அவர் குறிப்பிட்டார். அதுமட்டுமல்லாது, இன்று, தென்புலத்துச் சிங்கள இளைஞர்களிடையே, யுத்தத்தின் கொடுமைமிக்க வன்முறைகள் அவர்களைத் திருப்திப்படுத்துமொரு நிலைப்பாடாகவும் மாறி வருவதைக் காணமுடிகிறது. இவர்களுள் பெரும்பாலானோர் இலக்கற்ற மூர்க்கத்தனமான 'றம்போ' மனோபாவத்துக்குப் பயங்கரமான விதத்தில் இரையாகி வருவதையும் காணமுடிகிறது. இலக்கற்று மூர்க்கத்தனமாக, உடல் அவயவங்களை வேகமாகக் குலுக்கி ஆடும் நடனத்தை இந்த 'றம்போ' மனோபாவத்துக்கு ஒப்பிடமுடியும். இந்த மனோபாவங்கள் எமக்குத் தெளிவுபடுத்தி நிற்பது, தொடர்ந்தும் அரசால் கட்டுப்படுத்திவிட இயலாத மூர்க்கத்தனமான தீவிர சக்திகளை இந்த யுத்தம் வெளிக்கொணர்ந்துள்ளது என்பதையே.

எனவே, தமிழர் விரோத மற்றும் ஜனநாயக விரோத மூர்க்கத்தனமான நிலைப்பாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு அரசு உடனடியாகவே தலையிட்டுச் செயற்படவேண்டியுள்ளது. அவ்வாறு தலையிட்டு அரசு செயற்படத் தவறும்பட்சத்தில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளோடு சார்ந்து நிற்பதற்கே அது வழிவகுக்கும். அத்தகையதொரு நிலைப்பாட்டில், அப்பின்புலமானது, சர்வதேச சமூகத்தின் மத்தியில் சிதைவுற்றுப்போன தம் மீதான நம்பிக்கையை மீளவும் கட்டியெழுப்பிக் கொள்வதற்கு விடுதலைப்புலிகள் அமைப்புக்குப் பெரும் பக்கபலமாகவே அமையும். மேலும், இலங்கையின் ஜனநாயகவாதம் மென்மேலும் தொடர்ச்சியாக நலிவடைந்து போகுமானால் சர்வதேச சமூகத்தால், மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இன்றைய இலங்கை, றொபட்முகா பேயின் சிம்பாப்வே நாடாக அடையாளப்படுத்தப்படும் பேரபாய நிலைக்கு உட்பட நேரும்.

எவ்வாறோ, பிரிவினைகோரும் தீவிரவாத அமைப்பொன்றுடன் இன்று, இலங்கை அரசு யுத்தம் புரிந்துவருகிறது. விடுதலைப் புலிகள் அமைப்பானது தமிழ் மக்களை அடித்தளமாகக் கொண்டு உருவாகியுள்ளதொரு அமைப்பென்பதால், பலதரப்பட்ட அசௌகரியங்களுக்கு தமிழ் மக்கள் முகம்கொடுக்கவேண்டி நேர்வதைத் தவிர்க்க இயலாது போகலாம். அதேபோன்று, நிலவும் யுத்தச் சூழலின் மத்தியில், நாட்டின் ஜனநாயகவாதச் செயற்பாடுகளுக்கு அமையும் அவகாசம் சிற்சில வரையறைகளுக்கு உள்ளாகவேண்டி நேர்வதையும் தவிர்க்க இயலாது போகலாம். ஆனாலும், யுத்த நிலைப்பாட்டின் மத்தியில்கூட, இந்நாட்டின் தமிழ் பொதுமக்களுக்கு நேரும் அவலம் குறைக்கப்படுவதற்கு அரசு அதிகபட்ச அளவில் முயற்சி மேற்கொள்ள வேண்டியுள்ளது. இலங்கையென்பது தமிழ் மக்களதும் நாடேயாகும். அந்த நாட்டில் அவர்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் அல்ல என்பதை தமிழ் மக்கள் வலுவாக ஏற்றுக்கொள்ளும் விதமாக அரசு நடந்துகொள்ளவேண்டியுள்ளது. அதேபோன்று, இன்று நிலவும் வரையறைகளின் கீழும் கூட, நாட்டின் ஜனநாயகத்தை- ஜனநாயக நிறுவனங்களை அதிகபட்ச அளவில் பலப்படுத்தி மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகச் சுதந்திரம் பேணிக்காக்கப்படுவதற்கு அரசு அரசியல் ரீதியில் அர்ப்பணிப்புச் செய்யவேண்டியுள்ளது. உண்மையில், இவை அனைத்துமே அரசைப் பலப்படுத்தும் முன்னெடுப்புக்களே என்பதோடு இவை சம்பந்தமாக அரசு கையாளும் திறனாற்றல் அற்ற தன்மையின் இலாபம் விடுதலைப் புலிகள் அமைப்பினாலேயே அறுவடை செய்துகொள் ளப்பட வாய்ப்புண்டு என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

### பயணமார்க்கம்

சிறப்பியல்புகள் மிக்க போர்ப் பலத்தால் மட்டும் சில மோதல்களைத் தீர்த்துக்கொள்ள இயலாதென்பதை ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகள் புலப்படுத்தியுள்ளன.

அண்மைய சந்தர்ப்பமொன்றில் வெளிநாட்டுப் பொதுசன ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கருத்து வெளிப்படுத்தியிருந்து இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா, இலங்கையில் நிகழ்ந்து வரும் இந்த மோதல் நீண்டுசெல்லுமொ[ரு] கெரில்லா யுத்தமாக இன்னும் பல தஸாப்தங்களுக்குத் தொடரப் பெரிதும் இடமுள்ளது எனக் குறிப்பிட்டிருந்தார். எனவே, நிரந்தர சமாதானத்துக்கான அடித்தளமொன்றெனில் அது, அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும் விதத்தில் அமையும் காத்திரமான அரசியல் தீர்வேயாகும். ஏறத்தாழ இலங்கையையொத்த இனப்பிரச்சினைச் சிக்கல் நிலவிய வடஅயர்லாந்து எமக்குக் கற்பிக்கும் அனுபவ பாடம் அதுவேயாகும்.

இறுதியாக, சிங்களச் சமுதாயம் ஆழமாகச் சிந்திக்கவேண்டியிருப்பது, தமிழ் மக்களது இதயங்கள், மற்றும் மன உணர்வுகளைக் காயப்படுத்தி கண்ணீர் சிந்தவைத்து ஈட்டிக்கொள்ளப்படும் வெற்றிகள் நீண்டகாலம் நிலைத்துநிற்க முடியுமா என்பதையேயாகும். ★

**தமிழில்: சரா**

# அரிச்சந்திர புராணத்தைப் பார்த்துவிட்டு மயங்கி விழுந்தார் விக்டோரியா மகாராணி

**இன்றும் நினைவில் கொள்ள..... அன்றைய ஞாபகம் .... இங்கே!**

ஒக். 1875

### சேர் முத்துக்குமாரசாமிக்கு கொழும்புத் தமிழர்கள் பாராட்டு விழா



1875ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் சேர் முத்துக்குமாரசாமி சேர் பட்டம் பெற்றமையை முன்னிட்டு பாராட்டு விழா ஒன்றை ஏற்பாடு செய்தனர் கொழும்புத் தமிழர்கள்.

சேர் முத்துக்குமாரசாமி படித்த இலங்கையர்கள், புலமையாளர்கள் (scholar) வரிசையில் முதலிடத்தில் வைத்து மதிக்கப்பட வேண்டியவர் என்று சொன்னால் மிகையாகாது.

சேர் முத்துக்குமாரசாமி பரிஸ்டர் பட்டம் பெற்ற முதலாவது கிறிஸ்தவரல்லாத சட்டத்தரணி. சேர் முத்துக்குமாரசாமிக்கு முன்னர் பரிஸ்டர் பட்டம் பெற்ற அனைவரும் வெள்ளையர் களே. சேர் முத்துக்குமாரசாமிக்கு முன்னர் யூதர்கள் கூட பரிஸ்டர் பட்டம் பெறவில்லை. அந்தவகையில் பரிஸ்டர் பட்டம் பெற்ற முதலாவது ஐரோப்பியரல் லாதவர் சேர் முத்துக்குமார சாமியே. அத்துடன் சேர் பட்டம் பெற்ற முதலாவது ஆசிய நாட்டைச் சேர்ந்தவரும் இவரே.

அரிச்சந்திரபுராணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விக்ரோறியா மகாராணியின் முன்னிலையில் நடித்துக் காட்டியவரும் இவரே. அரிச்சந்திரன் சுடலை காக்கும் காட்சியை மிகவும் தத் ரூபமாக விக்ரோறியா மகாராணியின் முன்னிலையில் நடித்துக் காட்டினார் சேர் முத்துக் குமார சாமி. பிரித்தானிய அரச குடும்பத்தில் பிறந்து உலகின் பெரும்பாலான நாடுகளை ஒரு குடை யின் கீழ் ஆண்ட விக்ரோறியா மகாராணி ஓர் அரசன் சுடலைக் காவலனாகக் கடமை யாற்றிய தைக் கேட்டதும் மயங்கி வீழ்ந்தார். உடனே விக்ரோறியா மகாராணியின் மெய்ப் பாதுகாவலர்கள் சேர் முத்துக்குமார சாமியைக் கைது செய்தனர். மயக்கம் தெளிந்து எழுந்த விக் ரோறியா மகாராணி எங்கே அவர், அந்த நபரை அழைத்து வந்து மிகுதிக் கதையையும் சொல்லச் சொல்லுங்கள் என உத்தரவிட்டார்.

**மொழி பெயர்த்து நடித்து காட்டியவர் சேர் முத்துக்குமாரசாமி**

இவரது தந்தை குமாரசாமி முதலியார் சட்டசபை என பிரித்தானியர் காலத்தில் அழைக்கப்பட்ட பாராளுமன்றத்திற்கு நிகரான அமைப்பில் தமிழர்களின் பிரதிநிதியாக அங்கத்துவம் வகித்தவர். (சட்டசபையில் அங்கம் வகித்த முதல் தமிழ்ப்பிரதிநிதி) இலங்கையின் பலபாகங்களிலும் பல்வேறு உயர்பதவிகளை வகித்த சேர்.முத்துக் குமாரசாமி 1879 ஆம் ஆண்டு காலமானார். சேர் முத்துக்குமாரசாமி பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் பெறுவதையே தனது இலட்சியமாகக் கொண்டு செயற்பட்டு வந்தார். எனினும் அவர[illegible] நிறைவேறவில்லை.

- தாண்டவன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘அ’ பர் ப (ழி/லி) வாங்கல



அத்தாக்குதலைப் புலிகள் தாங்களே செய்தார்கள் என அவர்கள் ஏற்றுக்கொள்கின்றனர் என அர்த்தப்படுத்திவிடவே முடியாது.

இத்தாக்குதலை நடத்திய தற்கொலைக் குண்டுதாரியை ஏவிவிட்டவர்கள் யார், சூத்திரதாரிகளின் நோக்கம் என்ன என்பவையெல்லாம் காலஓட்டத்தில் அம்பலமானால்தான் கண்டு கொள்ளமுடியும்.

தற்கொலை குண்டுத்தாக்குதலை நடத்தியவர் இளைஞர், சற்றுக் கறுப்பானவர், நீலநிறச் சட்டையும், முக்கால் நீள காற்சட்டையும் அணிந்திருந்தார் என்றெல்லாம் சாட்சிகள் கூறுகின்றனர்.

ஜெனரல் ஜானக பெரேராவின் அலுவலகத்தைத் திறக்கும் நிகழ்வு அன்று நடைபெற்று, நன்றியுரை கூறும் இறுதிக் கட்டத்தை அது அடைந்தபோது திடீரென அங்கு தோன்றிய இந்த நபர் உள்ளே தள்ளாடிக் கொண்டு வந்தாராம். அதனால், அவர் போதையில் இருக்கிறார் அல்லது மனநிலை சுகமில்லாதவராக இருக்கலாம் என்று அங்கிருந்தவர்கள் எண்ணியிருக்கின்றார்கள்.

ஆனால், அவர் தள்ளாடி நடந்தமைக்கு வேறு காரணம் இப்போது கூறப்படுகின்றது.

குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கு சற்று முன்னர் மோட்டார் சைக்கிளில் ஒருவர் இந்த நபரை ஏற்றி வந்து, புதிய அலுவலகம் திறப்பு விழா இடம் பெறும்பகுதியில் இறக்கி விட்டுச் சென்றிருக்கிறார்.

அங்கிருந்து நிகழ்ச்சியின் மையப் பகுதிக்கு சிறிய தள்ளாட்டத்துடன்தான் இந்த நபர் வந்திருக்கிறார். அதற்குக் காரணம் அவர் பொருத்தியிருந்த தற்கொலை தாக்குதல் அங்கியின் அதீத நிறை தான் என்று தற்போது கருதப்படுகிறது.

# யாரின் கைவரிசை?

## வி.சிவராம்

கடந்த திங்களன்று அநுராதபுரம் பழைய பஸ் நிலையத்துக்கு அருகில் நிகழ்ந்த பெரும் குண்டு வெடிப்பின் அதிர்ச்சி அலைகள் தென்னிலங்கையை இன்னும் ஆட்டிப் படைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. அவை அடங்கிவிடவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இலங்கை இராணுவத்தின் யுத்த நடவடிக்கைகளில் ‘சாதனை படைத்தவர்’ என்று



தென்னிலங்கையில் மெச்சப்படும் ஜெனரல் ஜானக பெரேராவும் அவரது துணைவியாரும் மற்றும் அவர்களது ஆதரவாளர்களுமாக 29 பேர் கூண்டோடு பலியாகவும், எண்பது பேர் வரை படுகாயமடையவும் காரணமான அந்தக் குண்டு வெடிப்பினால் ஏற்பட்டுள்ள அரசியல் அதிர்ச்சி அலைகள் அடங்க நிச்சயம் நாள்கள் - வாரங்கள் - பிடிக்கும்.

புலிகளுக்கு எதிரான யுத்த நடவடிக்கைகளில் ஜெனரல் ஜானக பெரேராவின் ‘தீரம்’ குறித்து அதிகம் பேசும் தென்னிலங்கை மக்கள் மற்றொரு சம்பவத்தை அதிகம் மறந்து விட்டனர் போலும்.

எண்பதுகளின் கடைசியில் தென்னிலங்கையில் ஜே.வி.பி. தீவிரவாதிகள் ‘பயங்கரவாதத்தை’ கட்டவிழ்த்து விட்டபோது, அச்சமயம் அந்த நடவடிக்கைகளை மறைமுகமாக வழிநடத்திய ஜே.வி.பிதலைவர் றோஹண விஜேவீரவை மடக்கி கைது செய்த இராணுவ அதிகாரி ஜானக பெரேரா தான். அப்போது அவர் பிரிகேடியர் தரத்தில் இருந்தார்.

கைது செய்யப்பட்ட றோஹண விஜேவீர பின்னர் மர்மமான முறையில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

‘‘நான் அவரைக் கைது செய்து இராணுவத் தலைமையகத்திடம் ஒப்படைத்தேன். அதற்குப் பின்னர் இடம்பெற்ற சம்பவங்களுக்கும் எனக்கும் தொடர்பு ஏதுமில்லை’’ - என்று ஜானக பெரேரா பின்னர் கூறி வந்ததில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கின்றது என்பது தெரியவில்லை.

ஆனால், 1995 - 96 இல் யாழ்.குடாநாட்டை அரச படைகள் மீளக் கைப்பற்றியபோது ஜெனரல் ஜானக பெரேராவின் கட்டுப்பாட்டில் இயங்கிய 51 ஆவது டிவிஷன் படையணியின் ஆதிக்கப் பகுதியில் அரங்கேறிய - பல நூற்றுக்கணக்கான - அப்பாவிகளின் கைதுகள், பின்னர் அவர்கள் மர்மமான முறையில் காணாமற் போனமை, கைதடி மற்றும் செம்மணிப் பெருவெளி களில் அவர்கள் புதைக்கப்பட்டனர் என்று வெளியான அதிர்ச்சித் தகவல்கள் போன்றவற்றை அறிந்துள்ள தமிழ் மக்களுக்கு றோஹண விஜேவீர விவகாரத்தில் ஜானக பெரேராவின் பங்களிப்புக் குறித்து நிச்சயம் ஆழ்ந்த சந்தேகம் நெருடும் என்பது உறுதி.

ஜானக பெரேராவையும் அவரது மனைவியையும் ஏனைய 29 பேரையும் படுகொலை செய்த குண்டு வெடிப்பை நடத்தியவர் ஒரு தற்கொலைக் குண்டுதாரி என்பதில் சந்தேகம் இல்லை என்பது ஓரளவு தெளிவாகி விட்ட விடயம்.

இச்சம்பவத்தை நேரில் கண்ட பலரும் அளித்துள்ள வாக்கு மூலங்க ளும், தகவல்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன.

ஆனால், அந்தத் தற் கொலைத் தாக்குதலுக்கு காரணம் - சூத்திரதாரி - யார் என்பதுதான் இப்போது தென்னிலங்கை அரசியலில் சர்ச்சையைக் கிளப்பியிருக்கும் சூடான அம்சமாகும்.

வழமையாக - இலங்கையில் - தற்கொலைத் தாக்குதல் என்றதும் அந்தப் பழி பாவம், கேட்டுக் கேள்வியின்றி விடுதலைப் புலிகள் இயக்கம் மீதுதான் விழும்.

‘உயிராயுதம்’ என்ற அந்தக் கொள்கைக் கோட்பாட்டை வகுத்து, உலகுக்கு திறம் பட நடைமுறைப்படுத்திக் காட்டி வருபவர்களே புலிகள்தான்.

ஆனால், ஜானக பெரேரா விடயத்தில் சந்தேகம் பல முனைகளில் செல்கிறது.

மோசமான பல இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்ட கடும்போக்கு இராணுவ அதிகாரி என்றாலும், இராணுவப் பதவியிலிருந்து அவர் ஓய்வுபெற்று ஏழாண்டுகள் கடந்துவிட்டன. இவ்வளவு காலம் காத்திருந்து இப்போது புலிகள் பழி வாங்குவார்களா என்ற கேள்வி எழுகிறது.

என்றாலும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவில் திடீர் நட்சத்திரமாக உயர்ந்து வரும் ஜானக பெரேரா, எதிர்காலத்தில் ஐ.தே.க. தலைமை அமைக்கக் கூடிய உத்தேச அரசில் மிகுந்த அதிகாரத்துடன் கூடிய பாதுகாப்பு அமைச்சராக மிளிரக் கூடியவர் எனக் கருதப்பட்டவர். இராணுவக் கடும் போக்காளர் ஒருவர் அப்பதவிக்கு வரு வதைத் தடுக்கும் முற்கூட்டிய திட்டத்தோடு இப்போதைய சந்தர்ப்பத்தைப் புலிகள் பயன்படுத்தியிருக்கக் கூடும் என்று சிலர் கூறுகின்றனர்.

1999 ஜனாதிபதித் தேர்தல் சமயமும் எதிரணித் தரப்பில் இராணுவ விடயங்களில் தேர்ந்தவராக - மெச்சப்பட்டவராக - ஐ.தே.கவில் உயர்ந்து வந்த ஜெனரல் லக்கி அல்கம இவ்வாறு இலக்கு வைத்துக் கொன்றொழிக்கப்பட்டமை இங்கு கவனிக்கத்தக்கது.

ஐ.தே.கட்சிக்குள் பாதுகாப்புத்துறை சம்பந்தமான விடயங்களில் தேர்ந்த ஒருவராக மெச்சப்பட்டு வருகையிலேயே ஜானக பெரேராவும் கொல்லப்பட்டிருக்கின்றார்.

அதுவும், இப்போதைய யுத்த நிலையை ஒட்டி அரசுத் தரப்பு வெளியிட்டு வரும் செய்திகள், தகவல்கள், அறிவிப்புகள் போன்றவை தொடர்பான உண்மைத் தன்மையை அம்பலப்படுத்தும் நோக்குடன், ஐ.தே.கட்சி ‘பாதுகாப்புத் தகவல் தொடர்பான நிழல் மையம்’ ஒன்றை ஆரம்பிக்க இருக்கையில் -

அந்த அலுவலகத்தை செயற்படுத்தும் பொறுப்பை ஏற்று ஐ.தே.கவின் பாதுகாப்புத்துறைப் பேச்சாளராக ஜெனரல் ஜானக பெரேரா அறிவிக்கப்படவிருக்கையில் -

அதற்கு சரியாக ஒரு வாரத்துக்கு முன் னர் அவரைப் படுகொலை செய்யும் தாக்கு தல் இடம்பெற்றிருப்பது பல்வேறு சந்தேகங்களையும் ஊகங்களையும் கிளப்பியிருக்கின்றது.

அது மட்டுமல்ல. கடந்த திங்களன்று அநுராதபுரத்தில் இந்தத்தாக்குதல் நடத்தப்படுவதற்கு சரி யாக இரண்டு நாள்களுக்கு முன் னர் அநுராதபுரத்துக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானும், இராணுவத்தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவும் வந்து சென்றிருக்கின்ற மையும் இப்படு கொலைத் தாக் குதலின் பின்னணி குறித்து பல கூட்டல், கழித்தல் கணக்குகளைப் போடப் பண்[illegible].

இந்த இ[illegible] வருகையை ஒட்டி அநுராத புரம் நகரம் துடைத்து வழித்து சோதனை செய்யப்பட்டு ‘துப் புரவு’ப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. அப்படியா னால் அடுத்த இரண்டு நாள் களுக்குள் தற்கொலைக் குண்டு தாரி, இத்தகைய வலுவான குண்டுடன் அங்கு தோன்று வது எங்ஙனம் சாத்தியமா யிற்று என்ற கேள்வி தென்னிலங்கையில் இயல்பாகவே எழுகின்றது.

ஆளும் தரப்புக்கு எதிராகப் பெருஞ் சவாலாகத் தோன்றி தீவிர மக்கள் செல்வாக்குடன் திடீரென வளர்ந்து வந்த ஓர் அரசியல் பிரமுகர் இத்தாக் குதலில் இலக்கு வைக்கப்பட்டமையும் பலத்த சந்தேகத்தைத் தோற்றுவிக்காமல் இல்லை.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் ஆழ ஊடுருவித் தாக்குதல் நடத்தும் படையணியை அரசத் தரப்பு இப்போது தாராளமாகக் கொண்டிருப்பதும் -

இந்த நடவடிக்கைக்காகப் புலிகளின் பிரதேசத்துக்குள் துணிச்சலாக ஊடுருவும்




நபர்கள், ஒரு வகையில் தங்களின் உயிரைப் பணயம் வைக்கும் தற்கொலைத் தாக்குதலாளிக்கு ஒத்த வகையில் செயற்படுபவர் களே என்பதும் கவனிக்கத்தக்கவை.

ஆகவே, தற்கொலைத் தாக்குதலுக்கான நபர்கள் விடுதலைப் புலிகளிடம் மட் டுமே உள்ளனர் என்றும் -

அரசுத் தரப்பிடமோ அல்லது அதனுடன் சேர்ந்து இயங்கும் துணைப்படைகள் மற்றும் ஒட்டுக் குழுக்களிடமோ இல்லை என்றும் -

கருதி விடமுடியாது என்பதும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகின்றது.

சரி. இந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலைப் புலிகள் நடத்தியிராவிட்டால் இதை ஒட்டித் தம் மீது விழும் குற்றச்சாட்டைப் புலிகள் இதுவரை மறுக்கவேயில்லை என்று குறிப்பிட்டு, ஆகவே இது புலிகளின் வேலைதான் என்று கூறுவோரும் உளர்.

ஆனால், இத்தகைய எந்தத் தாக்குதல்கள், சம்பவங்கள் குறித்தும் புலிகள் வழமையாக அலட்டிக் கொள்வதில்லை என்பதையும் -

தென்னிலங்கையின் அரசியல் சலசலப்புக்குள் தேவையின்றித் தலையை நீட்டித் தங்கள் நேரத்தை அவர்கள் வீணடிப்பதில்லை என்பதையும் -

கடந்த காலத்தில் நேரில் பார்த்து, கண்டு, கேட்டு அறிந்து கொண்டவர்கள், புலிகளின் இந்த மௌனத்தின் அர்த்தத்தை இலகுவாக உணர்ந்து கொள்வர்.

இந்தத் தாக்குதல் தொடர்பான குற்றச் [illegible] பக்கமும் நீட்டப்பட்டி[illegible] அதனுடன் தமக்குள்ள தொடர்பை புலிகள் மறுக்காதிருப்பதன் காரணத்தை,

இத்தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட தற்கொலை அங்கியில் ஒரு கிலோ முதல் இரு கிலோ வரையான - அதியுயர் சக்தி மிக்க - வெடிமருந்து இருந்திருக்கலாம் எனப் பகுப்பாய்வாளர்கள் பூர்வாங்கத் தகவல் வெளியிட்டிருக்கின்றார்கள்.

வெடிமருந்து அவ்வளவுதான் என்றாலும் தாக்குதல் அங்கியில் அவற்றுடன் கலக்கப்பட்டிருந்த உருக்குச் சின்னங்கள், சிதறல்களின் எடை பல கிலோக்களாக இருக்கும் என்பது அக்குண்டு வெடிப்பு ஏற்படுத்திய நாசத்திலிருந்து மதிப்பிடக் கூடியதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அந்தளவு பாரத்தைத் தாங்கிக் கொண்டு நடக்க முடியாத காரணத்தினாலேயே தற்கொலைத் தாக்குதலாளி தடுமாறித் தள்ளாடியிடுக்கிறார் எனக் கருதப்படுகின்றது.

அந்தநபரைச் சரியாக அடையாளம் காணாதவரை இத்தாக்குதலின் பின்னணியில் செயற்பட்ட சூத்திரதாரி யார் என்பதைக் கண்டறியும் விடயத்திலும் சந்தேகமும், வதந்திகளும், பல்வேறு ஊகங்களும் தொடரவே செய்யும்.

அந்நபர் பொருத்தியிருந்த தற்கொலை அங்கியின் வீரியம் காரணமாக, அவரது இரு கால் பகுதிகளைத் தவிர உடலின் வேறு எந்த அவயவமும் பார்க்கக் கூடியளவில் மிஞ்சவில்லை என்று கூறப்படுகின்றது. இரண்டு கால்களை மட்டும் வைத்துக் கொண்டு அவரை அடையாளம் காண்பது எப்படி?

அந்நபரை உண்மையில் அடையாளம் காணவேண்டும் என்ற திடசித்தம் - விருப்பம் - ஈடுபாடு - அரசுத்தலைமைக்கு இருக்குமா என்பது சந்தேகத்துக்குரியதே. இத்தகைய சந்தேகம் எழுவதன் பின்னணிவாசகர்கள் புரிந்துகொள்ளத்தக்கதே. உண்மைச் சூத்திரதாரி யார் என்பதில்தான் இந்த திடசித்தம் அல்லது தீர்மானம் தங்கியிருக்கும்.

நேர்மையான விசாரணை தம்மை அடையாளம் காட்டிவிடும் என்று ஆட்சித் தரப்பினர் கருதுவார்களானால் விசாரணை முடங்கிப் போகும். தற்கொலைத் தாக்குதல் நபர் அடையாளம் காணப்படாமல் போவார்.

அப்படியில்லை, இத்தாக்குதலை நடத்தியோர் அரசுத்தரப்புடன் தொடர்புபடாத சக்தி என்றாலும், அந்தப் பின்னணியைத் துப்புத் துலக்கிக் கண்டறிவதும் கஷ்டமான காரியம்தான்.

★ ★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தான்குடி தாக்குதல்; எதற்கான சதி?

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வன்முறைகள் அப்பகுதி தமிழ் - முஸ்லிம் நல்லுறவில் பாரிய விரிசலை ஏற்படுத்தலாம் என்கின்ற அச்சமும் கவலையும் எழுந்துள்ளன.

கிழக்கில் தமிழ் - முஸ்லிம் இனக்கலவரமொன்றுக்குத் தூபமிடும் வகையில் திட்டமிட்டே சில சதி நடவடிக்கைகள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன என்று அரசியல் பிரமுகர்கள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

### கிழக்கு மீட்பும் நெருக்குவாரங்களும்

கிழக்கு மாகாணம் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்டு - அங்கு முழுமையான அமைதிச்சூழல் ஏற்பட்டிருப்பதாக அரசு தரப்பினர் பறைசாற்றி வருகின்ற சூழ்நிலையிலேயே - அப்பகுதி முஸ்லிம்கள், சில ஆயுத சக்திகளினால் நெருக்குவாரங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர்.



கிழக்கு முழுமையாக மீட்கப்பட்டதாகக் கூறப்படும் கடந்த ஒரு வருட காலப் பகுதிக்குள் ஐம்பதுக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் அங்கு அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

அத்துடன், முஸ்லிம்களின் பொருளாதார வளங்கள் நிறையவே அழிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்குச் சொந்தமான வாகனங்கள் பல கடத்தப்பட்டுள்ளன. முஸ்லிம்களால் சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியவில்லை. குறிப்பாக விவசாயம் மற்றும் கடற்றொழில் துறைகளில் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

முஸ்லிம்கள் மீதான படுகொலைகள் மற்றும் வன்முறைகளும் நெருக்குவாரங்களும் இன்னும் குறைந்தபாடில்லை. அவை காலத்துக்குக் காலம் பல்வேறு விதங்களில் விஸ்வரூபம் எடுத்துக்கொண்டே இருக்கின்றன.

### காத்தான்குடி தாக்குதல்

முஸ்லிம்கள் மீதான இத்தகைய கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொள்கின்ற சக்திகள் யார் என்ற கேள்விக்கு இதுவரை விடை கிடையாது. எல்லாமே தீய சக்திகளின் வேலைதான் என்று அரசியல்வாதிகள் சாதாரணமாகச் சொல்லி விட்டு தம் பொறுப்பிலிருந்து நீங்கி விடுகின்றனர்.

களத்திலுள்ள ஆயுதக் குழுக்களும் அவ்வாறுதான் சொல்கின்றன. அப்படியே சூத்திரதாரிகளும் தப்பிக் கொள்கின்றனர். அதனால் சம்பவங்களும் தொடர்ந்து செல்கின்றன.

இத்தகைய ஒரு சம்பவம்தான் சமீபத்தில் காத்தான்குடி மெத்தைப்பள்ளிவாசலுக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலாகும்.

கடந்த 29 ஆம் திகதி முஸ்லிம்கள் புனித நோன்பைத் திறப்பதற்காக அப் பள்ளிவாசலில் ஒன்று கூடியிருந்த சமயத்திலேயே குண்டு வெடிக்கச் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் இருபதுக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் காயமடைந்தனர்.

கருணா அல்லது பிள்ளையான் குழுவினரே இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என அப்பகுதி முஸ்லிம்கள் நம்புகின்றனர். அதற்கு சில பலமான ஆதாரங்களையும் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

எனினும், கருணா தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அதனை மறுத்துள்ளது. தமது அமைப்பினருக்கும் அக்குண்டுத் தாக்குதலுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது எனவும் அது தமிழ் - முஸ்லிம் நல்லுறவைச் சீர்குலைப்பதற்காக தீயசக்திகளால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகவே இருக்கும் எனவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

### பிள்ளையானுக்கு எதிரான சதி?

அவ்வமைப்பின் பிரதித் தலைவரும் கிழக்கு மாகாண முதலமைச்சருமான பிள்ளையான் இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்துள்ளார். இதன் சூத்திரதாரிகள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முதலமைச்சர் பிள்ளையான் உறுதியளித்துள்ளார். ''முதலமைச்சர் பிள்ளையான் தலைமையிலான கிழக்கு மாகாண ஆட்சியை ஆட்டம் காண வைப்பதற்காக சில தீயசக்திகளே இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம்'' என மாகாண அமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

''தமிழ் - முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்துவதன் மூலம் கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகளை இலகுவாக சீர்குலைக்க முடியும் என்ற இலக்கில் திட்டமிட்டே இக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது'' என்று அமைச்சர் ஹிஸ்புல்லா மேலும் கூறியுள்ளார்.

இத்தகைய கருத்தை அவர் வெளியிட்டிருப்பதன் மூலம் காத்தான்குடி குண்டுத் தாக்குதலுக்கும் பிள்ளையான் குழுவினருக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்பதை அமைச்சர் ஹிஸ்புல்லா உறுதிப்படுத்தியிருப்பதோடு முதலமைச்சர் பிள்ளையானுக்கு எதிரான சக்திகளே அதனைச் செய்திருக்கின்றன என்பதும் அவரது வாதமாகும்.

கருணா - பிள்ளையான் முரண்பாடு காரணமாக கருணா குழுவினரே முதலமைச்சர் பிள்ளையானுக்கு எதிராக - அவரை சிக்கலில் மாட்டிவிட வேண்டும் என்பதற்காக இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கலாம் என்ற ஊகம் சிலரால் முன்வைக்கப்பட்டிருக்கும் நிலையில் அமைச்சர் ஹிஸ்புல்லாவின் கருத்து அதனை

அஸ்லம் எஸ் மௌலானா

உறுதிப்படுத்துவது போல் அமைந்திருக்கிறது.

### யார் சூத்திரதாரிகள்?

உண்மையில் மிகவும் கோழைத்தனமானதும் காட்டுமிராண்டித் தனமானதுமான இத்தகைய ஈனச் செயல்கள் எவரால் மேற்கொள்ளப்பட்டாலும் அவை மிகவும் கண்டிக்கத்தக்கவையே.


மேலும் அதன் சூத்திரதாரிகள் இனங்காணப்பட்டு - சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். இல்லாவிட்டால் அவை தொடரவே செய்யும். அதுதான் இன்று நடந்தும் கொண்டிருக்கிறது.

சென்ற றமழான் நோன்பு காலத்தில் கூட காத்தான்குடி, ஏறாவூர், மூதூர் போன்ற இடங்களில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பொத்துவில், வாழைச்சேனை போன்ற இடங்களில் முஸ்லிம்களின் அன்றாட ஜீவனோபாய தொழில்களுக்கு இடையூறு விளைவிக்கப் படுவதோடு பாரிய அச்சுறுத்தல்களும் இருந்து வருகின்றன.

ஆனால், எல்லாவற்றுக்கும் புலிகள் என்றும், கருணா குழு, பிள்ளையான் குழு, தீய சக்திகள் என்றும் சொல்லிக்கொண்டு முஸ் லிம் தலைமைகள் காலம்கடத்தி வருகின்றன.

### கருணா வாக்குமூலம்

கடந்த 29 ஆம் திகதி காத்தான்குடி மெத்தைப்பள்ளிவாசலுக்கு முன்பாக நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல், 1990 ஆம் ஆண்டு அதே பள்ளிவாசலுக்குள் ஆயுததாரிகள் புகுந்து தாக்கியதில் இறைவனைத் தொழுதுகொண்டிருந்த அப்பாவி முஸ்லிம்கள் இருநூறுக்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை ஞாபகமூட்டுகின்றது.



அத்தாக்குதலைத் தாமே தலைமை தாங்கி நடத்தியதாகவும், தலைவர் பிரபாவின் உத்தரவின் பேரிலேயே அத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகவும் சில மாதங்களுக்கு முன் த. ம.வ.பு. அமைப்பின் தலைவர் கருணா அம்மான் லண்டனில் வைத்து வாக்குமூலம் கொடுத்திருந்தார்.

ஆகையினால் அவ்வப்போதைய சம்பவங்களுக்குத் தாம் பொறுப்பல்ல என்று கூறித் தப்பிக்கொள்கின்ற ஆயுதக் குழுக்கள், இனியாவது தமது நம்பகத்தன்மையை வெளிப்படுத்த முன்வரவேண்டும்.

பிள்ளையான் முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் நிகழ்ந்த தமிழ் - முஸ்லிம் கலவரங்கள், அவரது நம்பிக்கையான உத்தரவாதங்களையும், நடவடிக்கைகளையும் தொடர்ந்து ஓரளவு முடிவுக்கு வந்து, சுமூக நிலை ஏற்பட்டது எனலாம்.

### அரச பணி

எனினும் அங்கும் இங்குமாக முஸ்லிம்கள் மீதான வன்முறைகளும் அத்துமீறல்களும் தொடர்ந்தே செல்கின்றன. இந்நிலையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீண்டும் தலைமையேற்று நீடத்தும் கருணா அம்மான், நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவியேற்றிருக்கும் நிலையில் முஸ்லிம்களின் அபிலாஷைகளையும், உரிமைகளையும் மதித்து அவர்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தையும், அதற்கான உரிய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முன்வர வேண்டும்.

அதுவே தமிழ் - முஸ்லிம் உறவுக்கு வலுச் சேர்க்கும். அதுவே இரு இனங்களின் விடிவுக்கும் உரமாக அமையும்! அது அவசரமாக மேற்கொள்ளப் பட வேண்டிய பணியாகும் என்பதைப் புரிந்து கொள்வோமாக. *

# ஆட்டம் காண்கிறதா ஐ.ரி. சாம்ராஜ்யம்?



தங்கச் சுரங்கம்! பொன்முட்டையிடும் வாத்து! அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம்! தகவல் தொழில் நுட்பம் (ஐ.ரி.) என்ற அந்த வார்த்தைக்கு இதுநாள் வரை இப்படித்தான் அர்த்தங்களை இந்தியாவில் சொல்லித் திரிந்தார்கள். இப்போது அமெரிக்காவின் நான்கு மிக முக்கிய கம்பனிகள் வீழ்ந்து போனதால், ஐ.ரி. என்ற அந்தத் தங்கச் சுரங்கம் தகரச் சுரங்கமாக மாறும் ஆபத்து உருவாகியிருக்கிறது. இதன் அடுத்த அத்தியாயம் என்ன என்ற அச்சத்தில் இருக்கிறார்கள் ஐ.ரி.காரர்கள்.

ஆரம்பமான வேகத்திலேயே அசுர வளர்ச்சி பெற்ற தொழில் ஐ.ரி. அமெரிக்க வங்கிப் பணிகளுக்காக இந்தியாவில் உள்ள விப்ரோ, இன்போசிஸ், ஐ.பி.எம்., டாடா கன்சல்டன்சி சேர்வீஸ் போன்ற ஐ.ரி. நிறுவனங்கள் இளைஞர்களைத் தேர்வுசெய்து அனுப்பிவைத்தன. இந்த இளைஞர்களுக்கு கரன்ஸி கடவுளின் கடாட்சத்தால் மாதந்தோறும் லட்சக்கணக்கில் சம்பளம் கொட்டியது. ஐ.ரி. கம்பனிகளும் கொழிக்க ஆரம்பித்தன. இதுபோக, மேலைநாட்டு நிறுவனங்களின் கணினி தொடர்பான வேலைகளை 'அவுட்சோர்சிங்' என்ற முறையில் இந்தியாவிலேயே மேற்கொள்ளும் பணியும் வளர ஆரம்பித்தது. ஐ.ரி.தொழிலில் கிடைக்கும் வருமானத்துக்கு ஆசைப்பட்டு ஐ.ஏ.எஸ். படித்தவர்கள் கூட வேலையை உதறிவிட்டு ஐ.ரி. பக்கம் ஓடும் அதிசயமும் நடந்தது.

இந்தநிலையில் தான் திடீர் திருப்பம். அமெரிக்காவின் புகழ்பெற்ற லேமென் பிரதர்ஸ் நிறுவனம், வாஷிங்டன் மியூச்சவல், உலகின் இரண்டாவது பெரியவங்கியான மெர்லின்ச் போன்ற முன்னணி நிறுவனங்கள் சடசடவென சரிந்து திவாலாகின. டொலர் மதிப்பும் அதற்கு நிகரான ரூபாயின் மதிப்பும் குறைய ஆரம்பித்தன. போதாக்குறைக்கு அமெரிக்க அதிபர் தேர்தல் இவ்வாறு வர இருப்பதால் புதிதாக ஐ.ரி.க்கு ஆள் எடுக்கும் வேலையை நிறுவனங்கள் ஒத்தி வைக்க ஆரம்பித்துள்ளன. அனுபவம் மிக்க ஊழியர்களை வைத்திருந்தால் அதிக சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதற்காக அவர்களை வீட்டுக்கு அனுப்புவது, செலவைக் குறைப்பது, சம்பளத்தைக் குறைப்பது எனப் பல அதிரடிகள் ஐ.ரி. நிறுவனங்களில் அரங்கேற ஆரம்பித்து விட்டன.

இதுகுறித்து அண்ணா பல்கலைக் கழக பேராசிரியர் ஒருவர் தெரிவிக்கும்போது, ''அமெரிக்கப் பொருளாதாரத்தில் பெரும்பங்கு வகித்த நான்கு நிறுவனங்கள் திவாலானதால், டொலருக்கு நிகரான யூரோ, பவுண்ட், ரூபாய் ஆகியவற்றை இங்கு மாற்றும்போது அவற்றின் மதிப்பும் குறைகின்றது. இந்திய ஐ.ரி நிறுவனங்களின் வருமானத்தின் பெரும்பகுதி அமெரிக்காவிலிருந்துதான் வருகிறது. நியூயோர்க் பங்குச் சந்தையில் இன்போசிஸ், சத்யம் கம்ப்யூட்டர்ஸ், விப்ரோ நிறுவனங்களின் பங்குகள் இப்போது அதல பாதாளத்திற்குப் போய்விட்டன. இதனால் சிக்கலைச் சீர்செய்ய ஊழியர்களை ஆட்குறைப்புச் செய்யும் வேலை நடக்கிறது. சத்யம் நிறுவனம் 50 ஆயிரம் பேரையும், டாடா கன்சல்டன்சி நிறுவனம் 500 பேரையும், ஐ.பி.எம். நிறுவனம் 700 இக்கும் மேற்பட்டவர்களையும் பணிநீக்கம் செய்து விட்டன. அதேபோல், ஹெச்.சி.எல், இன்போசிஸ் நிறுவனங்கள் எதிர் வரும் ஆறு மாதங்களில் ஏராளமான ஊழியர்களை வீட்டுக்கு அனுப்ப உள்ளன'' என்றார். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலையகத்தின் முன்னணி எழுத்தாளர்களுள் பெரிதும் பேசப்படுவோரில் தெளிவத்தை ஜோசப்பும் ஒருவர். ஈழத்தில் வெளியான பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இவரது சிறுகதைகள் வெளியாகியுள்ளன. அவற்றில் பல தரமான சிறுகதைகளென பாராட்டுப் பெற்றவை. இவரது முதலாவது சிறுகதை தமிழகசஞ்சிகையான 'உமா'வில் வெளிவந்தது. அறுபதுகளுக்கு முன்னரே எழுதத் தொடங்கியவர்.

பொட்டு, பந்து, பாவசங்கீர்த்தனம் ஆகிய இவரது சிறுகதைகள் பலரது பாராட்டையும் பெற்றவை. பல நாவல்களையும் படைத்துள்ளார்.

மலையகச் சிறுகதைகள், உழைக்கப் பிறந்தவர்கள் என்ற தலைப்புக்களில் இரு சிறுகதைத் தொகுதிகளைத் தொகுத்தளித்தவர் இவரே. சாகித்திய விருதுகள் பெற்ற பெருமைக்கும் 2000 ஆம் ஆண்டுக்கான சம்பந்தன் விருது பெற்ற பெருமைக்கும் உருத்தாளி.

மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் தலைவராகச் செயற்பட்டுள்ளார். ******


# கூனல்

அந்த நாலு மாடிக் கட்டடம் நகைத்துக் கொண்டது.

அதற்குத்தான் எத்தனை அனுபவம், ஆயாசம், பாடம், படிப்பினை..........!.

ஒன்று, இரண்டு, மூன்று என்று லொறிக்குப்பின் லொறியாய் வந்திறங்கிய கொழுந்துச் சாக்குகள் நிறுக்கப்பட்டு, ஊஞ்சலாடிய வண்ணம் மேல் மாடிக் கேறுகின்றன- வாட்டத்தட்டுக்களை நோக்கி.

படங்குத் தட்டுக்களிலே பரப்பப்பட்டிருந்த வாடிய கொழுந்து வழித்துக் கொட்டப்படுகின்றது கைமட்டையால். நிறுத்து மேலேறும்



பச்சைக் கொழுந்து வாட்டத் தட்டுக்களில் பரப்பப்படுகின்றது.

கிரிக்கெட் மட்டைபோன்ற கைமட்டையால், படங்குத் தட்டுக்களில் இடைவெளியில் கைநீண்டமட்டும் உள்நீண்டு கொழுந்து பரப்பும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றனர் மெத்தையாள்கள். குவியல் குவியலாய் கிடக்கும் தேயிலைத் தளிர்களை அவர்கள் தட்டிவிடும் வேகமும், இலை மேல் இலை கிடக்காமலும் இடைவெளி விழாமலும் பரப்பிவிடும் லாவகமும் மூக்கின்மேல் விரல் வைக்கத் தோன்றும்.

அடுக்கடுக்காய் இருக்கும் படங்குத் தட்டுகளின் இருண்ட வெளிப்பாதை யில், 'கென்வாஸ்' சப்பாத்து எழுப்பும் மெல்லொலியுடன், பச்சிலைப் பரவுதலை நோட்டமிட்டவாறு வந்து கொண்டிருந்தார் இரண்டாவது. பெரிய டீமேக்கரய்யாவுக்கு அடுத்தவர் அவர்.

ஐயாவைக் கண்டதும் ஆள்கள் ஓடி ஆடி வேலைசெய்தனர். வேலையின் வேகம் அதேதானென்றாலும் அவருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையால் ஏற்பட்ட பரபரப்பின் ஆட்டமும் ஓட்டமும்தான் அது.

நடைபாதையின் குறுகிய இடைவெளியில் குவிந்திருந்த பசுந்தளிர்களை ஒருவன் ஒதுக்கி வைத்தான். பாதைக்கென ஒதுக்கப்பட்ட அந்த இடத்தில் கொழுந்தைக் குவித்து வைத்தால் மிதிபடுமே என்று ஐயா கோபிப்பார் என்பது அவனுக்குத் தெரியும்; என்றாலும் அதை ஒதுக்கிவைக்க வேண்டும் என்ற பிரக்ஞை எழ ஐயா வரவேண் டியிருக்கிறது.

இரண்டாவதின் விரலிடுக்கில் ஒரு வாடிய கொழுந்து. விரல்கள் அதை நெருடி, நிமிண்டிப் பார்த்துக் கொண் டிருக்கின்றன. இலை, தண்டு, குருத்து எல்லாம் துவள்கின்றன.

நல்ல வாட்டம்!

மேல்தட்டு இலை அது. கைதேர்ந்த டீமேக்கர் என்ற சாமர்த்தியமே அதில் தான் இருக்கிறது - வாட்டத்தில் தளிரை வாடவிடும் திறமையில்!

தட்டுக்களைச் சுற்றிச் சுற்றி ஆள்களுடன் தானும் இலைகளைத் தட்டிப் பரப்பிக்கொண்டும், இடது கையால் முற்றல் இலைகளைப் பொறுக்கிக் கொண்டும் இருந்தவர் 'காற்றாடியைப் போடு, இலையில் ஈரம் கூட' என்றார்.

'ஓ...ம்ம்ம்ம்.........' என்று ஒலி பெருக்கிக் கொண்டது அந்த ஆளுயரக் காற்றாடி.

வெதுமையான காற்று உணரும்படி வீசுகின்றது. பரப்பப்பட்டுள்ள இளம் தளிர்கள் சிலிர்த்தசைகின்றன.

இலை வாட்டுவதற்குப் பயன்படாமல், நடைபாதை நெடுகப் பாய்ந்தோடி மறையும் உஷ்ணக்காற்றையும் மறித்து தட்டுகளுக்குள் செலுத்த கூரையிலி ருந்து தள மட்டத்துக்கு இடைக்கிடை தொங்கும் படங்குத்திரைகள் இறக்கி விடப்படுகின்றன.

லேசாக வாடும் இலைகளில் இருந்து வரும் அந்த போதைதரும் நறுமணத்தில் மனதை நெகிழ விட்டபடி ஜன்னலண்டை நின்றார் - நிற்பதுபோல் நடந்தார்.

ஆளுயரம் நீண்ட ஜன்னல்கள் அரைவாசித் தோட்டத்தை அப்படியே காட்டின.

குயவன் வீட்டுக் கொட்டிலின் பானைக் குவியலாய்த் தோற்றும் மலைக்குன்றுகள் சிறிது, பெரிதாய்-

உடுத்திருக்கும் பச்சைச் சேலையின் ஜரிகை ஓரமாய் மலையிடுக்குகளில் நெளிந்தொடியும் அருவிக் கோடுகள் மறைந்தும், தெரிந்தும்-

பாம்புப் படமாய் பளபளத்து மின்னி அசையும் அரச மரத்தின் இலைக் கூட் டம்-

கொழுந்து மூடைகளை இறக்கிவிட்டு விரைந்தோடி மறையும் வெற்று லொறிகளின் சிவப்புக் கூரை-

இஸ்டோர் லயத்துச் சண்டை; சண்டையை ரசிக்கும் கும்பல்; வெளியே நடக்கும் ஓரிரு தொழிலாளர்கள்; கார்ட்டூன் சித்திரங்களாய்-

விசிறிய நேரத்தில் ஒரு விநாடி விழி ஜீரணித்த அத்தனையும் அமிழ்கின்றன.

அய்யா மாடிப்படி இறங்குகின்றார். அறைப்பறைக்குள் அடிவைக்கிறார். அங்கே பெரியவர் இருப்பது தெரிகின் றது. சின்னவர் அங்கு மேற்பார்வையிடத் தேவையில்லை. இருந்தும் அறைப்பறையையும் தான் ஒரு எட்டுப் பார்த்துப் போனதை எங்கோ பார்த்துக்கொண்டு நின்ற பெரியவர் உணரட்டும் என்ற உள்ளுணர்வில் ஒரு சத்தம் போடு கின்றார், 'அதுதான் ரொம்பி வழியுதே...... இன்னும் என்ன திணிக்கிறே......'

அறைப்பு யந்திரத்தில் அளவுக்கு மீதி அதிகமாகவும், அவசர அவசரமாகவும் இலையை அமுக்கித் திணித்துக் கொண் டிருந்தவனை முறைத்துப் பார்த்தார் பெரியவர்.

பயங்கரமாய் தோன்றும் அறைப்பு யந்திரங்களின் சுழற்சிக் கூச்சல் அத்தனையையும் கதவுடனே உள்ளே சாத்தி அடைத்துவிட்டு அடுப்பறைக்குள் நுழைந்தவர் சற்று நின்றார். விசாலமான அந்த அறையின் எந்த மூலையுமே கொட்டும் குளிருக்கு இதமாகத்தான் இருக்கும், கம்மென்று,

வெய்யில் நாளென்றால் நரகம்தான். பாறை பாறையாய் அடுப்புக்குள் கிடக்கும் நெருப்புப் பாளங்களை ஒரு விநாடி பார்த்தாலே கண்வடியும். அதிலேயே வேலை செய்வோருக்கு அது பழக்கம்.

அடுப்பின் இரும்புக் கதவை அனாயாசமாகத் திறந்து, அறுத்துக் குவித்திருக்கும் சவுக்கு மரக் கட்டைகளை 'தம்' கட்டித் தூக்கி அடுப்புக்குள் வீசிக்கொண்டிருந்தான் அடுப்பாள்.

அடுப்புக் கதவு திறபட்டதும் தீ ஜூவாலையாய் சுட்டது அந்த அறையில் வீசிய காற்று. உருகும் தாரில் வெறும்காலில் நிற்கும் ஒரு உணர்வு.

காதில் செருகியிருந்த பென்சிலை உருவி காதுள் விட்டுக்குடைந்த வண்ணம் மெதுவாக சுழல் கதவுள் நின்றார், கதவு சுழன்றது, (14 பக்கம் பார்க்க...)

## துயரங்கள் நிரந்தரம் என்றில்லை!

தோற்றுப் போன
வாழ்வின் சாயல்கள்
நேற்றுப் போலின்றில்லை

சுமைகளைக் கடந்து
சுகங்களைத் தேடும்
துயரங்கள் என்றும்
நிரந்தரம் என்றில்லை

பயணிக்கும் பாதைகள்
ஒவ்வொன்றும் வெவ்வேறு
திசைகளாய் நெருங்கி
நெஞ்சை நெகிழ்த்துகின்றன

கலைந்துபோன கனவுகளும்
கலையாத நினைவுகளும்
கலங்கிய வாழ்விற்குள்
கதிகலங்கி காணாமற் போயின

காத்திருப்பின் கணங்களுக்குள்
பார்த்திருந்த பூவிழிகள்.......
புரியாத அர்த்தங்களுடன்
பூத்தே மடிகின்றன

தொலைவானில் தொடுதூரம்
தொலைந்தாலும் அதிகமில்லை
தொடரும் ஏகமதை
நெஞ்சினில் சுமந்தபடியே
தொடர்கின்றோம் எந்நாளும்
தொட்டதனை ரசிப்பதற்கே.......

# மனிதன் தனது வாழ்வியலில் இன்ழக்கும் துரோகங்கள்

துரோகம் என்பது இரு வழிகளில் மனிதனால் மேற்கொள்ளப்படுகின்றது. முதலாவது மனிதன் தான் செய்வது தவறு எனத் தெரிந்தும் சில செயல்களைச் செய்கின்றான். இவ்வாறு தெரிந்து செய்யும் தவறுகள் துரோகமாக அமையும். தெரியாமல் மனிதனால் புரியப்படும் தவறுகள் பிழைவிடுதல் என அமையும். அடுத்ததாக ஒரு மனிதன் தான் புரியவேண்டிய சில செயல்களைச் செய்யாது விடுகின்றான். இது இரண்டாவது வகைத் துரோகமாக அமையும். சில மனிதர்கள் புரிய வேண்டிய செயல்களை மற்றவர்கள் எதிர்பார்த்து உள்ளபோது செய்யாது விடுதல் நம்பிக்கைத் துரோகமாக அமையும். இவ்வாறாகத் தவறுகள் பற்றிய விழிப்புணர்வுகள் மேம்படல் தனிமனித நலனுக்கும், சமூக நலனுக்கும், இன்றியமையாதது ஆகின்றது.

விருப்பு, வெறுப்பு என்பவற்றின் அடிப்படையிலேயே வாழ்வு அமைகின்றபடியால் துரோகத்தினை ஒரு மனிதனில் இருந்து பிரிக்க முடியாது. ஆனால் ஒருவன் புரியும் துரோகங்கள் மிகவும் குறுகியதாக அமைய வேண்டும். இதனால் மனிதனுக்கு அதிகம் விரோதங்களோ, குரோதங்களோ வராது, சமூகத்திற்கும் பாதிப்பு வராது இருத்தல் அவசியம். நேர்மையான வழிக்குவர துரோகம், பற்றிய விழிப்புணர்வு தேவை. மனிதன் புரியும் துரோகங்களை அவனைச்சூழவுள்ள பன்னிரண்டு வட்டங்களில் ஆராயலாம். ஒருவர் இந்தப் பன்னிரண்டு வட்டங்களில் எவற்றிலும் தவறு இழைக்கலாம்.

முதலாவதாக மனச்சாட்சிக்குத் துரோகம் இழைத்தல் ஆகும். மனச்சாட்சி என்பது ஒவ்வொரு மனிதனதும் நனவிலி மனதில் எது நீதியானது, எது செய்யப்பட வேண்டும், எது தவறு என்பதனை அடிப்படையாகக் கொண்டு செயற்படுவது. சில வேளைகளில் மனச்சாட்சி பிழை எனக்கூறும் செயல்களையும் நாம் இயல்பாகவே ஆசை மிகுதியால் அல்லது கோப மிகுதியால் செய்து விடுகின்றோம். சில வேளைகளில் மனச்சாட்சி செய்யும்படி கூறும் காரியங்களைச் சில காரணங்களிற்காக நாம் செய்வதில்லை. இவை மனச்சாட்சிக்குச் செய்யும் துரோகங்களாகும்.

அடுத்து உலக அனுபவக் கற்றலுக்குத் துரோகம் இழைத்தல் என்பது நாம் பாடசாலைக்கல்வி முதல் வாழ்க்கைக் கல்வி வரை கற்கவேண்டிய அவசியம் உள்ளது.

ஒவ்வொரு மனிதனும்
தனது வாழ்வியலில்
அறிந்தோ
அறியாமலோ பல்வேறு
விதமான
துரோகங்களை
இழைக்கிறான்.
அவைகளை விளங்கிக்
கொண்டால்
தவிர்த்துக்கொள்வது
இலகுவாகும் அல்லவா?

இதனைப் பலர் தவறாகப் பயன்படுத்திக் கல்வி கற்காது தங்களுக்குத் தாங்களே துரோகத்தினைச் செய்கின்றனர்.

மூன்றாவதாகப் பெற்றோர்க்குத் துரோகம் இழைத்தல் என்பதனுள் பிள்ளைகள் பெற்றோரது எதிர்பார்ப்புக்களுக்கு மாறாகச் செயற்படல், பெற்றோருக்குச் செய்ய வேண்டிய கடமைகளைப் புரியாமை, பெற்றோருடன் தொடர்பு இல்லாது தங்களது கருமங்களை ஆற்றல் என்பன அடங்கும்.

நான்காவதாகத் தமது தொழிலுக்குத் துரோகம் இழைத்தல் என்பது ஒருவர் தாம் புரியும் தொழிலில் செவ்வனே கடமையாற்ற வேண்டும். எடுக்கும் வேதனத்திற்கு வேலை செய்ய வேண்டும். உலகில் என்ன கடமையை புரிய ஒருவர் உருவாக்கப்பட்டவரோ அக்கடமையை அவர் புரியாது தவறவிடுவாராயின் அது அவர் புரியும் தொழிலுக்கு துரோகமாக அமையும். வாடிக்கையாளரின் நம்பிக்கையை ஏமாற்றுவதும் தொழிலுக்குச் செய்யும் துரோகமாகும். மற்றும் பொதுச் சொத்துக்களை அபகரித்தலும் துரோகமாகும்.

ஐந்தாவதாகத் தமது திருமணத்தில் துரோகம் இழைத்தல் என்பது ஒருவரின் வாழ்க்கைக்கும், சந்ததிவிருத்திக்கும் திருமணம் இன்றியமையாதது. மோகத்திற்காகவோ, போகத்திற்காகவோ, சந்தர்ப்ப சூழ்நிலைக்காகவோ திருமணம் செய்தல் என்பது சில தவறுகளுக்குக் காரணமாகலாம். இது மணமக்களுக்கிடையில் துரோகமாக அமையலாம்.

ஆறாவதாக குடும்ப வாழ்வுக்குத் துரோகம் இழைத்தல் என்பது திருமணத்திற்குப் பின் கணவன், மனைவி உறவில் விரிசல் ஏற்பட்டாலும் வேறு உறவு கொள்ளலும் அவர்களது குடும்ப வாழ்விற்குச் செய்யும் துரோகமாக அமையும்.

ஏழாவதாகத் தனது பிள்ளைகளுக்குத் துரோகம் இழைத்தல் என்பது பெற்றோர் தம் பிள்ளைகளுக்குப் போதிய வசதிகளை அளிக்காது கல்வி கற்றலில் தடங்கல் ஏற்படுத்தல், குடும்ப வாழ்வைத் தொடர்ந்து பிள்ளைகளுக்குச் சரியான வழிகாட்டலை வழங்காதுவிடல் என்பன அமைகின்றன.

எட்டாவதாக தனது நண்பர்களுக்குத் துரோகம் இழைத்தல் என்பது நண்பர்களைத் துன்பத்தில் கைவிடல், நண்பர்களுக்கு நல்ல ஆலோசனை வழங்காதுவிடல், நண்பர்களின் எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக நடத்தல் என்பன அமைகின்றன.

ஒன்பதாவதாக தான் வாழும் சமூகத்திற்குத் துரோகம் இழைத்தல் என்பது ஒருவன் தனது சமூகத்துடன் சேர்ந்து இயங்க வேண்டும். சமூகத்திற்கு முரணாகச் செயற்படக்கூடாது. சமூக முன்னேற்றத்தில் பங்களிக்க வேண்டும். தான் வாழ்ந்த சமூகத்தினை விலத்திச் செல்லக்கூடாது. இவற்றினைச் செய்யத் தவறுவோர் சமூகத்திற்குத் துரோகம் செய்தவர்கள் ஆவார்.

பத்தாவதாக தனது இனத்திற்கு துரோகம் இழைத்தல் என்பது ஒருவர் தனது இனத்தைக் காட்டிக் கொடுத்தல் அல்லது தனது இனத்திற்கு எதிராகச் செயற்படல் ஆகும். உலகத்தில் உள்ள உயிரினங்களில் மனித இனம் மட்டுமே தனது இனத்திற்கு எதிராகச் செயற்படுகின்றது. இதனைச் சனநாயகத்தில் தலைவாயிலான நாடாளுமன்றிலோ அன்றில் யுத்தக்களத்திலோ காணலாம்.

பதினொராவதாக உலகிற்குத் துரோகம் இழைத்தல் என்பது உலகின் சமநிலையைக் குலைத்தல், உலக அமைதியினைக் குலைத்தல், சூழல் வெப்பமடையக் காரணமாதல், அணுக்கதிர் வீச்சுக்கள், இரசாயனங்கள் பிரயோகம், பொலித்தீன் பாவனை, இயற்கையை அழித்தல் என்பன அடங்கும்.

பன்னிரண்டாவதாகக் கடவுளுக்குத் துரோகம் இழைத்தல் என்பது. கடவுளின் பெயராலோ அன்றிச் சமயத்தின் பெயராலோ அரசியல் நடத்தல், சண்டையிடல், பொருள்களை அபகரித்தல், விளம்பரப்படுத்தல் என்பன அமைகின்றன.

மேலும் மனிதன்மனிதனாக வாழாது மிருக மாக வாழ முற்படலும் கடவுளுக்குச்செய்யும் துரோகமாகும்.

**********



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது ஆண்டு நினைவலைகள்



எம்முடன்
21*01*1983

இறைவனுடன்
12*10*2006

## ஆலாலசுந்தரம் சதீஸ்

இரண்டு ஆண்டுகள் விழிநீரோடு வேர் அறுந்த
விருட்சமாய் ஒடிந்து நிற்கின்றோம்
இரக்கமில்லா எமனுக்கு இரையாகினாய்
இன்னமும் எம் இதயங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறாய்
சதீஸ்குட்டியே உன் குறும்புகள் எம் மனதில் என்றும் இருக்கிறதே
நீ பிரிந்த நிமிடத்தில் இருந்து நாமும் எம்மைப்
பிரிந்துபோய் தவிக்கின்றோம் சதீஸ்குட்டியே
உன்னோடு சேர்ந்துதான் எங்களால் பயணிக்க முடியவில்லை
நாளும் பொழுதும் உன் நினைவுகளுடன் வாழ்ந்துபோகின்றோம்
எம் உயிர் இருந்து மடியும் வரை

உம் பிரிவினை ஜீரணிக்க முடியாத:
அத்தார்,அக்கா, மருமக்கள்.

நெடுந்தீவு மேற்கு,
நெடுந்தீவு.


## விற்பனைக்கு

5 தெரீன் ஏற்றக்கூடிய புத்தம் புதிய (டாட்டா) லொறி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு.021 222 6944 (79116)

## வீடு விற்பனைக்கு

ஆனைக்கோட்டை உயரப்புலம் Church இற்கு முன்பாக (உலகுண்டான் வளவு) இரண்டு பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:-
விமலராஜா - 077 3867032,
- 112 362197. (சி/555039)

## விற்பனைக்கு

சூரியகாந்தி விதைகள்
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
ச.பரஞ்சோதி,
சிலம்புப் புளியடி,
சங்கானை.
தொ.பே: - 0602213049,
- 021 4591634,
- 021 4590706
(79098)

## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன் முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ் பூத்த சுய தெரிவு முறை முன்னோடி, தனி மனித நிறுவுநர். சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துனர் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனுடன் தொடர்பு கொள்க. கொழும்பு நேரடித் தொலைபேசி - 2360488, 2360694, 4873929.



# SAVINGS 14%

இப்போது புதிய சேமிப்பு கணக்கினை அறிமுகப்படுத்துகிறது

'இலங்கையின் அதிசிறந்த நுகர்வோர் சேவைகளை வழங்கும் வங்கி' - ஏசியன் பேங்கர்

சர்வதேசத்தர விருதுபெற்ற வர்த்தக வங்கியான ஹற்றன் நஷனல் வங்கி, ஆகக்குறைந்த ரூபா 50,000 ஆரம்ப வைப்புக்கு 12.5%* மும் ஆகக்குறைந்த ரூபா 100,000 ஆரம்ப வைப்புக்கு 14%** மும் வருடாந்த வட்டியாக வழங்குகிறது. அத்துடன் நீங்கள்

**எத்தனை தடவைகளேனும் பணத்தை மீளப் பெற்றுக்கொள்ளலாம்.**

- இலவச இணைய வங்கிச்சேவை
- இலவச SMS வங்கிச்சேவை
- 90% வரை துரித கடன் வசதி
- இலவச ATM அட்டை

அதிசிறந்ததிலிருந்தே அதிசிறந்ததைப் பெறமுடியும்.

கெபிடல் சேமிப்புக் கணக்குகள் பத்தும் விமன சீட்டிழுப்பிற்கு தகுதி பெறாது.
HNB, ∴பிச் ரேட்டிங் லங்காவினால் AA⁻ (lka) ஆக தரப்படுத்தப்பட்டுள்ளது.

* 12.5% வருடாந்த விளைவு வீதம் 13.24%
** 14% வருடாந்த விளைவு வீதம் 14.93%

HNB CAPITAL SAVINGS

HNB



ANCHOR
Complete Electrical Solutions

இந்தியாவின் விற்பனையில்
முதல்தரத்திலுள்ள ANCHOR TAPE தற்போது
யாழ்ப்பாணத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.



IMPORTED BY
ABBE (Pvt) Ltd
67 A WOLFENDHAL STREET,
Colombo - 13,
Tel: 2439993

DISTRIBUTED BY
JAFFNA ELECTRICALS
No.94(6)Stanley Road,, JAFFNA,
Tel: 021 2222353.



ரோயல் குளுக்கோஸ்

100% சுத்தமானது

PACKED BY:
ROYAL Industries, Colombo 12
☎: 0112334603




288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்
28 . 04 . 1943



ஆண்டவன் அடியில்
12 . 09 . 2008

## திருமதி அன்ரன் இராசலிங்கம் பிலோமினா

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்ற எங்கள் அன்புத் தாயின் பிரிவுச் செய்தி கேட்டு நேரில் ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் துண்டுப் பிரசுரத்தின் மூலம் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு,

இன்று (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு மிருசுவில் புனித காணிக்கை மாதா ஆலயத்தில் நடைபெறும் ஆன்ம ஈடேற்றத் திருப் பலியிலும், அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.அன்ரன் சாந்தராசா (மகன்)

தவசிக்குளம்,
கொடிகாமம். (79132)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
29 * 06 * 1934



மறைவு
25 * 09 * 2007

## அமரர் மாணிக்கம் குமாரசாமி

திதி:திரயோதசி

நீங்கள் சிந்திய வியர்வைகள்
நமக்காகப் பட்ட துன்பங்கள்
எம்மால் என்றும் மறக்க முடியவில்லை.
சுகமான உங்கள் நினைவுகளைச்
சுமந்தவாறு என்றும் நாங்கள்
நடந்து வந்த பாதையை நாம்
ஒரு தரம் திரும்பிப் பார்க்கின்றோம்.
அங்கெல்லாம் உங்கள்
நினைவின் தடயங்கள் தான்

கச்சாய் வீதி,
கொடிகாமம். (79103) - குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை நாகரிக உலகின் உச்சத்துக்கு உயர்த்தி நிறுத்திய மூன்று முக்கிய தலைவர்கள்

**அமெரிக்கா இன்று நாகரிகத்தின் உச்சத்தில் நின்றபோதிலும் அதன் இன்றைய புகழுக்கு அத்திவாரமாக இருந்தவர்கள் மூவர். ஒருவர் அதனைக் கண்டுபிடித்தார். மற்றொருவர் ஜனநாயக வாழ்வியலுக்கு உதார புருஷராக விளங்கி அந்நாட்டில் அடிமைத்தன்மையை ஒழித்துக்கட்டினார். இன்னுமொருவர் அமெரிக்க சமூகத்தில் இனக்குரோதத்தையும் கறுப்பினத்தவர் மீதான இழிந்த பார்வையை ஒழித்துக் கட்டுவதற்கும் தம்முயிரையே அர்ப்பணம் செய்தார்.**

## அவர்கள் பற்றிய சிந்தனைக் குறிப்பு

சி.ஞானசந்திரமூர்த்தி
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



எதிர்வரும் நவம்பர் 4ஆம் திகதி அமெரிக்காவில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலை உலகம் ஆவலுடன் எதிர்பார்க்கும்வேளையில் அமெரிக்காவிற்கு நாகரிக உலகில் இடம் பெற்றுக் கொடுத்த தலைவர் மூவர்களைப்பற்றிச்சிந்திப்பது அவசியமாகின்றது. முதலில் அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ், இரண்டாவது அமெரிக்காவில் அடிமை முறையைச்சட்டபூர்வமாக ஒழித்த ஆபிரகாம்லிங்கன், மூன்றாவது இன, மத, நிற வேறுபாடுகளுக்கு எதிராகப் போராடி வெற்றி பெற்ற மாட்டின்லூதர்கிங் ஆகியோரே அந்த மூவராவர்.

ஜெனோவா நாட்டில் ஏழை நெசவாளி கிறிஸ்தோபரின் மகன்தான் கொலம்பஸ். சிறுவயது




தொடக்கம் கடல் பயணம் செய்வது பற்றிய சிந்தனையிலே இருந்தான். ஸ்பெயின் நாட்டின் இளவரசி இசைபெல்லாவின் உதவியுடன் சுந்தமரியா, பின்டா, நீரா என்ற மூன்று கப்பல்களுடன், 88 பேருடன், 1492ஆம் ஆண்டு இந்தியாவிற்கு கடல்மார்க்கம் கண்டுபிடிக்கும் முயற்சியில் புறப்பட்டான். பலநாள் பயணத்தில் இரு கப்பல்களையும் இழந்து தனி ஒரு கப்பலில் சில பயணிகளுடன் கரை சேர்ந்தான். கரைசேர்ந்த நாட்டில் பல கஷ்டங்களையும், எதிர்ப்புகளையும் அனுபவித்து ஈற்றில் அங்குள்ள மக்களின் மனங்களை வென்றான். அதன் பின் மூன்றுமுறை ஸ்பெயின் நாட்டிற்கு வந்து சென்று இசபெல்லா ராணிக்குத் தான் கொண்டு வந்த தங்கத்தையும், வெள்ளியையும் வழங்கினான். இசபெல்லாவின் மனதைக் கொலம்பஸ் வென்றுவிட்ட நிலையில் இசபெல்லாவின் படைத் தளபதி கொலம்பஸ்ஸை சிறையில் இட்டான். சிறையில் இருந்து தனது பயண அனுபவங்களை எழுதிய நிலையில் இறந்தான். இத்தாலி நாட்டில் உள்ள அமெரிகோ வெஸ்பூசியஸ் என்பவன் கொலம்பஸ் எழுதி வைத்த குறிப்புகளைக் கொண்டு கொலம்பஸ் கண்டுபிடித்தது இந்தியா அல்ல என்றும் வேறு ஒரு பெரிய தீவு - ஒரு கண்டம் என்றும் எழுதினான். அமெரிகோ எழுதியதால் கொலம்பஸ்ஸால் 1493இல் கண்டுபிடிக்கப்பட்ட பெரும் கண்டம் அமெரிக்கா என்று அழைக்கப்படலாயிற்று. கிட்டத்தட்ட 500 வருட காலத்தில் புதிய உலகம் என்று அழைக்கப்பட்ட அமெரிக்கக் கண்டம் துரித முன்னேற்றமடைந்து பெரு வல்லரசானதுடன் பல நாடுகளின் விதியை நிர்ணயிக்கும் நிலையில் உள்ளது.

### அடிமை முறையை ஒழித்த தலைவன்

அமெரிக்காவின் தன்நிகரில்லாதவரும் மானிடத்தின் ஒளிவிளக்காகியவரும் ஆபிரகாம் லிங்கனாவார். லிங்கன் அமெரிக்காவில் உள்ள கென்ருக்கி என்னும் மாகாணத்தில் 1809ஆம் ஆண்டு பெப்ரவரி 12ஆம் திகதி பிறந்தார். தந்தை தோமஸ், தாய் நான்சி. சாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவராகையால் ஏழைகளின் அவலங்களை உணர்ந்து அவற்றைத் தீர்ப்பதற்குத் திடசங்கற்பம் பூண்டார். தனது குடும்பத்தைக் காப்பாற்றுவதற்குப் படகு ஓட்டும் தொழிலை மேற்கொண்டார். அப்போதுதான் மனிதனை மனிதன் விலைக்கு வாங்குவதும் விற்பதும் கண்டு மனம் வெதும்பினார். "நான் இந்நாட்டின் ஜனாதிபதியானால் அடிமை முறையை ஒழிப்பேன்" என்று பகிரங்கமாகக் கூறியதுடன் அதற்காகத் தன்னை தயாராக்கினார். சட்டசபைக்குத் தெரிவாவதற்குமுன் தன்னைச் சட்ட வல்லுநராக்க விரும்பினார். ஸ்டுவாட் என்னும் வழக்கறிஞரிடம் சட்டப்புத்தகங்களை இரவல் வாங்கிப் படித்து வழக்கறிஞராகிச் சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். சட்டத் தொழிலில் மிகவும் திறமை காட்டியதுடன் வெகுவிரைவில் ஜனாதிபதியாகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

### உள்நாட்டு போருக்குப் பச்சை கொடி

வடதென் அமெரிக்கப் பிரதிநிதிகளைக் கொண்ட நாட்டுப் பாராளுமன்றத்தில் அடிமை முறை ஒழிப்புப் பற்றி பிரஸ்தாபித்தார். அப்போதுதான் அடிமை முறை ஒழிப்பு இலகுவானது அல்ல என்பதை உணர்ந்தார். காரணம் காட்டும் பாராளுமன்றத்தில் உள்ள தென்பகுதிப் பிரதிநிதிகள் அடிமைமுறை இருப்பதையே விரும்பினர். காரணம் தென்பகுதி விவசாயநாடு. விவசாயம் செய்வதற்கு நிலச்சொந்தக்காரருக்கு அடிமைகள் தேவை. வடபகுதி கைத்தொழில் நாடானபடியால் அதன் பிரதிநிதிகள் அடிமை முறையை ஒழிக்கவேண்டுமென்று விரும்பினர். இந்நிலையில் போர் ஒன்றைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்று உணர்ந்த ஆபிரகாம்லிங்கன் உள்நாட்டுப் போருக்குப் பச்சைக்கொடி காட்டவே அமெரிக்க வரலாறு காணாத பல்லாயிரம் உயிர்களைக் காவுகொண்ட உள்நாட்டுப் போர்நடந்துஈற்றில் வடபகுதி தென்பகுதியை வென்றது. கென்றிஸ்பாக் என்னும் மைதானத்தில் ஆபிரகாம்லிங்கன் சரித்திரப் பிரசித்தி பெற்ற உரையொன்றை ஆற்றினார். அந்த உரை ஏழு வசனங்களை மட்டுமே கொண்டதானாலும் உலகத் தலைவர்கள் ஆற்றிய சிறந்த உரைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. "மக்களின் ஆட்சி, மக்களால் ஆட்சி, மக்களுக்கு ஆட்சி என்பது இந்த உலகத்தை விட்டு எக்காலத்திலும் அழியாது" என்பதே அவருடைய உரையின் மிகமுக்கிய அம்சம். 1865ஆம் ஆண்டு அமெரிக்க நாட்டுப் பாராளுமன்றத்தில் 115 பேரின் ஆதரவுடன் 58 பேரின் எதிர்ப்புடன் 2/3இற்கு மேற்பட்ட பெரும்பான்மையுடன் "அடிமைமுறை ஒழிப்பு" சட்டபூர்வமாகியது. கடவுளால் படைக்கப்பட்ட மனிதன் சாதி, சமய, இன வகுப்பு வேறுபாடின்றி சமனானவன் என்பதைச் சட்டபூர்வமாக்கிய சில நாள்களில் ஆபிரகாம்லிங்கன் தனது 56வயதில் 1865ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் திகதி நாடகம் பார்த்துக் கொண்டு இருந்தபோது யோன்வில் சிஸ்பூத் என்பவனின் துப்பாக்கிக்கு இரையானார்.

### மும்முனைப் போராட்டம் நடத்திய மார்ட்டின்லூதர் கிங்

ஆபிரகாம் லிங்கனைப் போல் அமெரிக்காவில் நிறத் துவேசத்துக்கு எதிராக உழைத்து வெற்றி பெற்று அதன் காரணமாக மரணித்தவர் மாட்டின்லூதர் கிங். ஆபிரகாம்லிங்கன் 56 வயதில் கொலையனின் துப்பாக்கிக்கு இரையானார் என்றால் லூதர்கிங் 39 வயதில் துப்பாக்கிக்கு இரையாகினார்.

மாட்டின்லூதர் கிங் லிங்கனைப் போல் வெள்ளை நிறத்தவர் அல்ல. அவர் கறுப்பு இனத்தவர். எனவே தனது இனவிடுதலை முயற்சியில் பலத்த எதிர்ப்புக்களைச் சந்தித்தவர். 1929ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி ஜியோர்ஜியா என்னும் மாகாணத்தில் உள்ள அற்லாண்டர் என்னும் இடத்தில் பிறந்தார். 1948ஆம் ஆண்டு 19 வயதில் பாதிரியார் பரீட்சையில் சித்தியடைந்து தேவாலயங்களில் சொற்பொழிவாற்றினார். தனது இலட்சியக் கனவான இனவிடுதலையை அடைவதற்கு மூன்று முனைகளில் போரிட்டார். பாடசாலைகளில் கறுப்பு இன மாணவர்களுக்கு நடந்த அநீதியை எதிர்த்துப் போரிட்டார். போக்குவரத்து வண்டிகளில் கறுப்பு இனத்தவர் அனுபவித்த புறக்கணிப்பை எதிர்த்துச் செயற்பட்டார். உணவுச்சாலைகளில் கறுப்பு இனத்தவர்களுக்குச் சம உரிமை கோரிப் போரிட்டார். எனவே அவரது இனவிடுதலைப் போராட்டம் மும்முனைப் போராட்டமாக இருந்தது. ஆபிரகாம் லிங்கன் யுத்தத்தால் தனது இலட்சியத்தை அடைந்தார் என்றால் மாட்டின்லூதர், மகாத்மாகாந்தி காட்டிய வழியில் நின்று சாத்வீகப் போராட்டத்தை நடத்தி வெற்றிபெற்றார்.

மகாத்மாவின் அகிம்சைக் கொள்கையில் கவரப்பட்டு இந்தியாவுக்கு வந்து இந்திய சத்தியாக்கிரகத்தை மேலும் கற்றார். 1963ஆம் ஆண்டு

[12ஆம் பக்கம் பார்க்க...]

---

# கலைஞர்களின் பற்றுறுதியினால் சிறப்புப் பெற்ற வட்டுக்கோட்டையூரின் நாட்டுக்கூத்துக் கலை

## அதனைப் பேணிக் காப்பது இளம் சந்ததியினரின் பொறுப்பு ஆளுநர் விருது பெற்ற கலைஞர் கந்தையா நாகப்பு சொல்கிறார்

நீண்டகாலமாக நாட்டுக்கூத்துக் கலையில் தன்னை ஈடுபடுத்தி, அதன் நுட்பங்களையும் வகைகளையும் அறிந்து வைத்திருப்பதோடு மட்டுமன்றி அதனைப் பெரும்பொக்கிஷமாகக் கருதி அதனோடு ஒன்றித்துள்ளவர் கலாபூஷணம் கந்தையா நாகப்பு.

'ஏழையின் காதல்' என்னும் நாவலையும், 'காதலின் விளக்கம்' என்னும் கட்டுரை நூலையும் வெளியிட்டு எழுத்துத் துறையிலும் தன்னாற்றலை வெளிப்படுத்தியவர்.

எனினும் தொடர்ந்து தன் எழுத்தாற்றலை வளர்ப்பதைக் காட்டிலும் கூத்துச் சார்ந்த கலைகளிலே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். அத்தோடு, அவர் தமது ஆற்றலால் தன்கைவினைப் பொருள்களால் வட்டுக்கோட்டை சிந்துபுரத்துக்கும் இப்போது பெருமை ஈட்டிக் கொடுப்பவராக விளங்குகின்றார். இவ்வருடத்தில் வடமாகாண ஆளுநர் விருதுக்குத் தெரிவுசெய்யப்பட்ட பத்துக் கலைஞர்களில் இவரும் ஒருவர். நாட்டுக்கூத்துக் கலைக்காக அவருக்கு இவ்விருது கிடைத்துள்ளது. அவருடன் நடத்தப்பட்ட செவ்வி இது.

**கேள்வி:** தங்களது வீமன் ஆட்டத்தைக் கண்ட இளைஞர்களும் சிறுவர்களும் "....... தொந்தி குலுங்கக் குலுங்க நாகப்பண்ணன் தோன்றினனே" என்று கூறுவது பிரசித்தமானது. இது தங்களுக்குப் புன்னகை தரும் செய்தியாக இருந்ததை அறிவேன். தங்கள் உடற்தோற்றமும் வீமன் பாத்திரத்திற்கு பொருத்தமானது என்பதை இந்நகைச் சுவைத் தொடரால் அறியலாம்.



கூத்துக் கலையில் உங்களுக்கு ஈடுபாடு ஏற்படக் காரணமாக இருந்தது எது? அதற்குள் நீங்கள் எவ்வாறு நுழைந்தீர்கள்?

**பதில்:** காந்திஜி சனசமூக நிலையமும் கிராம முன்னேற்றச் சங்கமும் ஒன்றாக இருந்த காலத்தில் அதன் அங்கத்தவர்களில் நானும் ஒருவன். குறிப்பாக நா.தணிகாசலம்பிள்ளையும் (கல்வித்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்று இப்போது உயர்கல்வியமைச்சின் ஆலோசகர்களில் ஒருவராகப் பணிபுரிகிறார்) சேர்ந்து அகிலன் எழுதிய 'நெஞ்சின் அலைகள்' என்னும் நாவலை அவரின் அனுமதி பெற்று நாடக வடிவத்தில் மேடையேற்றினோம். அதனால் சிறியளவில் பணம் திரட்டினோம். சங்கத்தினரின் உதவியும் இருந்தமையால் அந்நிகழ்ச்சி எம்மை ஊக்குவித்தது.

அப்போது சங்கத் தலைவராக விளங்கிய செல்லையா பரராஜசேகரனின் முயற்சியால் முதுதமிழ்ப் புலவர் பண்டிதர் மு.நல்லதம்பியின் நினைவாக நல்லதம்பி நாடகசபை உருவானது. ந.மணிதிருநாவுக்கரசு, வே.பரமநாதபிள்ளை, சீ.பாலசுப்பிரமணியம், கதிர் சதா கனகராசா (டாக்டர்) போன்ற வேறும் பல இளைஞர்கள் துணையாக எம்முடன் இணைந்துகொண்டனர். இவர்கள் யாவரும் அரச மற்றும் துறைசார் உயர் பதவிகளை வகித்தவர்கள்; வகிப்பவர்கள்;

எம்முன்னோரால் ஆடப்பட்டு வந்த நாட்டுக் கூத்தை நாம் மீளவும் புத்துயிரளிக்கத் திட்டமிட்டோம்; வெற்றியுங் கண்டோம். அன்றிலிருந்து இன்று வரையும் அந்த ஈடுபாட்டை நான் கைவிடவில்லை, அதில் ஊறித் திளைக்க வேண்டும் என்ற மன அவாவுடனும், உணர்வுடனும் ஈடுபட்டு வருகிறேன். இப்போது நாட்டுக்கூத்தோடு தொடர்புடைய கைவினைக் கலைக்குள்ளும் இறங்கி விட்டேன். குதிரை, பூதம், அநுமான் எனப்பல உருவங்களைச் செய்து அந்த வேடங்களிலே இளஞ்சந்ததியினர் கலை நிகழ்வுகளை நடத்தி நின்றாட வழியமைத்து வருகின்றேன். (அது எனக்கு வருவாயையும் தருகின்றது என்று பெருமையோடு கூறுகின்றார்) .

**கே:** காலம் காலமாக ஆடப்பட்ட கூத்துக்கள், குழு அமைப்பில் இல்லாதிருந்தமையால் அதன் சிறப்புக்கள் தெரிவதற்காகவும் வளர்ச்சி கருதியும் தாங்கள் குழு அமைத்ததாகக் கருதுகிறீர்கள். அதுபற்றிக் கூறுவீர்களாக?

**ப:** நாட்டுக் கூத்துக்குழு எமது காலத்தில் ஆரம்பிக்கப்பட்டதாயினும் கூத்துக்கள் எம் மூதாதையரின் வழியிலே சிறந்து வந்திருக்கிறது. அது, வமிசவாரியாக ஒவ்வொரு வமிசத்துக்கும் ஒவ்வொரு பாத்திரமாக ஏற்றுக்கொண்டு வட்டுக்கோட்டையில் கூத்துக்களை ஆடி வந்திருக்கிறார்கள். என்னுடைய தந்தைவழி[illegible] வீமன் [illegible] செல்லமாகச் சிறப்பாக அழைக்கப்பட்டார். அதுபோலவே கலைஞர்கள் எல்லோரினதும் பெயர்களின் அரைப்பகுதியுடன் பாத்திரப் பெயர் சேர்ந்துவிடும். அதனால் நானும் வீமன் பாத்திரத்தை ஏற்று நடித்தேன். இவ்வாறே ஒவ்வொரு வமிசவழியில் வந்தவர்கள் அந்தந்தப் பெயரால் அழைக்கப்பட்டுப் பாத்திரப் பெயர்களையும் பெற்றனர். (இப்பொழுதுள்ள இளஞ்சந்ததியினர் எவரும் எந்தப் பாத்திரமும் ஏற்கலாம் என்றாகிய ஒருநிலை மாறியுள்ளது)

**கே:** வட்டுக்கோட்டையின் கூத்து வடிவங்கள் பற்றிக் கூறமுடியுமா?

**ப:** எங்களூரில் கூத்துவடிவங்கள் பல இருந்தன. 1765இற்கு முன்பிருந்தே எமதூர் முன்னோர் கூத்துக்கலையில் நாட்டங் கொண்டு உழைத்திருக்கின்றனர். 1824ஐ அண்டிய காலப்பகுதியில் சுவாமிநாத பண்டிதர் எனச் சிறப்பாகப் பேசப்படும் கலைஞரால் எழுதப்பெற்ற 'தருமபுத்திர நாடகம்' வடமோடிப் பாங்கிலானது. வட்டுக்கோட்டையின் கலைத்துறையின் தனித்தன்மையும் சிறப்பும் பல ஊரவர்களினதும் ரசிப்பும் நிறைந்த அந்நாடகம் எம்மூரில் சிறப்பாக [illegible] வந்தது.

சுவாமிநாதரிடமிருந்து வேலுப்பிள்ளை [illegible]யராகிய மத்தள வல்லுநர், நாடகப் பிரதியைப் பெற்றுக்கொண்டு நம்மவர்களுக்கு வட்டுக்கோட்டை மரபிலிருந்து வழுவாது புதிய மெருகுடன் பழக்கியதாக அறிய முடிந்தது. கூத்துக் கலையைச் சிறப்பாகச் செய்து, அதனை அழியவிடாது காப்பாற்ற வேண்டும். கலைஞர்கள் பலரும் பெரும் பணத்தைச் செலவிட்டனர் என்பதும் அதன் பொருட்டு தமது காணிகளைக் கூட விற்றனர் என்பதும் எமது ஊரின் வரலாற்றின் ஓர் அங்கம்.

**கே:** நாட்டுக்கூத்துக் கலைஞர் எனச் சிறப்பாகப் பெயர் பெற்ற தாங்கள் அதற்காற்றிய பங்களிப்பைச் சுருக்கமாகக் கூறுங்கள்.

**ப:** வட்டுக்கோட்டைக் கூத்துப் பலராலும் பாராட்டப்பட்டமையால் எமது காலத்தில் பல இடங்களிலெல்லாம் கூத்தை ஆடிக் காட்டவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. திருமறைக் கலாமன்றமும் அதனுள் ஒன்று. அவர்கள் நாட்டுக்கூத்துக் கலைக்களஞ்சியம் வெளியிடவிருப்பதாகக் கூறி என்னிடமும் பல தரவுகளை கேட்டறிந்துள்ளனர். எமது சிறப்புமிக்க கூத்துக்கலை தொடர்பாக முந்தைய மூத்தவர்களிடம் கேட்டறிந்தவையுடன் பலவற்றையும் வாசித்து தேர்ந்தும் கொண்டேன். அது நூலுருவமாக்கும் முயற்சிக்கு வித்திட்டது.

நாட்டுக் கூத்துத்துறையில் நுழைவதற்கு முன்னர் இளமைப் பருவத்தில் நாடகங்களில் நடித்த மிக இளமைப் பருவம் இனிமையானது. அதுவே பின்னர் இக்கலையில் சிறக்க உதவியது.

கலைஞர் மு.கருணா நிதி எழுதிய "தூக்கு மேடை" நாடகத்தில் எனது பதின்மூன்றாம் வயதில் மேடையில் முத லில் தோன்றினேன். அக்காலந்தொட்டு என் கலைப் பயணம் தொடர்கின்றது. ஈழத்தமிழர்களுக்கே பொதுவான பல இடர்ப்பாடுகள், இடப்பெயர்வுகள் என்பவற்றை எல்லாம் தாண்டி எங்களூரின் கூத்துக்கலை பெருவளர்ச்சி கண்டிருக்கிறது.

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து உதைபந்து அணியில் முன்னணி வீரர் மைக்கல் ஒவன் இல்லை!



உலகக்கிண்ண உதைபந்து தகுதிச் சுற்றுப்போட்டிகளுக்கான இங்கிலாந்து அணியில் முன்னணி வீரர் மைக்கல் ஓவன் இடம்பெறவில்லை.

கஜகஸ்தான், பெலாரஸ் அணிகளுக்கு எதிராக இங்கிலாந்து அணி விளையாடவுள்ள உலகக் கிண்ணத் தகுதிச் சுற்று உதைபந்துப் போட்டிகளில் நியூகேசில் அணிக்கு விளையாடும் முன்னணி வீரர் மைக்கல் ஓவனை இங்கிலாந்து பயிற்சியாளர் ஃபேபியோ கேபல்லோ தேர்வு செய்யவில்லை.

அந்தோரா, குரேஷிய அணிகளுக்கு எதிரான போட்டிகளில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

காயமடைந்திருந்த மைக்கல் ஓவன் தற் போது தொடங்கிய சீசனில் நியூகேசில் அணிக் காக மீண்டும் விளையாடி 6 போட்டிகளில் 5 கோல் க்ளை அடித் துள்ளார். ஸ்டீவன் ஜெரார்ட் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

மைக்கல் ஓவன் தேர்வு செய்யப்படாதது குறித்து பயிற்சியாளர் கேபல்லோவிடம் கேள்வி எழுப்பப்பட்ட போது "89 சர்வதேச போட்டிகளில் 40 கோல்களை அடித் துள்ளார் ஓவன், ஆனால் எப்போதும் கோல்கள் என்பது தேர்வுக் கான அடிப்படையாக இருப்பதில்லை.

ஆட்டத்தில் 89 நிமிடம் களமிறங் கர்த ஒரு வீரர் கடைசி நிமிடத்தில் கோல் களை அடித்ததை நாம் பார்த்திருக் கிறோம். எனவே கோல்கள் மட்டும் போதாது. தற்போது அவர் சிறப்பாக விளையாடுகிறாரா என்பதைப் பொறுத்தே அணியில் இடம்பெறுவார் என்று கேபல்லோ திட்டவட்டமாக பதில்ளித்தார். ★★★

## விளையாட்டு அரங்குகளில்

# வருகிறார் றொனால்ட்டோ



பிரேசில் உதைபந்து நட்சத்திரம் றொனால்டோ தனது காயத்திலிருந்து முழுமையாகக் குணம் அடைந்து மீண்டும் சர்வதேச உதைபந்தாட்டத்தில் பங்கேற்கவுள்ளார் என்று அவரது உடற்பயிற்சியாளர் மாஸியோட்டி தெரிவித்துள்ளார்.

பிரேசில் உதைபந்தாட்டக் கழகமான பிளெமிங்கோ என்ற அணியுடன் பயிற்சியில் ஈடுபட்டுள்ள றொனால்டோ இன்னும் ஒரு மாதத்திலோ அல்லது அதற்கும் குறைவான காலத்திலோ உதைபந்தாட்டத்திற்கு திரும்பலாம் என்று அவர் மேலும் கூறுகையில் தெரிவித்துள்ளார். 2002ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தைப் பிரேசில் வெல்வதற்கு முக்கிய காரணமாக இருந்த றொனால்டோ இத்தாலி உதைபந்து லீக் போட்டியின்போது ஏ.சி.மிலன் அணிக்காக விளையாடிய ஒரு போட்டியில் அவர் காயமடைந்தார். ★

# இசின்பயேவாவிற்கு சிறந்த வீராங்கனை விருது!



ஒலிம்பிக் போல்வால்ட் சாம்பியனும், உலக சாதனையை கையில் வைத்திருப்பவருமான ரஷ்யாவின் இசின்பயேவா இந்த ஆண்டின் சிறந்த ஐரோப்பியத் தடகள வீராங்கனையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஐரோப்பியத் தடகளக் கூட்டமைப்பு நடத்திய இந்த வாக்கெடுப்பில் பொது மக்களும், ஊடகங்களும் வாக்களித்தன. இதில் ரஷ்ய போல்வால்ட் வீராங்கனைக்கு அதிக வாக்குகள் கிடைத்துள்ளன.

செக்.குடியரசின் ஈட்டி எறிதல் வீராங்கனை பார்பாரா ஸ்போடகோவா, பெல்ஜியத்தைத் சேர்ந்த உயரம் தாண்டுதல் வீராங்கனை டியா ஹெல்லெபாட் ஆகியோரை பின்னுக்குத் தள்ளி இசின்பயேவா முன்னணி பெற்றார்.

இந்த ஆண்டில் மட்டும் இசின்பயேவா 4 உலக சாதனைகளை நிகழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்பு 2005 ஆம் ஆண்டும் இசின்பயேவா சிறந்த ஐரோப்பியத் தடகள வீராங்கனையாகத் தேர்வு செய்யப்பட்டார். ★★★

# முதல் 25 பேருக்குள் சச்சின்



விளையாட்டு உலகில் ஆதிக்கம் செலுத்துவோர் பட்டியலில் இந்தியக் கிரிக்கெட் வீரர் சச்சின் 23ஆவது இடம்பிடித்துள்ளார். ஐ.பி.எல் தலைவர் லலித் மோடி, சச்சினை முந்தி 19ஆவது இடத்தைக் கைப்பற்றி சாதித்துள்ளார். நியூயோர்க்கைச் சேர்ந்த "பிஸ்னஸ் வீக்" என்ற பத்திரிகை விளையாட்டு -உலகில் ஆதிக்கம் செலுத்தும் முதல் 25 நபர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் இந்தியாவின் நட்சத்திர வீரர் சச்சின் மற்றும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) தலைவர் லலித் மோடி இடம்பிடித்துள்ளார்.

இது குறித்து இப்பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் "ஐ.பி.எல் அமைப்பு உருவாக முக்கிய காரணமாக இருந்ததை அடுத்து மோடிக்கு 19ஆவது இடம்கொடுக்கப்பட்டுள்ளது. கிரிக்கெட் வரலாற்றின் தலைசிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான சச்சினுக்கு 23 ஆவது இடம் வழங்கப்பட்டுள்ளது" என்கிறது.

இவ்வரிசையில் முதலிடத்தைச் சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (பிபா) தலைவர் ஜோசப் பிளாட்டர் பிடித்துள்ளார். அடுத்த இரண்டு இடங்களைச் சர்வதேச ஒலிம்பிக் குழுத் தலைவர் ஜகூஸ் ரொக் மற்றும் "பார்முலா 1" தலைமை நிர்வாகி பெர்னி எக்கில்ஸ்டோன் ஆகியோர் கைப்பற்றியுள்ளனர். இங்கிலாந்து கால்பந்து நட்சத்திரம் பெக்கம் 5ஆவது இடத்தையும் கிறிஸ்டியானோ ரொனால்டோ 7ஆவது இடத்தையும் இடம் பிடித்துள்ள னர். ரென்னிஸ் உலகில் ஆதிக்கம் செலுத்தி வரும் பெடரருக்கு 9ஆவது இடமும், ஷரபோவாவுக்கு 25 இடமும் ஆவது இடம்கொடுக்கப்பட்டுள்ளது.

# 'ஐ.சி.எல்.' இல் இணைந்த பாகிஸ்தான் வீரர்களின் தடையை நீக்க அந்நாட்டு அரசு ஆலோசனை




இந்தியக் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.) போட்டியில் இணைந்துள்ள பாகிஸ்தான் வீரர்கள் மீதான தடையை நீக்க அந்த நாட்டு அரசு பரிசீலனை செய்துவருகிறது.

கபில்தேவ் தலைமையில் செயற்பட்டு வரும் இந்தியக் கிரிக்கெட் லீக் (ஐ.சி.சி) போட்டிக்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.எல்) அங்கீகாரமளிக்கவில்லை.

ஐ.சி.எல் அமைப்பில் இணைந்துள்ள வீரர்களுக்கு அந்த நாட்டு கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது. அவர்கள் தேசிய அணி மற்றும் உள்ளூர் போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் இலங்கை கிரிக்கெட் சபை ஐ.சி.எல் போட்டியில் ஆடும் வீரர்கள் உள்ளூர் போட்டியில் ஆடத்தடையில்லை என்று அறிவித்தது.

இந்தநிலையில் ஐ.சி.எல் போட்டியில் விளையாடும் வீரர்களுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கப் பாகிஸ்தான் அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் சட்டத்துறை அமைச்சர் பாரூக் முன்னாள் டெஸ்ட் வீரர்களுடன் ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் ஐ.சி.எல் போட்டியில் இணைந்துள்ள முன்னாள் அணித்தலைவர் இன்சமாம் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கூட்டம் முடிந்த பின்னர் அமைச்சர் பாரூக் கூறுகையில்:

"ஐ.சி.எல் அமைப்புடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தைக் காட்டுமாறு வீரர்களைக் கேட்டிருக்கிறோம். அதன் பின்னர் நாங்கள் அந்தப் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் புதிய திட்டம் வகுக்கவிருக்கிறோம். இது தொடர்பாக ஜனாதிபதி ஆசிப் சர்தாரியிடம் பேசவிருக்கிறேன். அவர் பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு மறுமலர்ச்சி அளிக்க ஆர்வமாக இருக்கிறார்" - என்றார். ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரிந்தவர் கூடினர்



தமிழ் சினிமாவில் தன் வில்லத்தனமான நடிப்பால் ரசிகர்களை மிரட்டியவர் பிரகாஷ்ராஜ். எந்தவிதமான பாத்திரமென்றாலும் அற்புதமாகச் செய்துவிடும் பிரகாஷ்ராஜ் மீது யார் கண்பட்டதோ தெரியவில்லை, அவரது குடும்பத்துக்குள் குழப்பம் உருவெடுத்தது. பிரகாஷ்ராஜும் அவரது மனைவி லலிதாகுமாரியும் விவாகரத்துப் பெறுவதற்காக நீதிமன்றம் செல்லக்கூடியளவுக்கு நிலைமை கட்டுமீறிப் போனது.

இந்நிலையில் பிரகாஷ்ராஜின் மனைவியின் தோழியும், நடிகையுமான ஐஸ்வர்யாவின் முயற்சியால் பிரிந்திருந்த பிரகாஷ்ராஜ் தம்பதியினர் மீண்டும் ஒன்றிணைந்துள்ளனர். இப்படிப் பிரிந்தவர்களைச் சேர்த்து வைத்த நடிகை ஐஸ்வர்யா, முன்னர் பிரபல நடிகையாக விளங்கிய லட்சுமியின் மகள் ஆவார்.***




## திரைவிமர்சனம்

# துரை



அதிரடி, அடிதடி என அர்ஜுன் வழக்கமான பட அம்சங்களோடு வெளிவந்திருக்கும் படம் தான் 'துரை'.

வெறுமனே சண்டைக் காட்சிகளை மட்டுமே நம்பியிருக்காது, விறுவிறுப்பான திரைக் கதையையும் கலந்து "துரை" படத்தைத் தந்திருக்கிறார் இயக்குநர் ஏ.வெங்கடேஷ்.

தான் யாரென்ற ஞாபகம் இல்லாதவராய் வருகின்றார் அர்ஜுன். விவேக் நடத்துகின்ற உணவு விடுதியில் வேலை செய்யும் அர்ஜுனைத் துரத்தித் துரத்திக் காதலிக்கிறார் கீரத். இந்தக் காதல் கண்ணாம்பூச்சி ஆட்டத்தின் நடுவே ஒரு முரட்டுக் கும்பலால் தாக்கப்பட்டு, தலையில் காயப்படும்போது, பழைய நினைவுகள் அர்ஜுனுக்கு மீள ஞாபகத்துக்கு வருகின்றன.

அரசியல் கட்சியொன்றில் தொண்டனாக இருக்கும் அர்ஜுனின் விசுவாசத்தை அறிந்து, தனக்குப் பின் அர்ஜுனையே கட்சியின் தலைவராக்குவதற்கு முயல்கிறார் அந்தக் கட்சியின் தலைவர். இதனைப் பொறுக்காத அவரது மகனாலேயே அவர் கொல்லப்பட, அர்ஜுன் தப்பியோடுகின்றார். இறுதியில் வில்லனின் சூழ்ச்சிகளை அர்ஜுன் எப்படி முறியடித்தார் என்பதே துரை படத்தின் திரைக்கதை.

அர்ஜுனும் விவேக்கும் வருகின்ற காட்சிகளெல்லாம் சிரிக்க வைத்தே வயிற்றைப் புண்ணாக்குகின்றன.

சண்டைக்காட்சிகளிலும், நகைச்சுவைக் காட்சிகளிலும் தூள் பறத்தும் அர்ஜுன், சோகக் காட்சிகளில் மட்டுமே கொஞ்சம் தடுமாறுகின்றார். கீரத், கஜாலா இருநாயகிகள் இருந்தாலும், இருவரும் தொட்டுக் கொள்ள ஊறுகாய் போன்றே பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.



இமானின் இசையில் பாடல்கள் வழமை போலவே குத்தாட்டம் போட வைக்கின்றன. ஏகப்பட்ட பழைய அம்சங்களை மெருகூட்டி, காதல், அரசியல், ஆள்கடத்தல், அடிதடி எனக் கலந்துகட்டி வணிக ரீதியான படத்துக்குத் தேவையான விடயங்களைத் தந்திருக்கிறார் இயக்குநர் ஏ.வெங்கடேஷ்.

ஒரு விறுவிறுப்பான ஆங்கிலப்படம் பார்த்த திருப்தியைத் தருகின்றது துரை!*


# தாமதமான 'படிக்காதவன்'



திருவிளையாடல் ஆரம்பம், பொல்லாதவன், யாரடி நீ மோகினி போன்ற படங்களின் தொடர் வெற்றி மழையில் நனைந்து கொண்டிருக்கும் தனுஷின், 'படிக்காதவன்' திரைப்படம் தீபாவளிக்கு வெளிவரமாட்டாதென்று கூறப்படுகின்றது.

தலைநகரம், மருதமலை போன்ற வெற்றிப் படங்களைத் தந்த சுராஜின் இயக்கத்தில் தனுஷ், தமன்னா, விவேக் போன்றோர் நடித்துள்ள படமே 'படிக்காதவன்!' தீபாவளிக்கு வெளிவருவதாக இருந்த இப்படத்தின் வெளியீட்டுத் திகதி திடீரெனப் பிற்போடப்பட்டுள்ளது. இம்முறை தனுஷ் ரசிகர்களுக்கு ஏமாற்றமான தீபாவளிதான்!

# நடிப்பாலும் குரலாலும் ரசிகர்களை ஈர்த்த பூர்ணம் விஸ்வநாதன்



பிரபல குணச்சித்திர நடிகரும், நாடக இயக்குநருமான பூர்ணம் விஸ்வநாதன் தன்னுடைய 78 ஆவது வயதில் அண்மையில் காலமானார்.

தமிழ்த் திரையுலகில் மறக்க முடியாத சில நடிகர்களுள் முக்கியமானவர் பூர்ணம் விஸ்வநாதன். 1945 இல் 'ஆல் இந்தியா ரேடியோவில்' செய்தி வாசிப்பாளராகத் தன் பணியைத் தொடங்கிய விஸ்வநாதன், தன் குரல் வளத்தால் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தவர்.

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் அடைந்த செய்தியை 'ஆல் இந்தியா ரேடியோவின்', தமிழ்ச் செய்தியில் முதன்முதலில் கிழக்காசிய நாடுகளுக்கு அறிவித்த பெருமை இவருக்கு உண்டு.

தமிழ் சினிமாவில் ரசிகர்களின் கண்களைக் குளமாக்கும் இரக்க சுபாவமுள்ள பல பாத்திரங்களில் நடித்த பெருமையும் இவரைச் சாரும்.

ரஜினியுடன் இவர் வித்தியாசமாக நடித்த தில்லு முல்லு, நினைத்தாலே இனிக்கும் படங்கள் இன்றும் மறக்க முடியாதவை.

கமல்ஹாசனுடன் மகாநதி, மூன்றாம் பிறை படங்களில் மிக அற்புதமாக நடித்து ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்றார்.

விதி, வறுமையின் நிறம் சிவப்பு, மூன்றாம் பிறை, புதுப்புது அர்த்தங்கள், கேளடி கண்மணி, ஆண்பாவம் என இவர் பங்கேற்ற மிகச் சிறந்த படங்களின் எண்ணிக்கை ஏராளம்.

சினிமாவைத் தவிர, நாடகத்திலும் மிகுந்த ஈடுபாடு காட்டியவர் விஸ்வநாதன். தனது பூர்ணம் தியேட்டர்ஸ் மூலம் பல நெகிழ்ச்சியூட்டும், அர்த்தமுள்ள நாடகங்களைத் தந்தவர்.

பூர்ணம் விஸ்வநாதனின் மரணம் தமிழ்க் கலைத்துறைக்குப் பேரிழப்பாகும்.***

# மணிரத்தினம் படத்தில் 'விக்ரம்'



ஒரு வழியாகக் 'கந்தசாமி' படத்திலிருந்து மீண்டு, தன்னுடைய அடுத்த படத்துக்குத் தயாராகிவிட்டார் சீயான் விக்ரம்.

விக்ரமின் புதிய படம் ஹிந்தி, தமிழ் என இரு மொழிகளில் வரப்போகின்றது. படத்தை இயக்கப்போவது தமிழ்த் திரையுலகின் முன்னணி இயக்குநரான மணிரத்னம்.

ஐஸ்வர்யாராய், அபிஷேக் பச்சன், ப்ரியாமணி போன்றோருடன் விக்ரம் நடிக்கும் புதிய படம் ராமாயணக் கதையைத் தழுவியதாக இருக்கும் என்று சொல்லப்படுகின்றது. படத்திற்கு ராவண், அசோகவனம், வனவாசம் போன்ற பெயர்கள் பரிசீலனையில் உள்ளன. இந்தப் படத்தில் ஹிந்தியில் வில்லனாகவும், தமிழில் நாயகனாகவும் விக்ரம் தன் நடிப்பிற்குத் தீனி போடவுள்ளார்.

கலக்குங்க சீயான்!***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்.பல்கலைக்கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் 'உதயன்' ஊடக அனுசரணையுடன் மக்கள் வங்கி யாழ்.பல்கலைக்கழக கிளையின் ஆதரவுடன் அமரர் ஏ.எவ். செபமாலைமுத்து ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு:-

- காலை 8.30 மணி-யாழ்.நீதிமன்றம் எதிர் மக்கள் வங்கி.
- மு.ப.11 மணி-சுன்னாகம் சிலிங்கோ எதிர் தெல்லிப்பழை பிரதேச செயலகம்.
- பி.ப. 1மணி-தேசிய சேமிப்பு வங்கி எதிர் சிலிங்கோ கிராமின்.
- பி.ப. 3 மணி-சங்கானை ப.நோ. கூ. சங்கம் எதிர் செலான் வங்கி. (1)

* * *

யாழ்ப்பாணம், ஒக்.12

உலக தபால் தினத்தை ஒட்டி தேசிய சேமிப்பு வங்கியின் அனுசரணையுடன் யாழ்.தபாலக விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்டுவரும் அரச திணைக்களங்கள், வங்கிகள், கூட்டுஸ்தாபனங்களுக்கு இடையிலான மென்பந்து, கரப்பந்து சுற்றுப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இறுதியாட்டங்களில் மோதவுள்ள அணிகள் வருமாறு:-

- கரப்பந்து காலை 8.30 மணி- யாழ்.தபால் திணைக்களம் எதிர் வலி. கிழக்கு பிரதேச சபை.
- மென்பந்தாட்டம்-பி.ப.1 மணி- யாழ்.தபால் திணைக்களம் எதிர் யாழ். போதனா வைத்தியசாலை.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடபிராந்திய தபால் மா அதிபர் வீ.குமரகுருவும் கௌரவ விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கி யாழ்.முகாமையாளர் வி.அருளானந்தமும் கலந்து கொள்வர். (1)

## கலைஞர்களின்....

(09ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**கே:** கூத்துக்குழுவின் தற்போதைய பணிகள் பற்றிக் கூறுங்களேன்?

**ப:** நாட்டின் சூழ்நிலை காரணமாக கூத்துக்குழுவின் செயற்பாடு சற்றுப் பின்தங்கிய போதும் அது உயிர்ப்படைய எமது ஊரைச்சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் முன்வந்து திறம்படச் செய்து மெற்றாஸ்மெயிலின் பாரம்பரிய மேம்பாட்டுக் கலைக்கழகத்திற் முதற் பரிசைப் பெற்றனர். கூத்துக்குழு புதிய உத்வேகம் அடைந்தது. அப்பொழுது நான் ஊரில் இல்லை. இடம்பெயர்ந்திருந்தேன். 2002 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் செயலாளராக இருந்து குழுவை இயக்கி வருகின்றேன். இளைஞர்களின் அக்கூத்தை வீடியோக் காட்சியாகக் கண்டு மகிழ்ந்தேன்.

நாட்டுக் கூத்துக் குழுவுக்கு இன்னமும் நிறையப் பணிகள் உண்டு. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதற்கு பொது அமைப்புக்கள் உதவ வேண்டும்; அரச உதவி வேண்டும். இவை இல்லாதபோது பணிகள் சிறக்க வாய்ப்பில்லை. எமது கூத்துக்குழுவுக்கு பிரான்ஸ் நாட்டிலும் கிளைகளுண்டு. அங்கும் இப்பணி தொடர்கிறது.

**கே:** ஒருகாலத்தில் வெறும் கூத்து என்று பேசப்பட்ட இந்தப் பாரம்பரிய பண்டைய கலைக்கு உரமூட்டியவர் பலரிருப்பினும் ஒருசிலர் உங்களோடு துணை நின்றிருப்பார்கள். அவர்களைப் பற்றிச் சிறிது கூறினால் .....

**ப:** நிச்சயம், சார்பில்லாமல் எவரும் வளர முடியாது; எதனையும் செய்யமுடியாது. அம்மையப்பன் நாடகத்தில் வேதாளமாக நடிக்க வைத்த பொன்னையா இராசகோபால் (வீரகேசரி ஆசிரியராகவும் மற்றும் தினக்குரலின் பிரதம ஆசிரியராகவும் விளங்கியவர்) அவர்களால் நெறிப்படுத்தப்பெற்ற ''நண்பன்'' நாடகத்திலும் நான் காளியின் பாத்திரத்தில் நடித்தேன். அமரர் பண்டிதர் க.மயில்வாளனாரால் வசனம் எழுதப்பெற்ற சகுந்தலை நாடகத்தை நெறியாளுகை செய்தும் நடித்தும் உள்ளேன். நாட்டுக் கூத்து அபிவிருத்திக்குழுத் தலைவராக நீண்ட காலம் பணியாற்றிய கலாபூஷணம் அ.முருகவேள் மற்றும் மத்தள வித்தகர்கள், அண்ணாவியார், பிற்பாட்டுப் பாடுபவர்கள் இவர்களெல்லாம் என்சார்புகள். குறிப்பாக மருதப்பு வல்லிபுரம், முருகுப்பிள்ளை விக்னேஸ்வரநாதன், எல்லிப்போலர் செல்லப்பா, செல்லப்பா நடராசா பிற்பாட்டுக்காரரான சுப்பிரமணியம் அமிர்தலிங்கம், வேலாயுதம் தவநிருபசிங்கம், அண்ணாவியார் வேலுப்பிள்ளை நாகலிங்கம் போன்றோரைக் குறிப்பிடலாம். இன்னும் துணைநின்ற மற்றும் பல கூத்துக் கலைஞர்களையும் என்சார்புகள் என்பேன்.

**செவ்வி: க.மணிமாறன்**

பல தரவுகளைத் தொகுத்து வெளிவரவிருக்கும் ''வட்டுக்கோட்டைக் கூத்துக்களும் கலைவடிவங்களும்'' என்னும் நூல் என்கலைப் பணிகளின் பேறாக அமையும் என நம்புகிறேன். மேலும் எங்களூர் இளஞர்கள் இத்துறையைக் கைவிடமாட்டார்கள். என் மகனான மணிவண்ணனும் இத்துறையிற் வாரிசாக மிளிர்வான் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

நான் ஊரில் இல்லாத வேளையில்அதாவது இடம்பெயர்ந்திருந்த காலப்பகுதியில் எமது கூத்தின் தரத்தைக் காப்பாற்றிய உங்களையும் உங்கள் தோழர்களையும் மனமார நேசிக்கின்றேன். *

### திருத்தி வாசிக்கவும்

10.10.2008 ஆம் திகதிய உதயன் நாளேட்டில் 10ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள ''பாராட்டி வாழ்த்துகிறோம்'' என்ற விளம்பரத்தில், வாழ்த்துபவர்கள் என்ற தலைப்பில் வெளியாகியுள்ள பெயர்களில் சின்னம்மா- சண்முகநாதன் (ஜே.பி) என்று வந்திருப்பது தவறாகும்.

அதனை

சின்னமாமா- சண்முகநாதன் (வே.பி) என்று திருத்தி வாசிக்கவும்.

## அமெரிக்காவை....

[09ஆம் பக்கத் தொடர்ச்சி..]

இரண்டு லட்சம் பேருக்கு முன் அவர் ஆற்றிய உரை சரித்திரப்பிரசித்தி பெற்றது. அந்த உரையில் தான் கனவு ஒன்று காண்பதாகவும் அக்கனவில் அமெரிக்க நாட்டின் அடிமை வியாபாரம் செய்பவர்களின் பிள்ளைகளும், அடிமைகளின் பிள்ளைகளும் வெகுவிரைவில் சகோதரத்துவ மேசையில் சமனாக இருப்பார்கள். இனிவரும் காலத்தில் தனது நான்கு பிள்ளைகளும் நிறத்தால் கணிக்கப்படாது குணத்தால் கணிக்கப்படும் ஒரு தேசத்தில் வாழ்வார்கள் எனப் புலப்படுவதாகவும் கூறினார். அவர் ஆற்றிய சேவைக்காக அவருக்கு 1964ஆம் ஆண்டு நோர்வேயில் ஒஸ்லோ என்னும் இடத்தில் நோபல் பரிசு கிடைத்தது. அவர் 1968ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி தமது 39 ஆவது வயதில் மெம்பிஸ் என்னும் இடத்தில் துப்பாக்கிக்கு இரையானார்.

இன்று நாங்கள் அமெரிக்காவுடன் சமத்துவத்துடனும் சகோதரத்துடனும் பழகுவதற்கு அத்திவாரம் இட்டவர்கள் ஆபிரகாம்லிங்கனும் மாட்டின்லூதருமே ஆவர். அவர்கள் மானிடத்தின் மகத்துவத்திற்கு ஆற்றிய பணியினாலே தான் ஒபாமா என்னும் கறுப்பு இனத்தவர் ஜனநாயகக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் பங்குபற்றுவதும் முன்னைய ஜனாதிபதி கிளின்டனின் மனைவி ஹிலாரி அவருக்கு ஆதரவு திரட்டுவதும் நமது கண்முன்னால் அரங் கேறி வருகின்றது. ஒபாமா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் அது லிங்கனின் - மாட்டின் லூதர்கிங்கின் வெற்றி என்றே சொல்ல வேண்டும். ★

## கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக்.12

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு உலக உணவுத் திட்ட நிறுவனத்தினரால் எதிர்வரும் புதன் கிழமை நடத்தவிருந்த கூட்டம் பிற்போடப்பட்டுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (202-207)


### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன்,நல்லூர். (79117)

### விற்பனைக்கு

இரண்டு மாதம் நிரம்பிய அல்சேஷன் பெண் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. (சகல மருந்துகளும் வழங்கப் பட்டது).

தொடர்பு: இல.56, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். (79151)

### விற்பனைக்கு

கருங்கல்லுச் சல்லி, வைரக் கல்லுச்சல்லி மற்றும் 32' நீளமுள்ள முக்கோண அமைப்பான மூன்று கேடர்கள் விற்பனைக்குண்டு.

தொடர்பு: இல.61, இராமலிங்கம் வீதி,முடமாவடி.

### வீடு தேவை

சிறிய குடும்பத்திற்கு சகல வசதிகளும் கொண்ட வீடு நல்லூர் சுற்றாடலில் உடன் தேவை.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல.
021 2228371. (79164)

### வாடகைக்கு

மில்லாக இயங்கிய கட்டடம் கோப்பாய் பருத்தித்துறை வீதியில் மின்சார வசதியுடன் வாடகைக்கு உண்டு. கடையை எந்தத் தேவைக்கும் பாவிக்கலாம்.

க.காங்கேசன், நீர்வேலி தெற்கு.
0779195324. (79148)

### மணமகன் தேவை

எங்களிடம் ஆஸ்திரேலியா (PR உள்ள) வதிவிடம் உள்ளB.Sc., பெண்ணுக்கு ஆயிலியம் 4ஆம்பாதம் செவ்வாய்க்குற்றமில்லை. படித்த தகுதியான (காரைநகர் விரும்பத்தக்கது) மணமகன் தேவை.

தொடர்பு: LUXMY NARAJANA,
MARRIAGE SERVICE,
NO: 30, MAARYAMMAN LANE,
THIRUNELVELY.
T.P.No: 0771971667 FAX:0212223620

### விற்பனைக்கு

வெஸ்பா ஸ்கூட்டர் [இத்தாலி], கட்டில்கள் [டபிள், சிங்கிள்], 100W, AMP ஸ்பீக்கர் Box 02,10" என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: சி.சி.நாதன்
இல.16/3, விதானையார் வீதி,கண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
T.P: 0776146434 (79140)

### காணி விற்பனைக்கு

சுண்டிக்குளி பாண்டியன்தாழ்வில் சந்தான மாதா கோயிலுக்கு அருகில் 1 3/4 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை.

தொ.பே.எண்: 0774987996

தொடர்புகளுக்கு: த.ஞானப்பிரகாசம்
44/3, கோவில்புத்துறை வீதி, கண்டிக்குளி. (79154)

### விற்பனைக்கு

DENYO (MADE IN JAPAN) 25 K.W. உற்பத்தித்திறன் கொண்ட நல்ல நிலையிலுள்ள டீசல் ஜெனறேட்டர் (Sound Proof 25) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 59 செல். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். Tel: 0777734083 (79039)


## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
23.03.1923

விண்ணில்
14.10.1997

திதி: திரயோதசி
(12.10.2008)

### திருமதி நாகலிங்கம் கண்மணி


பாசமதால் கட்டியாண்டு பண்புடனே வளர்த்தெடுத்து
பார்த்தே நாம் சிறக்க பல நலன்கள் காட்டிவிட்டு
நேசமுடன் கோயிலதாய் எம்நெஞ்சைக் கொண்டவளே!
நிலவுலகை நீவிடுத்து நெடுந்தூரம் சென்றிடினும்
மாசுபடா உங்கள் நினைவுகளை மனமதிலே சுமந்து கொண்டு
மக்கள்நாட விருப்புடனே ஆண்டு பதினொன்றின் நினைவினிலே
ஆசைமிகு அம்மாவின் அகங்குழைந்து தங்களது
பாதமலரை எங்களது கண்ணீரால் நனைக்கின்றோம்.

என்றும் நினைவுடன்:
நா.தெட்சணாமூர்த்தி (மகன்),
திரு.திருமதி நிஷாகரன் மலர்மதி,
திரு.திருமதி நிஷாந்தன் ஸ்ரீமகள்.

145/3, பிரப்பங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 222 8169 (79157)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசலிங்கம் கமலாம்பிகை



இல.29, காரைக்காட்டு லேன், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் கமலாம்பிகை (09.10.2008) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர்-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், சத்தியலிங்கம், தயானலிங்கம் (வவுனியா), கமலவதனா, சுந்தரலிங்கம் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயும், பிரேமா, அற்புதசோதி, கிருபா, ஐராங்கனி ஆகியோரின் மாமியும் உஷாகாந்த் (ஜேர்மனி), சுகிர்தா (மாணவி), லிங்கையா (மாணவி), சர்மிளா, சுவேயா (டாக்டர்- அமெரிக்கா), சுகந்தன் (மாணவன்), மயூரன், பிரியங்கா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

29, காரைக்காட்டுலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (79170)

தகவல்:
சத்தியலிங்கம் (மகன்),
பிரேமா (மருமகள்).

### தியாகராஜா சுரேந்திரன் (சுரேன்)

(B.Sc.,Dip. in IT, ஆசிரியர், கைலன்ஸ் கல்லூரி, ஹட்டன்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஹட்டனை வதிவிடமாகவும் கொண்ட தியாகராஜா சுரேந்திரன் (08.10.2008) புதன் கிழமை காலமானார்.

அன்னார் தியாகராஜா - ருக்குமணி (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சி.நடராஜா மற்றும் அன்னபூரணி தம்பதியரின் அன்புமருமகனும் உஷாவாணியின் (ஆசிரியை, புனித மரியாள் வித்தியாலயம், யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும் தயாபரனின் (முகாமையாளர், செலிங்கோ இன்சூரன்ஸ், கொழும்பு) அன்புச் சகோதரனும் திருமதி த.நாகலதா (ஆசிரியை, சைவ மங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை), குகநேசன் (யாழ்.பெற்றோலியக் கூட்டுத்தாபனம்), சிவநேசன் (உஷா ஏஜன்சி, யாழ்ப்பாணம்), அருள்நேசன் (மிருகவைத்தியர், கனடா), கலைவாணி (தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்), பரமேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் சுகந்தி, சுகந்தி (N.S.B திருநெல்வேலி), அருளாசினி (கனடா) ஆகியோரின் சகோதரனும், சாய்சுருதி, சாய்ஹரிணி ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, மு.ப. 10 மணியளவில் கல்கிசை பொது மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு.
0777204959 (79163)

தகவல்:
தி.தயாபரன்
(சகோதரன்).

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி சுப்பிரமணியம் கண்மணி
(மைனாமகள்)

தோற்றம்: 10.03.1912
மறைவு: 12.09.2008



அன்னையே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்மை
விட்டுப் பிரியாது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

3ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடுகளின் பெயரில் நாடுகள்

1. மரவீடு - பிலிப்பைன்ஸ்
2. புல் வீடு - ஹவாய்
3. பற்றைவீடு - அவுஸ்ரேலியா
4. மூங்கில் வீடு - கலிபோர்னியா
5. செங்கட்டி வீடு - சீனா
6. சுரங்க வீடு - சைபீரியா
7. பனிக்கட்டி வீடு - கிறீன்லாந்து
8. குடிசை வீடு - வடஅமெரிக்கா
9. மரக்குற்றி வீடு - நியூகினியா
10. காகித வீடு - ஜப்பான்



# கல்வியின் சிறப்பு

உலகில் இருவகைச் செல்வங்கள் உள்ளன. ஒன்று கல்விச் செல்வம், மற்றையது பொருட்செல்வம்.

மனிதரிடத்துள்ள அறியாமையைப் போக்கி அறிவு ஒளி ஊட்டுவது கல்வி. கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு. கற்றறிந்தவனே கண்ணுடையவனெனக் கருதப்படுவான்.



" எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்று நம்முன்னோர் கூறியுள்ளனர். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கற்க வேண்டியவற்றைக் கற்று, கற்ற நெறிப்படி ஒழுக வேண்டும். இதனையே திருவள்ளுவரும்,

**" கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக "** என்றார்.

கற்க வேண்டியவற்றை நாம் கருத்தூன்றிக் கற்க வேண்டும். கற்கவேண்டிய பருவத்திற் கற்க வேண்டும். இளமையிற் கற்பதே சிறந்த செயலாகும். " இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்னும் முது மொழியை நாம் மறக்கக்கூடாது. எல்லாவித அழகுகளிலும் ஒருவனுக்குக் கல்வி அழகே சிறந்த அழகாகும். கல்வி அழகினைப் பெறுவதற்கு நாம் சரியாக முயற்சிக்க வேண்டும்.

கற்பதற்கு வயதுக் கட்டுப்பாடே இல்லை. வாழ்நாள் முழவதுமே கற்கலாம். "படை ஏறினும் ஏடது கைவிடேல்" என்னும் கூற்றை நாம் மறக்கக்கூடாது. அழியாத செல்வமான கல்விச் செல்வத்தைப் பெற்று இவ் வையகத்து வாழ்வாங்கு வாழ நாம் முயற்சிப்போமாக!

**நிவர்த்திகா சிவராசா,**
தரம் - 5 ஏ, யா/கொற்றாவத்தை
அ/மி/த/க/பாடசாலை.



# மாயத்தீவில் மந்திரக் கிழவி 08

சிறுவர் மர்மத்தொடர் - அம்புலி

அந்த அலறலைக்கேட்டு நத்திவர்மன் திடுக்கிட்டான். ஆனால் அப்போது மந்திரக் கிழவி பெரிதாகச் சிரித்தாள்.

"அந்த அலறல் ஒலி உன்னுடைய தளபதியின் மரண ஒலிதான்!" என்று எக்காளத்தொனியோடு கூறினாள்.

"உனக்கு இப்போது என்னதான் வேண்டும்?" என்று ஓரளவு துணிச்சலை வரவழைத்துக் கொண்டு நந்திவர்மன் கேட்டான்.

"அப்படி வா வழிக்கு! உன்னிடம் எனக்கொரு தேவை இருக்கிறது. அதைப் பெறுவதற்காகத்தான் நான் மாய ஒலியை எழுப்பி உன்னை இங்கே வரும்படி செய்தேன்"

என்றாள் மந்திரக் கிழவி.

"ஓ! இதெல்லாம் உன் சூழ்ச்சிதானா? உன்னை என்ன செய்கிறேன் பார்!"

என்று ஆத்திரத்தோடு வாளை உருவிப் போனான் நந்தி வர்மன். ஆனால் அவனால் வாளை உருவ முடியவில்லை. உடலோடு ஒட்டியது போல உறையைவிட்டு வெளியே வாள் வரவில்லை.

"என்ன தயக்கம் நந்தி வர்மா! சீக்கிரமாக என் தலையை அறுத்துவிடு! ஐயோ பாவம்! வாள் வெளியே வரவில்லையா?" வரவர மாயக்கிழவியின் ஏளனமும், சிரிப்பும் கூடிக் கொண்டே சென்றது. திடீரென ஏதோ நினைத்தவளாய்,

"சரி நந்திவர்மா! என்னோடு விளையாடுவதை இத்தோடு நிறுத்திக் கொள். உன்னை நான் ஏன் வரவழைத்தேன் தெரியுமா?" என்றாள் கிழவி.

"அதை நீ சொன்னால் தானே தெரியும்?" என்று சினத்தோடு கூவினான் நந்திவர்மன். அவனைத் தன்னுடைய சூழ்ச்சியால் வரவரழைத்த காரணத்தை மாயக்கிழவி விபரிக்கத் தொடங்கினாள். அதனைக் கேட்கக் கேட்க நந்திவர்மனுக்கு முதுகுத் தண்டு சில்லிடத் தொடங்கியது.

(தொடரும்)

# ந ட் பு

★"நன்று" என்று நகிழ்ந்திடவே
"நட்பு" அதனை வளர்த்திடுமாம்!

★நாடும் நம்மை மதித்திடவே
நல்ல நட்பை நாடிடுவோம்!

★நன்மை தன்னை பெற்றிடவே
நன்றாய் ஒன்றாய் கூடிடுவோம்!

★நாட்டில் ஒற்றுமை நில்விடவே
நண்பர்களாக மாறிடுவோம்!

★நண்பர்களாக இணைந்திடுவோம்
நல்லவர்களாக வாழ்ந்திடுவோம்!

ச.பங்கஜா, தரம் 7,
யாழ். விக்ரோறியாக் கல்லூரி.



# யா/வேலணை மத்திய கல்லூரி



வேலணை மண்ணின் - ஓர்
அற்புத அருங்கொடை

அன்புடன் அரவணைக்கும் அதிபர்
பண்புடன் கல்விபுகட்டும் ஆசிரியர்

இன்பமுடன் கல்வி பயிலும் மாணவரை
பல்கலைக்குச் செல்ல வைக்கும் பாடசாலை

கடமையில் கண்ணியமாய் திகழும்
ஒழுக்கத்தில் பார்போற்றும்
மாணவரை உருவாக்கும் அன்புச் சாலை.

ஜெ.ஜெசிந்,
யா/வேலணை
மகா வித்தியாலயம்.

# விடுகதை சொல்லப்போறோம்...

1. பல்லில்லாத வெள்ளையன் காட்டிலும், மேட்டிலும் வாய் விட்டுச் சிரிக்கிறான் அவன் யார்? — தேங்காய்
2. கத்தரிபோல் இலை இருக்கும். கவரி மான் பூப்பூக்கும். தின்னப் பழம் பழுக்கும். தின்னாத காய் காக்கும். அது என்ன? — பருத்தி
3. உருவம் இல்லாத மனிதன், உலகம் எல்லாம் சுற்றுகின்றான். அவன் யார்? — தண்ணீர்
4. இந்தத் தேனை சுவைக்க முடியாது. அது என்ன தேன்? — வந்தேன்
5. வயலை உழுதவன், ஊதியம் வாங்கவில்லை. அவன் யார்? — மண்புழு
6. கிணற்றைச் சுற்றி ஒற்றை மரம். அது என்ன? — கண் இமை
7. உடம்பில்லா மனிதன் ஊர் முழுவதும் சுற்றுவான். அவன் யார்? — புகை
8. அந்தரத்தில் தொங்குவது அரக்கனின் தலை. அது என்ன? — திருஷ்டி பூசணி
9. ஆளில்லாத கிணற்றில் மயில் இறங்கி ஆடுது. அது என்ன? — மோர் கடையும் மத்து
10. உண்பதை நினைப்பான். உதையை மறப்பான். உயிரையும் கொடுப்பான். அவன் யார்? — நாய்

# மாணவர் தூரிகை

சி.சிவராகவன்,
தரம் - 8 ஏ,
யா/தமிழ்க் கந்தையா வித்தி.



க.பவிராம்,
சென்.ஜோன்ஸ் கல்லூரி.



சு.விஜிதா,
தரம்8 ஏ, மகாஜனக் கல்லூரி.



# நீங்களும் எழுதலாம்

(தரம் 5 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

**மாணவர்களே!**

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..........................
தரம் :-..........................
பாடசாலை :-..........................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.................... ....................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூனல்....

(07 பக்கத் தொடர்ச்சி....)

எழுதுவதைவிட காதுள் விட்டுக் குடைவதற்கே இவர் பென்சிலை அதிகம் பாவிப்பது. சுற்றுக் கதவுள் அய்யா வந்திருப்பதை சல்லடை காம்பிரா ஆள்கள் கவனிக்கவில்லை.

சல்லடைக் காம்பிராவின் மணம் மூளையைக் குடைகிறது. மேல் மாடியில் வீசும் வாடும் இலையின் போதை மணமோ, அறைப்பறையின் திண்மையான வாசனையோ, அடுப்பறையின் சுடுமணமோ அல்ல சல்லடை அறையின் நறுமணம்.

அத்தனை மணமும் திரிந்து அர்ப்பணிக்கும் ஒரு அழகுமணம். வடித்துக் குடிக்கும் தேயிலையின் வாசனை, ரசித்து நுகர்வோருக்கு அந்த மணமே ஒரு அலாதி இன்பம்.

'குச்சி பொறுக்கும்' பெண்கள் வரிசையாக அமர்ந்து, சல்லடையில் இடப்போகும் தேயிலையில் உள்ள குச்சி, தண்டு, சிறுச்சிறு கல், அசடு ஆகியவற்றைப் பொறுக்கிக் கொண்டிருக்கின்றனர். சன்னமான வேலைதான் என்றாலும் சலிப்பூட்டும் வேலை. அவர்கள் உட்கார்ந்தபடியே அடிக்கொருதடவை கால் மாறிப் போடுவதும், இடம்மாறி அசைவதும் இருப்புகொள்ளாத நிலைக்கோர் எடுத்துக் காட்டு.

சலித்த தேயிலை; ஆரஞ்சுபெக்கோ; புறோக்கன் பெக்கோ; பெனிங்ஸ் என்று தனித்தனி பெயர்களுடன் குவிக்கப்பட்டிருக்கிறது.

பசுங்குன்றுகளிலிருந்து வந்த பசிய இலை பாடம் பண்ணப்பட்டு, பதம் பெற்று கைபட்டு கருங்குன்றுகளாய் குவிந்து கிடக்கின்றன.

குவிந்து கிடக்கும் தேயிலையைக் கூடையில் அள்ளித் தலையில் சுமந்து நடந்து 'பின்' (Bin) களில் கொட்டுகின்றனர் சிங்களப் பெண்கள்.

தலைச்சுமையைப் பற்ற, தூக்கிய கைகளிடையே தெரியும் எடுப்பு, சட்டையையும் மீறி பற்றையாய் நனைந்து தெரியும் அக்குளின் வியர்வைப் பிசுக்கு, இடுப்புக்குக் கீழ் கட்டியிருக்கும் இறுக்கமான கம்பாயத்திடை இடுப் பொடிய அரக்கி நடக்கும் யானை நடை, அத்தனையிலும் ஒரு முரட்டுத்தனமான அழகு!

சல்லடைக் காம்பிரா ஆள்கள் எல்லோருமே ஆங்கிலோ இந்தியர்களைப் போலத்தான், பொன் மயிரும் பொன் மேனியுமாக.

அத்தனையும் தேயிலையின் தூசி. சல்லடை அறையின் அருகே - வெளியே - இரண்டாள் உயரத்திற்கு வளர்ந்து நிற் கும் சப்பாத்துச் செடி வேலிகூடப் பச்சை விட்டு 'மஞ்சள் மசேல்' என்று தூசி பூசிக் கிடந்தது.

'பெனிங்சின்' பெருமணத்தில் மனம் லயித்து இரு கைகளாலும் அந்தக் கருங்குவியலை அளைந்து கொண்டிருந்தவன் சிரித்துக் கொள்கிறான்.

கடற்கரை மணலே வாரி இறைத்து கரம் கொட்டிச் சிரிக்கும் சிறார் நிலை.

ஐந்துக்கோ ஐந்தரைக்கோ அந்த அறையைவிட்டு வெளியே நடந்துவிட்ட பிறகு அந்த தேயிலையை அவனால் பார்க்கத்தான் முடியுமா?

கண்வெடித்து விடுமளவு மின்னும் அக்குவியலை வெறித்துப் பார்த்தான். அதை அப்படியே 'நறநற'வென்று தின்று விடலாமா என்று ஒரு அசுர ஆசை. இதை வடித்துக் குடித்தால் எப்படி இருக்கும்-?

அவனுக்குத் தெரியாது.

கொட்டை பறித்து, தவறணை காத்து, கன்று நாட்டி, களை பறித்து, கவ்வாத்து வெட்டி, கொழுந்தெடுத்து இதோ இப்ப டிக் குவித்து வைதது, அடைத்தும் அனுப் புவது அவன். ஆம்! அவனது கூட்டம்.

தேயிலைக் குவியலுள் புதைந்து கிடந்த தனது வலது கையை வெளியே இழுத்துப் பார்க்கின்றான். வியர்வையில் ஒட்டிக் கிடக்கும் ஓரிரு கருந்தூளுடன் மொன்னையாய்க் கிடக்கிறது அது.

சென்ற ஆண்டுவரை அறைப்பறை ஆளாக அதுவும் முதல் நம்பர் ஆளாக இருந்தவன் எப்படியோ றோதையில் கையை மாட்டிக்கொண்டான்.

முடுக்கி விட்டபின் யந்திரம் முதல் நம்பர் ஆள், மூன்றாம் நம்பர் ஆள் என்றா பார்த்துக் கொண்டிருக்கும்?

பலன்-நசுங்கி சப்பையாய் இழுபட்ட நாலு விரல்கள் வெட்டப்பட்டன.

உழைப்பு தந்த வடு. ஆனால் அந்த உழைப்புத் தரும் உற்பத்தி......! அது தரும் ஊதியம்........! வடுமட்டும்தான் வலது கையில்.

'சீ! இது என்ன தேத்தண்ணியா...... கழனித் தண்ணியாட்டம்........ மனுசன் குடிப்பானா........?

அன்றொரு நாள், தனக்குத் தேநீர் கொடுத்த அடுதத வீட்டுப் பெண்ணைப் பார்த்து கேலியாகக் கூறினான் அவன்.

-அவளைக் கேலிசெய்து, கறுத்த அம்முகத்தில் நாணம் செங்கோடிட்டு நாசி புடைப்பதை இன்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம் போலி ருக்கும் அவனுக்கு.

'ம் ம் ம், நீங்களெல்லாம் இஸ்டோர் வேலை, ஒன்னாம் நம்பர்லே குடிப்பீங்க, எங்களுக்குக் கெடைக்கின்றது இது தானே......'

'ஹ்க்கும்' ஒரு விரக்தி முனகல்!

'எங்கூட்டுக்காரருக்கும் அரண் மலையிலே' வேலை' என்பது போலத்தான்.

முனகிக் கொள்ளுகின்றான்.

உரத்துக்குப் போடத்தான் லாயக்கு என்று ஒதுக்கப்பட்டுவிடும் கடைசி ரகத் தூசிக்கும் ஒரு இழை உயர்ந்த தூசிதான் அவர்களுக்குக் கிடைப்பது.

அதுவும் தலைக்கு ஒரு றாத்தல் - றாத்தல் நாற்பது சதம் - கூப்பனுக்கு அரிசி வாங்குவது போல.

'இந்த எளவுல சாயமா இருக்கு...... பொறுத்த பிடியா நாலுபிடி போட்டாத்தான் கொஞ்சம் உண்டென சாயம் எறங்கும், அதுவும் ரெண்டாவது தரம் ஒன்றும் இருக்காது.

தூள் கொடுக்கும் இடத்தில் அடிபடும் பேச்சுக்கள்.

ஒரு றாத்தல் எத்தனை நாளைக்குப் பாவிக்கலாம். முடிந்த பிறகு பக்கத்து வீட்டில் கொஞ்சம் ஓசி. அதுவும் நடந்த பிறகு மயிர் குத்திட்டு நிற்கும் அக்குளிர் காலையில் 'சுள்' ளென்று ஒரு டம்ளர் சுடுநீரை உள்ளே ஊற்றிக் கொண்டு ஓடி வருபவர்களும் உண்டு.

அதே அந்த இழவுத் தூளைத்தான் அவனும் குடித்திருக்கின்றான்.

இஸ்டோர் வேலை என்றால் மட்டும் 'பூப் பெக்கோவும்' 'பெனிங்சுமா' கொடுப்பார்கள்?

இதையும் குடித்துப் பார்த்தால் என்ன? அடி மனதில் ஒரு ஆசை, கற்பாறையில் பூவிதழ் தவழ்ந்தாற் போல்.

அவளுக்குக்கூட ஒரு பிடி கொடுக்கலாமே! என்னமாய் குளிர்ந்து போவாள்.

ஒன்னாம் நம்பர் தூள் ஒரு பிடி கிடைத்த மகிழ்வில் இதழ்விரிய மின் னும் தேங்காய்க் கீற்றும்; குங்குமம் விரியப் பொங்கும் அவள் நெற்றியும்........

அவன் உடல் கிளர்ந்தது. ஒரு விநாடி விழுந்தெழுந்தான் கன்னியின் காதல் மடியில்.

முகத்தைச் சுழற்றாமல் கண்களைச் சுழற்றினான். எல்லாருமே யந்திரத் துடன் யந்திரமாய் மாறிவிட்டிருந்தனர்.

'ஹோய்........' என்னும் யந்திரக் கூச்சல் மனிதனின் 'பராக்கு' பார்க்கும் இயற்கைப் பலவீனத்தையே தலையில் தட்டி வைத்து விடுகின்றது.

எட்டிய மட்டும் ஈர்க்குக் கூட்டுமாறால் கூட்டிக்கொண்டிருந்த பெண் தரையில் அரை நிலவு கீறிக் கொண்டிருந்தாள்.

தன்னை ஒருவரும் கவனிக்கவில்லை என்ற எண்ணம் பெனிங்சின் வடித்திறங்கும் சாயத்துக்கு வலுவூட்டிற்று.

சுருண்டிருந்த சட்டையின் முழுக்கை கணுக்கை வரை இறங்கியது. மீண்டும் சுருண்டது.

பெட்டியில் தேயிலையை அள்ளினான்; தலையில் வைத்தான்; படிகளில் ஏறினான்; 'பின்'களில் கொட்டினான்; மீண்டும் இறங்கினான்; அள்ளினான்; தூக்கினான்; ஏறினான்; கொட்டினான்.

அவனுடைய வேலை தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

* * *

சல்லடை அறை ஆள்கள் வரிசையாய் நிற்கின்றனர்.

'சேப்பைக் காட்டு; மடியைக் காட்டு; சட்டையை உதரு......' ஒவ்வொருவரையாகச் சோதித்து வெளியே அனுப்பிக் கொண்டிருக்கிறார் இரண்டாவது.

சல்லடை அறை ஆள்கள் அன்றாடம் வெளியேற்றப்படும் அதே முறை.

ஆறாவது ஆளாக அவன் வந்து நின்றான். முகம் இயற்கையாக இருக்கவில்லை. வெடிப்புப்பட்ட கண்ணாடியின் விம்பம். எத்தனித்து வைத்துக் கொள்ளுகின்றான், முகத்தை இயற்கையாக.

கால் சட்டைப் பைகளை இழுத்துக் காட்டி விட்டு வெளியே நடந்தவனை இழுத்து நிறுத்துகிறார், இரண்டாவது.

'கை மடிப்பை இழுத்து விடு பாப் போம்........'

நனைந்த பூவாய் நசுங்கிப் போனான். நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது. உடல் நனைந்து ஒழுகுகிறது.

'காலையில் மடிச்சு விட்டது தாங்க......' சொற்களை மென்றான். சாக்கடையில் உழலும் புழுவாக தன்னை உணர்ந்தான். என்ன இழிவு - இத்தனைபேர் முன்னிலையில்; ஆண்களும் பெண்களுமாய். எத்தனை வருட உழைப்பு! அத்தனையும் பாழ்!

'எத்தனை காலமப்பா இந்தத் திருகுதாளம்' என்றபடி அவன் பிடரியில் கைபோட்டுத் தள்ளிக்கொண்டு நடந்தார் இரண்டாவது.

'மற்ற ஆள்களை பார்த்தனுப்பு கங்காணி........' என்று சல்லடை அறை கங்காணிக்குக் கட்டளை இட்டபடி.

'இந்தாடா டேய் அந்தப் பேப்பரை எடுத்து விரி.......' அதட்டினார் பெரியவர்.

ஒருவன் மேசையில் கிடந்த ஆங்கிலத் தினசரியை எடுத்து விரித்தான்.

பெரியவருக்கு வரும் 'டெய்லி நியூஸ்' அது. 'தேயிலை மார்க்கட் நிலை' என்ற பகுதியை மட்டுமே அவர் பார்ப்பது வழக்கம். மற்றபடி முழு உலகமே அவருக்கு அந்த நாலு மாடிக் கட்டடம் தான். அந்தப் பகுதிக்காகத்தான் அவர் பேப்பரே வாங்குகிறார். அதுவும் நேற்றைய பேப்பர் தான் இன்றைக்கு வந்து சேரும் தோட்டத்துக்கு!

'உதரேண்டா, மூதேவி, உதரித் தொலை; நாய் வேலை செய்யிறது....... நான்டா தொரை கிட்ட கைகட்டி நிக்கணும்...... ம்ம்......பார்...... ஒரு நாளைக்கு இவ்வளவென்றால் முப்பது நாளைக்கும்........? ஒரு வருஷத்துக்கு ...... எவ்வளவு போகும்......நாலு பேர் கொண்டு போனால்........! ஏன் தூள் கொறையாது.......'

அவனிடம் சத்தம் போட்டு முடித்த பெரியவர் இரண்டாவதிடம் திரும்பி 'துரையிடம் கூட்டிப் போங்கள்......... நான் இதோ வர்றேன்........' என்றபடி பேப்பருடன் அதைச்சுற்றி அவன் கையிலேயே திணித்து 'கொண்டு போ மூதேசி........' என்றார்.

* * *

நாலு அவுன்சு பெனிங்ஸ், நாளெல்லாம் அதற்காகவே நாயாய்ப் பாடுபடும் அவனை நடு வீதியில் நிறுத்திவிட்டது.

அன்றுதான் எடுத்தான். அதுவும் ஒரு பிடி. விற்க அல்ல, வீடு கட்ட அல்ல.

குடித்துப் பார்க்க. அதையெல்லாம் யார் கேட்கப் போகின்றார்கள்.

துரையின் சட்டபூர்வமான கேள்விகளுக்கு அவனால் பதில் சொல்லக்கூட முடியவில்லை.

அவன் குற்றவாளி!

நாலு அவுன்சோ, நாற்பது அவுன்சோ; திருடியது குற்றம்.

இன்றே அகப்பட்டிருக்காவிட்டால் நாளை எட்டவுன்ஸ், மறுநாள் ஒரு றாத்தல்...... மறுநாள்........!

அன்றிரவு-

இஸ்டோர் இருளில் நின்றது.

வெண் பூதமாய் நின்ற அந்தக் கட்டடத்தின் அடிப்பாகம் எல்லாம் இருள்.

ஓரிரு மின் விளக்குகள் கட்டடத்தை இருளில் இருந்து மீட்க முயன்று கொண்டிருக்கின்றன.

சுவர் ஓர இருளில் நாலைந்து உருவங்கள் தலையில் தேயிலைத்தூள் மூடைகளுடன் பம்மி நடக்கின்றன. கான் ஓரமாய் நிற்கும் கறுப்புக் கார் அம்மூடை களை உள்வாங்கிக் கொள்கின்றது.

'யான் ஒன்றும் அறியேன் பராபரமே!' என்று ஒரு இருள் மூலையில் நிற்கிறான் காவற்காரன்.

கார் மறைந்து விட்டது.

அந்த இடத்தில் பகலில் கால் சட்டை, சப்பாத்துடன் நடக்கும் பெரியவர் இப் போது சாரத்துடன் நடக்கிறார்.

பகலில் சாரத்துடன் நடக்கும் காவற்காரன் இப்போது கால்சட்டை, சப்பாத்துடன் நடக்கின்றான்.

பிடித்துக் கொண்டிருந்த மூச்சை பெரிதாய் விட்ட பெரியவர் மெத்தையில் மிதந்தார்.

உழுபவனுக்கு உணவு கிடைக்காத அதே சமுதாயக் கூனல்.

அந்த நாலு மாடிக் கட்டடம் நகைத்துக் கொண்டது.*

(நன்றி நாமிருக்கும் நாடே.- சிறுகதைத்தொகுதி)

## சொற்சிலம்பம் - போட்டி இல: 31

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | 11 | | | ■ |
| | ■ | 12 | | | ■ | 13 | 14 |
| ■ | 15 | | | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | | | ■ |
| 19 | | ■ | 20 | | | ■ | 21 |
| 22 | | | | ■ | 23 | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

**இடமிருந்து வலம்**
1. அநேக ரகம்.
5. பாரம்.
7. துணி வெட்ட உதவும்.
8. குட்டிப் பையன்.
9. வழக்குத் தொடுப்பவன்.
10. தடுமாற்றம் தரும் புத்தி.
12. நெருப்பு.
13. பிரி .
15. பரம்பரையைக் குறிப்பது.
16. தவறான வதந்தி.
17. பெண்ணின் பருவங்களில் ஒன்று.
18. புண்ணிய இடம்.
19. மூக்கு.
20. தீவிரம்.
22. ஒரு தாளக்குறிப்பு.
23. ஒரு கிழமை.

**மேலிருந்து கீழ்**
1. கடவுள்.
2. யானையின் சாணம்.
3. தலையில் எழுதப்பட்டது.
4. காட்சி தரல்.
5. முற்காலத்தில் மகளிர் தம் மணாளனை இந்நிகழ்வில்தான் தேர்ந்தெடுத்தார்களாம்.
6. முன்னர் வழக்கில் இருந்த தூர அளவீடு.
8. அநேகம்.
11. இது போனால் சொல் போகும்.
12. பல கலந்து வருவது.
14. ஸ்நானம் செய்.
15. பெருமை மிக்கோன்.
16. அரற்று.
17. புராதனம்.
18. மறி.
20. நித்திரையில் காண்பது.
21. சுயத்தைக் குறிக்கும் சொல்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 31**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (22.10.2008) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். தபாலட்டையிலும் ஒட்டி அனுப்பிவைக்கலாம்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.31இல் வெற்றிபெற்றோர் விவரம் 26.10.2008 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக் கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 29 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) அபிமன்யு (5) கவி (7) வந்தி (8) வகு (10) மது (11) பதித்தல் (13) எடு (14) தாண் (15) யாசனை (17) வசி (19) தைரியசாலி (21) தர (22) பதுமை (24) ரம்பம் (25) தாகம்

**மேலிருந்து கீழ்**
(1) அவமரியாதை (2) பிந்து (3) மதி (4) யுவதி (6) விரல் (9) குத்தூசி (11) படு (12) தண் (13) ஏனைய (16) சரிதம் (17) வலிது (18) விரதம் (20) சாபம் (23) மைதா

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 28 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவ ரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு** செல்வி திருமகள் பஞ்சலிங்கம், குப்பிளான் தெற்கு, ஏழாலை.

**2 ஆம் பரிசு** எட்வேட் தவநீதன், இல: 10, முதலாம் குறுக்குத்தெரு, பாஷையூர், யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு** தர்சினி சதீஸ்கரன், கந்தசாமி கோயிலடி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.

பரிசில் பெறுவோருக்கான பணம் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) அ.அரசகுலசேகரன், சிவப்பிரகாச ம.வி, சங்கானை.

(2) பிருந்துஷா போல் குணநாயகம், இல: 678, கண்டி வீதி, அரியாலை.

(3) லக்சி அகிலன், சம்பேதுருவார் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய்.

(4) என்.ஜே.இரத்தினதயா, ஏழாலை வடக்கு, ஏழாலை.

(5) செல்வி கோமதி செல்வநாதன், இராமகிருஷ்ணா வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயநோயைக் குறைக்க ஆரோக்கிய உணவுமுறையும் நாளாந்த உடற்பயிற்சியும் பெரிதும் உதவுகின்றன

யாழ். றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் 'உதயன்' கேட்போர் கூடத்தில் விருந்தினர் உரை நிகழ்வு நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.போதனா வைத்திய சாலையின் இதய சிகிச்சை நிபு ணர் டாக்டர் பூ.லக்ஷ்மன் ''சுகமான வாழ்விற்கு நலமான இதயம்'' எனும் தொனிப் பொருளில் உரையாற்றினார். அவர் வழங்கிய உரையின் தொகுப்பு இங்கே தரப்படுகிறது.



சுகமான வாழ்வு என்பது உளரீதியிலும், உடல் ரீதியிலும் நலமாக இருப்பது ஆகும். ஒருவர் சுகமானவராக இருப்பதையே அது குறிக்கின்றது. இதற்கு நலமான இதயம் வேண்டும்.

உலகில் இறப்பதற்கான முதன்மைக் காரணியாக இதயநோய்கள் காணப்படுகின்றன. உலகளாவிய ரீதியில் மூன்றிலொரு பங்கு இறப்புக்கள் இதயநோய்களாலேயே ஏற்படுகின்றன. பெரும்பாலான மரணங்கள் இதய நோயினைத் தோற்றுவிக்கக்கூடிய ஆபத்துக் காரணிகளால் ஏற்படுகின்றன.

இலங்கையில் இறப்பை ஏற்படுத்தும் ஐந்து நோய்கள்
- இதய நோய்
- உணவுக் கால்வாய்த் தொகுதியுடன் தொடர்புடைய நோய்கள்
- மூளைக்கான குருதி விநியோகத்துடன் தொடர்புடைய நோய்கள் (பாரிசவாதம்)
- நுரையீரல் சம்மந்தமான நோய்கள்
- புற்றுநோய்கள்

என்பன இறப்பு வீதத்தினை இலங்கையில் அதிகரிக்கச் செய்கின்ற மிக முக்கியமான நோய்களாகும். இவற்றுள்ளும் இன்று

## தேங்காய் எண்ணெய்யை விட நல்லெண்ணெய் நல்லது

இதய நோய்த் தாக்கத்தினால் பாதிப்புற்றவர்களின் எண்ணிக்கையே மற்றைய நோய்களால் பீடிக்கப்பட்டவர்களை விடவும் உயர் விகிதத்தில் காணப்படுகின்றது.

இதயநோய் என்றவுடனேயே நம்மெல்லோருக்கும் 'மாரடைப்பு' நோயே ஞாபகத்துக்கு வரும். இதயத் தசைகளுக்கு வழங்கும் குருதி விநியோகத்தில் தடை ஏற்படும் போது மாரடைப்பு ஏற்படுகின்றது. இதன் போது மார்பு வலி ஏற்படும். இது மார்பின் நடுப்பகுதியில் ஏற்படும். இறுக்க உணர்வை ஏற்படுத்தும். நோயாளி மரணபயம் உடையவராகக் காணப்படுவார். இடது புயத்திற்கும், கழுத்துப் பகுதிக்கும் வலி பரவும். குமட்டலும் வாந்தியும் ஏற்படலாம். சுவாசித்தலில் சிரமமும், தலைச்சுற்றும் காணப்படும். வயோதிபர்கள், சலரோக நோயாளிகளுக்கு வித்தியாசமான குணங்குறிகள் ஏற்படலாம்.

### இதய நோய்க்கான ஆபத்துக் காரணிகள்

ஆண்களில் 45 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், பெண்களில் 55 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் நோய்க்கான ஆபத்துக் காணப்படுகிறது. பரம்பரையில் இதய நோய் காணப்படுமாயின் ஆண்களில் 55 வயதிற்கு முன்னும், பெண்களில் 65 வயதிற்கு முன்னும் வரலாம். பெண்களில் மாதவிடாய் காணப்படும் காலங்களில் இதய நோய் வரும் சாத்தியம் குறைக்கப்பட்டிருப்பது இயற்கையின் பாதுகாப்பும் வியப்பும் ஆகும்.

உயர்குருதி அமுக்கம், குருதியில் அதிகளவு கொழுப்பு, சலரோகம், புகை பிடிக்கும் பழக்கம், HDL எனப்படும் நல்ல கொழுப்பின் அளவு 40 Mg/dl இலும் குறைவாக இருத்தல், அதிக உடற்பருமன் காணப்படுதல், உடல் அப்பியாசங்களில் குறைவான வாழ்க்கைமுறை காணப்படுதல் என்பன இதய நோய்க்கான ஆபத்துக் கூடுதலாகக் காணப்படுவதற்குக் காரணிகள்.

இதய நோயால் ஏற்படும் மரணங்களுக்கு உயர்குருதி அமுக்கமே பிரதான காரணம் ஆகும். இதய சுருக்க மற்றும் விரிவு அமுக்கங்களைக் குறைப்பது அவசியமாகும். சராசரி குருதி அமுக்கத்தைப் பேணுவது பிரதானமானது ஆகும். தாழ் குருதி அமுக்கம் என்பது ஒரு நோய் அல்ல.

### இதய நோய்களுக்கு நிகராகப் பரவும் சலரோகம்

இதய நோய்களைப் போலவே இலங்கை மக்களிடம் அதிகமாகத் தன்னுடைய கைவரிசையைக் காட்டியுள்ள நோயாக சலரோகம் எனப்படுகின்ற நீரிழிவு நோயினைக் குறிப்பிடலாம். குருதியில் குளுக்கோசின் அளவை சரியான முறையில் பேணவேண்டும். இதற்குரிய FBS, PPBS, RBS, HbAIC இரத்தச்சோதனைகளை மேற்கொண்டு உரிய அளவில் பேணல் வேண்டும். இது உடலில் உள்ள ஒவ்வொரு கலத்தையும் பாதிக்கும் நோய் ஆகும். குளுக்கோசின் அளவை அறிவதற்கு இரத்தச் சோதனை செய்வதற் காகச் செல்லும் நாள்களில் மாத்திரம் சிலர் உணவுக்கட்டுப்பாட்டுடன் இருப்பார்கள். கூடினால் கிளினிக்கில் 'கத்துவார்கள்' என்பதற்காகவும் கட்டுப் பாடாக இருப்பார்கள். அப்போதைய சோதனையின் பேறுபேற்றை வைத்துச் சிகிச்சை அளிப்பதால் எந்தப் பயனும் இல்லை. எனவே HbAIC சோதனை செய்யப்படின் 3 மாத காலப் பகுதியில் உணவுக் கட்டுப்பாட்டின் தன்மை யினை அறிந்து கொள்ள முடியும்.

### வாழ்வினைத் தீர்மானிக்கும் உணவு முறை

பெரும்பாலான நோய்களை உண்டு பண்ணுவதிலும், அவற்றைக் கட்டுப்படுத்துவதிலும் நமது உணவுமுறையே பிரதானமானதாக விளங்குகின்றது. கொலஸ்ரோல் அதிகமுள்ள உணவை உட்கொள்ளும் போதும், உடலில் கொலஸ்ரோல் உற்பத்தியை அதிகரிக்கும் உணவுகளை உட்கொள்ளும் போதும் உடலில் கொழுப்பின் அளவு கூடுகின்றது. நிரம்பலடைந்த கொழுப்பமிலங்கள் உடலில் கொழுப்பு உற்பத்தியைத் தூண்டுகின்றன.

உ+ம்:- தேங்காய் எண்ணெய்

நிரம்பலடையாத கொழுப்பமிலங்கள் கொழுப்பு உற்பத்தியைக் குறைக்கின்றன. (நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய்)

காபோஹைதரேற்று உணவுகளை அதிகளவில் உட்கொள்வதால் குருதியில் HDL கொழுப்பின் அளவு குறைவதுடன் மொத்தக் கொழுப்புச்சக்தியின் அளவு அதிகரிக்கின்றது. காபோவைதரேற் உணவை உட்கொள்ளும் அளவைக் குறைப்பதால் நிரம்பலடைந்த கொழுப்பினால் உண்டாகும் தாக்கங்களைக் குறைக்கலாம்.

கொலஸ்ரோல் விலங்கு உணவுகளிலேயே காணப்படுகிறது. தேங்காய் எண்ணெயில் கொலஸ்ரோல் இல்லை. ஆனால் தேங்காய் எண்ணெய் உடலில் கொழுப்பு உற்பத்தியைக் கூட்டுகின்றது.தேங்காய் எண்ணெய் சக்தியை வழங்கும் ஓர் பிரதான உணவு. மலிவானதாகவும், சுலபமாகவும் கிடைக்கக் கூடியதாகவும் காணப்படுகிறது.

யாழ்ப்பாண மக்களுடைய உணவுப் பழக்கம் மிகவும் ஆபத்தானதாகும். எண்ணெய்யும், தேங்காய்ப்பாலும், தேங்காய்ப் பூவும், உப்பும் இல்லாமல் சாப்பாடு இல்லை. இவை தாராளமாகப் பாவிக்கப்படுகின்றது. எண்ணெய்யில் வதக்கியும், பொரித்துமே உணவுகளைச் சுவையாகத் தயாரிக்கிறார்கள். காலையில் இடியப்பமும், சொதியும் மதியம் சோறு மாலை குழல்புட்டு (தேங்காய்ப் பூவுடன்), இடிசம்பல், சொதி இப்படியாக மாப்பொருளும், தேங்காயும், எண்ணெய்களினதும் அதிகப்பாவனை யாழ். மக்களைப் பாதிக்கக் கூடியது. உப்பில் ஊற வைத்து பாவிக்கும் உணவுகளையும் தவிர்க்கலாம். இதய நோயாளர்கள், குருதியில் அதிக கொலஸ்ரோல் உள்ளவர்கள், இதய நோய் பரம்பரையாக உள்ளவர்கள் தேங்காய் எண் ணெயைத் தவிர்ப்பது நல்லது.

உடலில் திணிவுச் சுட்டியை (உடலில் நிறைக்கும், உயரத்திற்கும் உள்ள விகிதம்) சரியான அளவில் பேணல் வேண்டும். சாதாரணமாக 18.5 - 23இற்கும் இடையில் இருப்பது ஆரோக்கியமானது. ஆசிய மக்களுக்கு ஆபத்துக் கூடுதலாக இருப்பதால் 23இற்குள் வைத்திருப்பதே நல்லது. ஆனால் 15 இற்கு கீழ் செல்வதும் நல்லதல்ல.

### இதய நோய்களுக்கான உணவுப் பழக்கத்தினை சீராக்கி நோய்களைத் தவிர்த்தல்

இதய நோய்களை மட்டுமல்லாது ஏனைய நோய்களையும் தவிர்ப்பதற்கோ அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவோ நமது உணவுமுறையை சீரமைத்துக் கொள்வது அவசியமாகின்றது. பழங்களையும், காய்கறிகளையும் அதிகம் உணவில் சேர்ப்பது நல்லது. இவற்றை அதிகமாக உள்ளெடுப்பின் இதயநோய் உட்பட பாரிசவாதம், புற்றுநோய் ஆபத்துக்களைக் குறைக்கலாம். குருதி அமுக்கத்தை பொட்டாசியம் எனும் உப்பு பேணுவதால் , இவ் உணவுகளில் பொட்டாசியம் இருப்பதால் அவை ஆரோக்கியம் தரும்.

## இனிப்பு, உப்பு அதிகமான உணவுகளை சிறுவயதிலேயே தவிர்க்கப் பழக்குங்கள்

உப்பின் அளவை நாளொன்றுக்கு 5 கிராமிற்கு மேற்படாது கவனித்துக் கொள்ளல் வேண்டும்.

சிறுவயதிலேயே இக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பது நல்லது. ஏனெனில் இரண்டு வயதிற்கு உட்பட்ட காலப்பகுதியிலேயே நாக்கில் சுவை அரும்புக்கலங்கள் விருத்தி அடைகின்றன. எனவே அப்போது கட்டுப்பாடான சுவையுடன் பழக்கப்படுத்தினால் பின்னர் அவர்களுக்கு அதிகளவு உப்போ, இனிப்போ தேவைப்படாது. ஆனால் திடீரென வளர்ந்த பின்னர் கட்டுப்படுத்தும் போது அவர்களுக்கு அது கஷ்டமாகவும், தண்டனை போலவும் அமைந்துவிடும்.

உணவில் நிரம்பலடைந்த கொழுப்புணவுகளையும், கொலஸ்ரோல் அதிகமுள்ள உணவுகளையும் தவிர்த்து, நிரம்பலடையாத கொழுப்புகளை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். சிறுமீன் விரும்பத்தக்கது. ஜப்பானியர்கள் ரியுனா எனப்படும் சிறுமீன் உண்பதால் அந்த நாட்டு மக்களுக்கு இதய நோய்வரும் சாத்தியம் குறைவாகக் காணப்படுகிறது. ஆனால் அவர்களுக்கு இரைப்பை




புற்றுநோய்க்குரிய சாத்தியம் கூடுதலாக இருக்கிறது. நார்ச்சத்துள்ள உணவுகளை அதிகளவில் சேர்ப்பது இதய நோய்களையும், பாரிசவாதத்தையும் 40% - 50% குறைக்கும். மரக்கறி வகைகள், பழங்கள், தானியங்களில் நார்ச்சத்து அதிகம் காணப்படுகிறது. இவை குருதியில் குளுக்கோசின் அகத்துறிஞ்சலைக் குறைக்கவும் உதவுகின்றன.

பப்பாசிப்பழம், வாழைப்பழம் எமது சூழலில் இலகுவாகவும், சுலபமாகவும், மலிவாகவும் கிடைக்கக் கூடிய பழங்கள் ஆகும். இவற்றை அதிகளவில் எடுப்பது நல்லது. பப்பாசிப் பழத்தில் நார்த்தன்மை காணப்படுவதால் அது எமது சூழலில் உள்ள சிறந்த பழமாகும். மேற்கத்தைய நாடுகளில் பழங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பெருமளவில் இறக்குமதி செய்கிறார்கள். 3 மணித்தியாலத்திற்கு ஒரு பழம் சாப்பிடலாம். கொலஸ்ரோல் குறைந்த உணவை விட உடலில் கொலஸ்ரோலின் அளவைக் குறைக்கக் கூடிய உணவே சிறந்தது.

### பழங்களை அதிகமாகச் சாப்பிடுங்கள்

அதிகளவில் காய்கறிகள், பழங்கள், தீட்டப்படாத தானியங்கள் போன்றவற்றை உணவில் சேர்ப்பது நல்லது. ஆரோக்கியத்திற்கு பாதகமான கொழுப்பு உணவுகளை தவிர்த்தல் வேண்டும். கோழி இறைச்சி, மீன், அவரை போன்றவற்றை மாட்டிறைச்சி, பாற்கட்டி போன்றவற்றிற்குப் பதிலாகச் சாப்பிடலாம். போதியளவு 'போலேற்றை' உணவில் சேர்ப்பது நல்லது.'போலேற்றை' உள்ளடக்கிய மல்ரிவிற்றமின் மாத்திரையை பயன்படுத்த லாம். அதிகளவு மதுபாவனையைத் தவிர்ப்பதும் நல்லது.

### நாளொன்றுக்கு குறைந்தது 30 நிமிட உடற்பயிற்சி

உணவுப் பழக்க வழக்கத்தினைப் போலவே உடல் ஆரோக்கியத்தினைப் பேண உடற்பயிற்சிகளும் உதவுகின்றன. போதிய அளவு உடற்பயிற்சி இதய நோய்களுக்கு எதிரான பாதுகாப்பைக் கொடுக்கக் கூடியது. குருதியில் நல்ல கொழுப்பின் (HDL) அளவை அதிகரிப்பதுடன் குருதி அமுக்கத்தையும் குறைக்கும். உடற்பயிற்சி உடலில் இன்சுலின் தொழிற்பாட்டையும் அதிகரிக்கச் செய்யும். குறைந்தது தினமும் 30 நிமிட உடற்பயிற்சியாவது செய்வது அவசியமானது ஆகும்.

உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி என உடலினை நாம் நல்ல முறையில் புராமரித்துக் கொண்டாலும், நம்மிடையே காணப்படும் சில தீய பழக்க வழக்கங்கள் உடலில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன. புகைத்தல், மதுபாவனை என்பன உடலுக்குத் தீங்கினை ஏற்படுத்தும் துர்நடத்தைகளாகும். புகைத்தல் இதய நோய்க்கான தனித்துவமான காரணியாகும். ஆனால் புகைப்போர் இதனைக் கவனத்திற் கொள்வதில்லை. தினமும் 20 சிகரெட்டுக்களைப் புகைக்கும் ஆண்களுக்கு 3 மடங்கும், பெண்களுக்கு 6 மடங்கும் மாரடைப்பிற்கான வாய்ப்புக்கள் அதிகமுண்டு. மேலை நாடுகளில் பெண்கள் அதிகளவில் சிகரெட் புகைப்பதால் மாரடைப்பு ஏற்படும் வாய்ப்பு பெண்களுக்கு அதிகமாகக் காணப்படுகிறது. அமெரிக்காவில் மாத்திரம் ஏறத்தாழ 40 000 பேர் புகைக்காவிடினும், புகைப்பவர்களுக்கு அருகில் இருப்பதனால் இதய நோய்களுக்கு உள்ளாகி இருக்கிறார்கள்.

அதிக மதுபாவனையும் குருதி அமுக்கத்தை அதிகரிக்கும். கொலஸ்ரோலின் அளவை அதிகரிக்கும். மார்பக, ஈரல், களமற்றும் வாய்ப்புற்று நோய்க்கான வாய்ப்பையும் அதிகரிக்கும்.

### நவீன சமூக வாழ்வியலால் உண்டாகும் நோய்கள்

இன்றைய விஞ்ஞான உலகிலே மனிதர்களை விடவும் இயந்திரங்களே அதிகளவு வேலைகளைச் செய்கின்றன. இதனால் அந்த இயந்திரங்களைக் கட்டுப்படுத்துகின்ற வேலையை மட்டுமே செய்கின்ற நவீன சமூகம் ஒன்று நம்மிடையே உருப்பெற்று வருகின்றது. நவீன சமூகத்தினிடையே உடல் நிறை அதிகரித்து வருகின்றது. உணவும் ஆரோக்கியமற்றதாகின்றது. மக்கள் உடல் முயற்சி குறைந்தவர்களாக உள்ளார்கள். அதிக ஊனுணவை உட்கொள்கிறார்கள். அதிகளவில் நொறுக்குத் தீனிகளையும் பயன்படுத்துகிறார்கள். இதனால் அனுசேபத் தொழிற்பாட்டு நோய்கள், சலரோகம், குருதிக்கலன்களில் ஏற்படும் கொழுப்புப்படிவும், அவை சார்ந்த நோய்களும் ஏற்படுகின்றன.

ஆரோக்கிய வாழ்க்கை முறையை பின்பற்றினால் இதய நோய்கள் 83% குறைவடையும். பெண்களில் சலரோகம் 91% குறைவடையும். ஆரோக்கிய வாழ்வென்பது ஆரோக்கிய உணவையும் உள்ளடக்கியதாகும். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் நோய்களால் ஏற்படும் இறப்புகளிற்கான முதல் 10 காரணங்களில் பழங்கள், காய்கறிகள் குறைந்த உணவுடன் உடற்செயற்பாட்டுக் குறைவும் உள்ளடங்கி உள்ளது.

எனவே நலமான இதயத்தோடு, வளமான வாழ்வினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஆரோக்கியமான உணவு முறை, உடற்பயிற்சி என்பவற்றைக் கைக் கொண்டு புகைத்தல், மதுபாவனை என்பவற்றைத் தவிர்த்து உடற்செயற்பாட்டுத் தன்மையையும் அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் வருங்கால சந்ததியும் நோய்நொடியற்ற வளமான சந்ததியாக உருப்பெறும்.

தொகுப்பு: பஞ்சவர்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கிருந்தாலும் சொந்த இடத்தில் வாழ்வது போன்ற மகிழ்ச்சி ஒருபோதும் ஏற்படாது என்கிறார்கள் வடக்கு முஸ்லிம்கள்


இடம் பெயர்வுகள் மனித இனத்தில் அளவிடமுடியாத அதிர்வுகளை ஏற்படுத்தி வருகின்றது.

சொந்த மண்ணை விட்டு வெளியேறுதல் உயிர்பிரியும் சோகத்தைப் போன்றது. இடம்பெயர்ந்து பல ஆண்டுகளாக அகதிகள் நாமம் சுமந்து வாழும் இந்த மக்களின் சோகங்கள் சொன்னால் புரியாதவை.

வட மாகாணத்திலிருந்து 1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த 18,500 குடும்

## மீண்டும் வடக்குக்குச் சென்று உறவுகளுடன் வாழ ஆசை

பங்களைச் சேர்ந்த மக்கள் புத்தளம் மாவட்டத்தில் உள்ள 141 நலன்புரி நிலையங்களில் வசித்து வருகின்ற னர். இவர்கள் இடம்பெயர்ந்து 18 வருட பூர்த்தி ஒக்டோபர் 23 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை நினைவு கூரப்படவுள்ளது. பதினெட்டு வருட அகதி வாழ்வை நிறைவு செய்துள்ள அம்மக்கள் தமது சொந்த ஊரின் மண் வாசனை இன்னும் தம் நினைவுகளிலிருந்து நீங்கவில்லை எனகின்றனர்.



எங்கிருந்தாலும் எம் சொந்த இடத்தில் வாழ்வது போன்ற மகிழ்ச்சி தமக்கு ஒருபோதும் ஏற்படாது எனப் புத்தளம் மதீனா நகர் நலன்புரி நிலையத்தில் வசிக்கும் இப்ராகீம் நாகூரான் கூறினார்.

தாங்கள் இடம்பெயர்ந்து தங்கி வாழும் இந்தப் பிரதேசத்தைத் தமது சொந்த இடமாகக் கருத முடியவில்லை என்று அவர் குறிப்பிடுகின்றார்.

தமது உறவுகள் பலரையும் இழந்து அங்கு அகதி முகாம் வாழ்க்கையைத் தொடர்வதாகவும் எனினும் தமது சொந்த இடத்திற்குச் சென்று அங்கிருக்கின்ற வளங்களைக் கொண்டு தமது வாழ்க்கையைத் தொடர வேண்டும் என்றும் அதன் மூலமே தமது வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படும் என்றும் இப்ராகீம் தெரிவித்தார்.

நலன்புரி நிலையத்தில் வாழ்கின்ற அநேகமானோர் கூலித்தொழில்களைச் செய்து தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர். இருப்பினும் சிலர் ஆரம்பத்தை விட தற்போது பொருளாதார ரீதியாக முன்னேறியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

புத்தளம் மாவட்டத்தில் வளப்பற்றாக்குறை நிலவுகின்றது. இங்கு காணப்படும். குறைந்தபட்ச வளங்களை இடம் பெயர்ந்த மக்களும் நிரந்தர குடியிருப்பாளர்களும் பயன்படுத்த முற்படும் போது சில முரண்பாடுகள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



எனினும் பல்வேறு தரப்பினரும் மேற்கொண்ட சமரச முயற்சிகளால் உள்ளூர் மக்களுக்கும் இடம் பெயர்ந்த மக்களுக்கும் இடையிலான உறவு நிலை தற்போது சுமுகமடைந்துள்ள தாக புத்தளத்தில் வாழ்ந்து வரும் முல்லைத்தீவைச் சேர்ந்த மொஹமட் ரிஷ்மி தெரிவித்தார்.

ஏனைய பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மற்றும் உள்ளூர் மக்களுக்கிடையில் பாரியளவிலான பிரச்சினைகள் தொடர்வதைக் காண முடிவதாகவும் எனினும் புத்தளம் பிரதேச மக்களைப் பொறுத்த வரை அவ்வாறான பாரிய பிரச்சினைகள் ஏற்படவில்லை என்றும் கூறினார்.

வட மாகாணத்தில் வாழ்ந்த காலத்தில் முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களோடு நல்ல உறவுகளைப் பேணி வந்திருக்கின்றனர். எனவே மீண்டும் சொந்த இடங் களுக்குச் சென்று தமது பழைய உறவுகளைப் பேணுவது இம்மக்களுக்குக் கடினமான காரியமல்ல.


ஒவ்வொரு வருடமும் தாங்கள் இடம் பெயர்ந்ததைத் தாங்களே நினைவு கூர்ந்து கொண்டிருப்பதாகவும் எனினும் தமது வேதனைகளும் சொந்த இடங்களுக்குத் திரும்ப வேண்டும் என்ற எதிர்பார்ப்புகளும் சம்பந்தப்பட்ட தரப்பினரைச் சென்றடைகின்றதா என்பது கேள்விக்குறியாகவே இருப்பதாகவும் அந்த மக்கள் ஏக்கம் வெளியிடுகின்றனர்.

இதேவேளை இதுவரை காலமும் அம்மக்கள் மீள் குடியேற்றப்படாததற்கான காரணம் குறித்து வடக்கிலிருந்து இடம்பெயந்த முஸ்லிம்களுக்கான செயலகத்தின் உதவி ஆணையாளரிடம் கேட்ட போது அரசாங்கம் அவர்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்கும்போதே இந்த மக்களின் மீள்குடியேற்ற முயற்சி கள் ஆரம்பிக்கப்படும் என்றும் தமது சொந்தத் தாயகத்தில் அவர்கள் மீளக் குடியேறி சுயநிர்ணய உரிமையுடன் வாழவேண்டும் என்பதையே தாங்களும் விரும்புவதாக அவர் கூறினார்.

இது சாவுல் ஹமீத் அப்துல் [illegible]னின் தனிப்பட்ட விருப்போ அல்லது புத்தளம் வாழ் இடம்பெயர் மக்களின் விருப்போ மட்டுமல்ல. இந்நாட்டின் முன்னேற்றத்தையும் மக்களின் ஒளிமய வாழ்வையும் விரும்பும் பல நல்ல உள்ளங்களின் பிரார்த்தனையும் அதுவாகவே உள்ளது.

நன்றி: மீண்டும் வாழ்வோம் (INTERNEWS)

## 37 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 10*01*1992

உதிர்வு 10*09*2008

## அமரர் நடராஜா சத்திராஜ்

பத்துப்பேர் பரிதவிக்க
பார்த்த விழிநீர் சொரிய
நித்திலமே! நிறை மதியே!
நித்திரையாய் போன தென்னே
இத்தரையில் வாழ்ந்த வாழ்க்கை
இனி மேலும் வேண்டாமென்று
பத்தொடு ஆறு சேர்ந்த
பதினாறில் சென்று சேர்ந்தாய்.

அன்னார் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தவேளை அவருக்குச் சிகிச்சையளித்த வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு எமக்குப் பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்களுக்கும், தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


இன்று (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

விதானை வளவு, அச்செழு. (79127) - குடும்பத்தினர்.

A LIFE - TIME CHANCE
STUDY MEDICINE
கிழக்கு ஐரோப்பாவில் (BELARUS)




Belarus க்கும் புறப்பட்டுச் சென்றுள்ள 9 ஆவது மாணவர் அணி



இன்றே விண்ணப்பித்து, 20 நாட்களுக்குள் புறப்படுங்கள்.

வங்கி அறிக்கை, விசா தொடர்பான விசாரணை
அனுசரணையாளர் (Sponsors)-தேவையில்லை.

விசா 100 % உத்தரவாதம்.
A/L மாணவர்கள் அதிபர் கடிதத்துடன் விண்ணப்பிக்கலாம்.

Recognized by Sri Lankan Medical Council (SLMC)

மருத்துவக் கலாநிதி - MD
(ஆங்கிலம் மூலம் 6 வருடம்)

அனுமதிபெற தொடர்புகளுக்கு
0773017883
(ஆங்கிலம் மற்றும் தமிழ்)

PATHE ACADEMY
PEOPLE'S ACADEMY FOR TERTIARY AND HIGHER EDUCATION

Head Office
37, School Lane, Colombo - 03.
Tel : 2502012

Overseas Student Placement Department
111 - 1/2, Maya Avenue, Kirulapona, Colombo - 06.
Tel : 2586418

www.patheacademy.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிலும் சென்னையிலும் அனைத்துக் கட்சிக் கூட்டங்கள்

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தை ஒட்டி இலங்கைக்கும் இந்தியாவுக்கும்



இடையில் நீடித்து வந்த முரண்பாடு முற்றி முறுகல் நிலையை அடைந்துவிட்டது.

ஈழத்தமிழருக்காக தமிழகத்தில் எழுந்துள்ள - கிளர்ந்துள்ள - உணர்வெழுச்சி, கொழும்பு தொடர்பாகப் புதுடில்லியைக் காட்டமாக நடப்பதற்குத் தூண்ட, அதனால் சீற்றமடைந்திருக்கின்றது 'மஹிந்த சிந்தனை' தலைமை.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு அதிகாரத்துக்கு வந்த காலம் தொட்டே இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியத் தரப்புக்கு 'தண்ணி' காட்டி வந்திருக்கிறது என்பது வெளிப்படை.

வண்டி இழுக்கும் குதிரைக்கு முன்னால் கரட்டைக் கட்டித் தொங்கவிட்டு, அதைக்



காட்டிக் காட்டியே குதிரையை ஓடவிடுவது போல -

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுத் திட்டம் ஒன்றை இதோ வைக்கிறோம் என்று புதுடில்லிக்குப் 'பாவ்லா'காட்டியபடியே தனது யுத்தநடவடிக்கைத் திட்டத்தைக் கட்ட விழ்த்து வந்திருக்கிறது மஹிந்தரின் அரசு.

இந்திய - இலங்கை அரசமட்ட உயர்தலைவர்களின் சந்திப்புகளின்போது, தீர்வுக்கான தனதுதிட்டத்தை வெளியிடுவதற்குக் கொழும்பு தரப்பில் உறுதிகூறப்பட்ட கால அவகாசங்கள் அவ்வப்போது நீடிக்கப்பட்டுக் காலாவதியாகி, ஒன்றரை வருடங்களாகிவிட்டன.

ஒவ்வொரு சந்திப்பின் போதும் 'இதோ தீர்வுத்திட்டம் தயார்', 'அதோ அறிவிக்கிறோம்' என்று காலத்தை இழுத்தடித்தபடியே தனது படை நடவடிக்கைத் திட்டத்தை மஹிந்த தரப்பு முன்னெடுத்தபோதும் இந்தியா ஓரளவு சகித்தே வந்தது.

'இலங்கை இனப்பிரச்சினைக்கு இராணுவ வழியில் தீர்வு இல்லை. அரசியல் பேச்சு மூலமான சமாதான முறையிலேயே தீர்வுகாண முடியும்.' - என்று இந்தியாவும் திரும்பத் திரும்பக் கிளிப்பிள்ளை போல கூறி வந்ததே தவிர, கொழும்பின் ஏமாற்று எத்தனம் குறித்து இந்தியா அதிகம் சீற்றம் காட்டவில்லை.

அதற்குக் காரணம் உண்டு. ராஜீவ் காந்தி கொலையால் இந்தியப் பக்கத்தில் ஈழத் தமிழரின் பிரச்சினை தொடர்பான பரிதாபப் பார்வையில் சற்று இறங்கு முகமே நிலவியது. அது மாத்திரமல்லாமல், இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் முரண்டு பிடிக்கும் கொழும்பை வழிக்குக்கொண்டுவருவதற்கான அரசியல் அதிகார வலுவைக் கொழும்பு மீது பிரயோகிக்கும் சிரத்தையோ - அல்லது திடசித்தமோ - புதுடில்லி அரசியல் தலை மையிடம் இல்லாமல் இருந்தது. ஆகவே, நடப்பது நடந்து விட்டுப் போகட்டும், நமது ஆட்சி தொடர்ந்தால் சரி என்ற நினைப்போடு கொழும்பின் 'திருவிளையாடலை' பார்த்தும் பார்க்காமலும் விட்டுப்பிடித்தது புதுடில்லி.

ஆனால், தமிழகத்தில் அதிரடிப்புயல் எனத் திடீரெனக் கிளர்ந்தெழுந்திருக்கும் ஈழத் தமிழர் ஆதரவு எழுச்சி புதுடில்லியை ஓர் உலுப்பு உலுப்பித் தீவிரமாகச் செயற்பட நெம்பித்தள்ளிக் கட்டாயப்படுத்திவிட்டது.

தமிழகத்தில் எதிரணியில் இருக்கும் விஜயகாந்த் மற்றும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா ஆகியோர் ஈழத்தமிழர் விவகாரத்தை ஒட்டித் திடீரென கெம்பி எழுந்ததால் வேறு வழியின்றி அந்த எழுச்சியை விடமிஞ்சியவராகத் தாம் பொங்கியெழக் கட்டாயப்படுத்தப்பட்டார் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி.

பிறகென்ன? ஏட்டிக்குப் போட்டிதான்!

தமிழின உணர்ச்சி இப்போது தமிழ கத்தில் கரைபுரண்டு - இல்லை அணை உடைத்து - பீறிட்டுப் பிரவாகம் எடுத்து ஓடுகின்றது.

தாமும் இவ்விடயத்தில் விரைந்து சாதித்துக் காட்டவேண்டும் என்று துடிக்கும் தமிழக முதல்வர் இப்போது அவசர அவசரமாக இந்நிலைமை குறித்து ஆராய்வதற்காக தமிழகத்தில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தையே கூட்டும் நிலைமைக்கு வந்துவிட்டார்.

இந்த உணர்வெழுச்சியெல்லாம் இதுவரை தமிழகத்தில் எங்குதான் முடங்கிக் கிடந்தனவோ தெரியவில்லை. இப்போது தமிழகத்தில திடீரெனக் கிளர்ந்து, கட்டு மீறிப் பாய்ந்து, சூறாவளியாகச் சுழன்று அடிக்கும் ஈழத்தமிழர் உணர்வெழுச்சி தொடர்பாக, அவசர அவசரமாக ஏதேனும் செய்தாக வேண்டும் என்ற கட்டாயம் புதுடில்லிக்கு. இல்லையேல் இந்தச் சூறாவளி எழுச்சி, புதுடில்லி மத்திய அரசின் ஆட்சி அதிகாரத்தையே ஓர் அசைப்பு அசைத்து உலுப்பி விடலாம் என்ற இக்கட்டு.

நிலைமையின் விபரீதத்தைப் புரிந்து கொண்ட புதுடில்லி ஓரளவுக்கேனும் விரைந்து நடந்துகொண்டது.

புதுடில்லியில் இலங்கையின் துணைத் தூதரை மன்மோகன் சிங் அரசின் சார்பில் அழைத்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாரயணன் அரசு 'ஷொட்' கொடுத்ததன் பின்புலம் இதுதான்.

''இனப்பிரச்சினைத் தீர்வுக்கு நியாயமான அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய சமாதானத் திட்டம் ஒன்றை முன்வைக்குமாறு நாங்கள் கோரிய போதெல்லாம் இதோ வைக்கிறோம், அதோ வைக்கிறோம் என்று கூறி எங்களை ஏமாற்றியே வந்துள்ளீர்கள். சமாதானத் திட்டத்தை முன்வைக்கிறோம் என்று கூறிக்கொண்டே யுத்த தீவிர நடவடிக்

## புதுடில்லியைச் சமாளிக்கும் மஹிந்தவின் முயற்சி பலிக்குமா?

கையையே தொடர்ந்தீர்கள். சமாதானத் திட்டத்தை முன்வைக்கவேயில்லை. அப்போதெல்லாம் பொறுத்துக் கொண்டோம்; சகித்துக் கொண்டோம். ஆனால், நிலைமை இப்போது எல்லை மீறி விட்டது. இனியும் நாம் பொறுக்க முடியாது. சமதானத் திட்டத்தை வெளியிடாமல் இராணுவ நடவடிக்கைத் திட்டத்தைத் தொடருவீர்களேயானால் நிலைமை விவ காரமாகும்'' - என்ற எச்சரிக்கையே புதுடில்லியால் கொழும்புக்குத் தெரிவிக்கப் பட்டிருப்பதாக அறிய வந்திருக்கிறது.

இந்த எச்சரிக்கை - அதுவும் புதுடில்லியில் தனது தூதுவரைத் திடீரென அழைத்து காட்டமான வார்த்தைகளில் தெரிவிக்கப் பட்ட இந்த அறிவுறுத்தல் - மஹிந்த அரசை சீற்றத்துக்குள்ளும், எரிச்சலுக்குள்ளும் பெரு விசனத்துக்குள்ளும் ஆழ்த்தியிருப்பதாகவும் தெரிகின்றது.

நிலைமையைச் சமாளிப்பதற்கு - புதுடில்லிக்குத் திரும்பவும் 'தண்ணி' காட்டுவதற்கு - உரிய திட்டங்களை வகுப்பதற்காக, தனது அரசின் மிக நெருங்கிய நண்பராகவும், சகா

**அதிரடி அரங்கு** - சேரமான்

வாகவும் செயற்படும் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத்தைக் கடந்த செவ்வாயும், வியாழனன்றும் தமது அலரிமாளிகைக்கு அழைத்து அவருடன் நீண்ட நேர 'மந்திரா லோசனை' நடத்தியிருக்கிறார் இலங்கை அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

இந்தியாவைச் சமாளிக்கும் தற்காலிக



எத்தனமாகவே இப்போது அவசர அவசரமாக அனைத்துக்கட்சிக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றார் மஹிந்தர் என்கின்றன உள்வீட்டுத் தகவல்கள்.

'இதோ நான் சமாதானத் தீர்வுத் திட்டத்தை - அதிகாரப் பரவலாக்கல் யோசனை கள் அடங்கிய சமரச ஏற்பாட்டை - வெளியிடுவதற்கான அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அழைத்துள்ளேன். ஒருபுறம் தீர்வு யோசனையை வெளியிட ஆக்கபூர்மான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான், மறுபுறம் யுத்த தீவிரத்தை முன்னெடுக்கிறேன். தீர்வுத் திட்டம் இதோ வரும். அதுவரை பொறுத்திருங்கள்!' - என்று இந்தியாவுக்குத் திரும்பவும் சமாளிப்பு காட்டும் முயற்சிகள் நடக் கின்றன.



இந்த அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டம் என்ற நாடகம், புதுடில்லியின் தற்போதைய சீற்றத்தைத் தணிக்குமா? தமிழகத்தில் பீறிட்டுக் கிளர்ந்துள்ள ஈழத் தமிழர் உணர்வெழுச்சியைக் கட்டுப்படுத்திச் சமாளிக்குமா? - என்பவற்றையெல்லாம் அடுத்து வரும் வாரங்கள் நமக்கு புலப்படுத்திவிடும் என எதிர்பார்க்கலாம்.

ஆனால், புதுடில்லியின் சீற்றம் மஹிந்தரை ஆடிப்போக வைத்திருக்கின்றது என்பது மட்டும் உண்மை. ★

# இந்தியா அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் கூட ஸ்பெயினுக்கும் சீனாவுக்கும் உதவிய காங்கிரஸால் ஈழத் தமிழருக்கு உதவமுடியாமல் போனது ஏன்?

**தமிழகத்தில் இருந்து வெளிவரும் தினமணி நாளேட்டில் நேற்று சனிக்கிழமை (11.10.2008) வெளியாகிய ஆசிரியர் தலையங்கம் இது.**



1938ஆம் ஆண்டு ஜுலை மாதம் 27ஆம் திகதி பிரான்ஸ் நாட்டின் தலை நகரான பரிஸில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஸ்பெயினில் ஜனநாயகத்தை அழித்து சர்வாதிகார ஆட்சியை நிறுவியிருந்த பிராங்கோவைக் கண்டித்தும், சீனாவின் மீது படையெடுத்து ஜப்பானிய ராணுவம் செய்துவரும் அட்டூழியங்களைக் கண்டித்தும் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஸ்பானியப் போராட் டத் தலைவர்களில் ஒருவரான வாபாசி லோனாரா என்பவரும் ஜவஹர்லால் நேருவும் கலந்துகொண்டு பேசினார்கள்.

ஐரோப்பாவில் ஹிட்லர், முசோலினி ஆகியோர் தலைமையில் பாசிசம் படர்ந்து கொண்டிருந்த வேளை, அவர்களைப் பின்பற்றி ஸ்பெயின் நாட்டிலும் பிராங்கோ பாசிச சர்வாதிகார ஆட்சியை நிறுவியதற்கு எதிராக ஜனநாயக உணர்வு படைத்தவர்கள் போராடினார்கள்.

ஐரோப்பா முழுவதுமிருந்த ஜனநாயகவாதிகள் இப்போராட்டத்திற்கு ஆதரவாகத் திரண்டார்கள். பிரிட்டனில் படித்துக் கொண்டிருந்த இந்திய மாணவர்கள் பலரும் இப்போராட்டத்தில் கலந்துகொள்ளத் தொண்டர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொண்டார்கள். ஜவஹர்லால் நேருவின் மருமகனும் இந்திராவின் கணவருமான பெரோஸ் காந்தியும் அவர்களில் ஒருவராவார். ஸ்பெயின் ஜனநாயகத்தை நிலை நிறுத்துவதற்காக நடைபெற்ற இப் போராட்டத்தில் இந்தியத் தேசிய காங்கிரஸ் சார்பில் ஆதரவை அளிப்பதற்காக நேரு இக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

பாரிஸிலிருந்து வெளிவந்த "ருடி பிராவோ" என்னும் பத்திரிகைக்கு ஸ்பெயின் போராட்டம் பற்றி உணர்ச்சிகரமான ஒரு நேர்காணலை நேரு அளித்தார்.

ஸ்பெயின் நாட்டு எல்லைக்குச் சென்று அங்கு முகாமிட்டிருந்த போராட்ட வீரர்களை நேரில் சந்தித்து ஊக்குவித்தார்.

ஐரோப்பியச் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நவம்பர் 17ஆம் திகதி இந்தியா திரும்பிய நேருவுக்கு மும்பையில் பெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஸ்பெயின் நாட்டில் நடைபெறும் உள்நாட்டுப் போரின் விளைவாக அம்மக்கள் உணவு, மருந்து இல்லாமல்படும் துயரம் குறித்து அக்கூட்டத்தில் நேரு உருக்கமாகப் பேசினார். அம்மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும் மருந்துப் பொருள்களையும் திரட்டி அனுப்பி வைக்கும்படி மும்பை வணிகர்களை வேண்டிக்கொண்டார். அதற்கிணங்க உணவுப்பொருள்களும் மருந்துப் பொருள்களும் ஒரு கப்பல் நிறைய இந்திய தேசியக் காங்கிரஸ் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டது.

1939ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20ஆம் திகதி சீனா சென்ற நேரு 13 நாள்கள் அங்கு சுற்றுப்

### ஜவஹர்லால் நேருவின் பாதையிலிருந்து விலகிச் செல்லும் பிரதமர் மன்மோகன் சிங்

பயணம் செய்தார். ஜப்பானியர் படையெடுப்பின் விளைவாகச் சீரழிந்து கிடந்த சீன மக்களின் துயரங்களைப் பகிர்ந்து கொண்டார். அங்கிருந்து திரும்பியவுடன் காங்கிரஸ் தலைவராக இருந்த சுபாஷ் சந்திர போஸைச் சந்தித்து சீன மக்களின் துயரங்களை விளக்கினார். உடனடியாகக் காங்கிரஸ் சார்பில் மருத்துவ உதவிக்குழு ஒன்றினை அனுப்பிவைப்பதென முடிவு செய்யப்பட்டு டாக்டர் கோட்னீஸ் தலைமையில் குழு ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தியா அடிமைப்பட்டுக் கிடந்த காலக் கட்டத்தில் கூட பாதிக்கப்பட்ட மக்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஓடோடிச் சென்று அவர்களுக்கு உதவுவதை அன்றைய காங்கிரஸ் கட்சி செய்தது. ஸ்பெயினுக்கும் சீனாவுக்கும் காங்கிரஸ் கட்சி செய்ய முன்வந்த மனித நேய உதவிகளை அன்றைய பிரிட்டிஷ் அரசே தடுக்கவில்லை.

ஆனால் இன்று என்ன நடக்கிறது? காங்கிரஸ் கட்சி பாரம்பரியத்திற்கு இழுக்கு நேரும் வகையில் அண்டை நாடான இலங்கையில் தமிழர்கள் சிங்கள இனவெறியரால் கொன்று குவிக்கப்படுவதைப் பார்த்தும் பாராமுகமாக இருக்கிறது. பசியும் பட்டினியுமாகக் கிடக்கும் ஈழத் தமிழர்களுக்கு உதவ வேண்டிய இந்தியா அவர்களை அழிப்பதற்கு



சிங்கள அரசுக்கு ஆயுத உதவியும் ஆள் உதவியும் செய்கிறது. இந்திய ராணுவத்தின் துணைத் தலைமைத் தளபதியே இதை உறுதி செய்திருக்கிறார்.

இலங்கையில் நடைபெற்று வரும் போரில் சிங்களப் படைக்கு உதவியாக இந்தியப் படை வீரர்கள் யாரும் அங்கு செல்லவில்லை என இந்திய ராணுவத்தின் துணைத் தலைமைத் தளபதியான மிலன் லலித் குமார் கூறியுள்ளார்.

மண்டபத்தில் 'ஹிந்து' செய்தியாளருக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் கூறியதாவது:-

இலங்கைக்கு இந்திய ராணுவ அதிகாரிகள் அவ்வப்போது செல்கிறார்கள். சிங்கள ராணுவத்திற்கு ஆலோசனைகள் வழங்கி விட் டுத் திரும்பி விடுகிறார்கள்.

(தொடர்ச்சி 18ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் அடிமைப்பட்டு....

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் ராடர் சாதனங்களை இயக்கிய இரண்டு இந்திய ராணுவத் தொழில்நுட்ப வல்லுநர்கள் புலிகளின் தாக்குதலில் படுகாயமடைந்திருப்பதாகக் கூறுவதில் உண்மை இல்லை. காயமடைந்த வர்கள் ஒரு வேளை சிவிலியன்களாக இருக்கக் கூடும் என்று கூறியுள்ளார்.

இந்திய ராணுவத்தின் துணைத் தலைமைத் தளபதியாக இருக்கும் ஒருவருக்கு இந்திய அரசியல் சட்டம் குறித்தும் உலக நாடுகளின் சட்டங்கள் குறித்தும் நன்கு தெரிந்திருக்க வேண்டும். வெளி நாடொன்றில் நடைபெறும் போரில் இந்தியாவின் குடிமக்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று சொன்னால் அதற்கான அனுமதியை இந்திய அரசிடம் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாமல் அவர்கள் சென்றிருப்பார்களேயானால் இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

'ராடர்' சாதனங்களை இயக்கியவர்கள் இந்திய ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். அவர்கள் சிவிலியன்கள். அவர்களாகவே சென்றிருக்கிறார்கள் என்பது உண்மையானால் இந்திய அரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்போவதுமில்லை என்பதும் உண்மையானால் அதே உரிமை தமிழர்களுக்கும் உண்டு.

இலங்கையில் கொன்று குவிக்கப்படும் தமிழர்களைப் பாதுகாக்க, தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர்கள் செல்வதையும் இந்திய அரசு தடுக்க முடியாது. இந்திய ராணுவத்தின் துணைத் தலைமைத் தளபதியின் கூற்று இதற்குத்தான் தமிழர்களைத் தூண்டுகிறது.

கடந்த 30 ஆண்டு காலத்தில் இலங்கையில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சுமார் பத்து லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் சொந்த மண்ணில் வாழ வழியின்றி இந்தியா உட்பட உலக நாடுகளில் அகதிகளாக அடைக்கலம் புகுந்துள்ளனர்.

ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்து உண்ண உணவோ, உறைவிட வசதிகளோ இல்லாமல் தவிக்கிறார்கள். அவர்களுக்கு உதவ தமிழ் நாட்டு மக்கள் திரட்டிய உணவு, மருந்துப் பொருள்களை செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அனுப்பி வைக்க அனுமதிதரக் கூட இந்திய அரசு மறுக்கிறது. தமிழக அரசும் வாய் மூடி மௌனம் சாதிக்கிறது.

இந்தியாவிலுள்ள வேறு எந்த மொழி பேசும் தேசிய இனமும் இப்படியோர் அவல நிலையை இதுவரை சந்தித்தது இல்லை. வங்காளி, பஞ்சாபி, குஜராத்தி, மராத்தி மற்றும் இந்தி மொழி பேசுகிற இனத்து மக்கள் வேறு எந்த நாட்டிலாவது வாழ்ந்து இத்தகைய கொடுமைகளுக்கு ஆளாக நேர்ந்தால் அதைப் பார்த்துக்கொண்டு மேற்கண்ட மொழி பேசும் இன மக்கள் சும்மா இருந்திருப்பார்களா? இந்திய அரசுக்கு எதிராகக் கொதித்தெழுந்து போராடி இருப்பார்கள்.

சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமரான நேரு எந்த நாட்டுடனும் ராணுவ உடன்பாடு செய்துகொள்ள மறுத்தார். அமெரிக்க வல்லரசு, நேட்டோ, சீட்டோ என பல்வேறு நாடுகளை ராணுவ ரீதியான கூட்டு உடன்பாடு நாடுகளாக உருவாக்கி சோவியத் ஒன்றியத்திற்கு எதிராக அணி திரட்டியது. அதைப்போல சோவியத் ஒன்றியமும் தங்களின் தற்காப்புக்காக "வார்சா" உடன்பாடு நாடுகளின் அணியை உருவாக்கிற்று.

ஆனால் நேரு இந்த ராணுவ கூட்டுகளைக் கண்டித்தார். அது மட்டுமல்ல, புதிதாக விடுதலை பெற்ற ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளை ஒன்றிணைந்து அணி சாரா நாடுகளின் குழு ஒன்றினை உருவாக்கினார். அவருடைய இந்த தொலைநோக்குப் பார்வையின் விளைவாக மூன்றாம் உலகப் போர் மூளுவது தடுக்கப்பட்டது.

ஆனால் நேருவின் வழி வந்ததாகத் தன்னைக் கூறிக் கொள்ளும் மன்மோகன் சிங் அரசு, இலங்கையில் தமிழர்களை இனப்படுகொலைக்கு உள்ளாக்கிவரும் சிங்கள அரசுக்கு ஆயுதங்களை அள்ளித் தருகிறது.

அன்பு நெறியைப் போதித்த மகாவீரரும், புத்தரும், காந்தியடிகளும் பிறந்த மண்ணிலிருந்து ஆயுதங்கள் இலங்கைக்கு அனுப்பப்படுகின்றன. அந்த ஆயுதங்களின் துணை கொண்டு ஈழத்தமிழர்களை மட்டுமல்ல தமிழ் நாட்டு மீனவர்களையும் சிங்கள வெறியர்கள் கொலை செய்கிறார்கள். நமது குடிமக்கள் நமது எல்லைக்குள்ளேயே படுகொலை செய்யப்படுவதைப் பார்த்து மன்மோகன் அரசுக்கு பதை பதைப்பு வரவில்லை.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் தமிழர் அமைப்புகளும் கூட்டாகவும் தனியாகவும் போராட்டங்கள் நடத்திய பிறகுகூட மத்திய அரசு தன்னுடைய தவறைத் திருத்திக்கொள்ள முன்வரவில்லை.

காங்கிரஸ் கட்சியின் பாரம்பரியத்திற்கும் நேரு பெருமகனாரின் தொலைநோக்கு சிந்தனைக்கும் கொஞ்சமும் தொடர்பற்ற அரசாக மன்மோகன் சிங் அரசு விளங்குகிறது. நேருவின் காலத்தில் சுயஸ் கால்வாய்ப் பிரச்சினையில் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகள் கைகோர்த்து எகிப்துக்கு எதிராகக் களம் இறங்கியபோது, இப்பிரச்சினையில் உலக நாடுகளின் கருத்தைத் திரட்டுவதற்காக வி.கே.கிருஷ்ணமேனனை நேரு தனது தூதுவராக அனுப்பினார்.

அதைப்போல, பிரதமராக இந்திரா காந்தி இருந்தபோது இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து சிங்கள அரசுடன் பேசுவதற்கு மூத்த ராஜதந்திரியான ஜி. பார்த்தசாரதியை அனுப்பினார். நேருவோ, இந்திராவோ சர்வதேசப் பிரச்சினகளுக்கு ஒருபோதும் அதிகாரிகளை அனுப்பியதில்லை. ஆனால் மன்மோகன் சிங், எம்.கே. நாராயணன், சிவசங்கர் மேனன் போன்ற அதிகாரிகளை இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நம்பியிருக்கிறார். அவர்களைத் தான் அனுப்பி வைக்கிறார். ராஜதந்திர பார்வையும் தொலைநோக்கிச் சிந்தனையும் அறவே இல்லாத அதிகாரிகள் இப்பிரசசினையை மேலும் சிக்கலாக்கிவிட்டார்கள்.

இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கு உட்பட்ட இலங்கையில் ஏது நடந்தாலும் அது இந்தியாவையும் பாதிக்கும் என்ற உணர்வு கொஞ்சமும் இல்லாமல் மன்மோகன் சிங் அரசு செயல்படுகிறது. இந்த அரசின் தவறான அணுகுமுறைகளின் விளைவாக ஈழத் தமிழர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதோடு இந்தியாவுக்கு எதிரான நாடுகள் இலங்கையில் காலூன்றி நிற்கும் அபாயம் உள்ளது. நேருவும் இந்திராவும் சர்வதேசப் பிரச்சினைகளில் மிகவும் தேர்ந்த ராஜதந்திரிகளைத் தங்களுக்குத் துணையாகக் கொண்டிருந்தார்கள். அதன் காரணமாகத்தான் அணி சாரா நாடுகளின் தலைமை இந்தியாவைத் தேடி வந்தது. ஆனால் இன்று சுற்றிச் சுற்றி வரும் செக்குமாடுகளைப்போல குறிப்பிட்ட சிந்தனை வளையத்திற்குள் சிக்கிக் கிடக்கும் அதிகாரிகள் தவறான ஆலோசனைகளை வழங்கி உலக அரங்கில் இந்தியாவின் மரியாதையைக் கெடுத்துவிட்டார்கள்.

தமிழக மக்களின் கொதிப்புணர்வை இந்திய அரசுக்கு உணர்த்தி சரியான நடவடிக்கை எடுக்கும்படி தூண்ட வேண்டிய தமிழக முதல்வரும் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழக அமைச்சர்களும் ஒப்புக்காக ஏதோ பேசுகிறார்களே தவிர உண்மையில் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யத் தவறிவிட்டார்கள்.

இவர்களின் இந்த மகத்தான தவறை வரலாறு பதிவு செய்துள்ளது. ✱


## இறைச்சிக்கோழி விற்பனை

நிறைகூடிய புறொயிலர் இறைச்சிக் கோழி, முட்டை என்பன விற்பனைக்கு உண்டு. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

**செம்மணி பாம்**
77/3, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு.


## மரண அறிவித்தல்

### திருமதி இராமாமிர்தம் சண்முகசுந்தரம்

**(ஒய்வுபெற்ற ஆசிரியை, யா/வண்.நாவலர் வித்தியாலயம்)**



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமாமிர்தம் சண்முகசுந்தரம் 10.10.2008 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - தையல் நாயகி தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற சண்முகசுந்தரத்தின் (பிரதம இலிகிதர், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை) அருமை மனைவியும் ஜெயந்தி, வசந்தி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி), ஸ்ரீதரன் (ஆசிரியர், மன்னார் சென்சேவியர் கல்லூரி), காலஞ்சென்ற ரவிதரன், காலஞ்சென்ற முரளிதரன் மற்றும் ஆனந்தி (ஆசிரியை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் அமரர் மாரிமுத்து, அமரர் இரத்தினகோபால் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கண்ணபிரான் (ஒய்வுபெற்ற மின் பொறியியலாளர், இலங்கை மின்சார சபை), குஞ்சிதபாதம் (கணக்காளர் ESP&CO), சிவகுமாரன் (ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி), மஞ்சுளா ஆகியோரின் மாமியாரும் செந்தூரன் (Soft ware Engineer, Assest, Colombo), நிவேதினி (ஆசிரியை, வவுனியா பூவரசன்குளம் மகாவித்தியாலயம்), கௌதமன் (மாணவன், யா/பல்கலைக்கழகம்), ராஜாதித்தன் (சவுதிஅரேபியா), சாண்டில்யன் (மாணவன், யா/ இந்துக் கல்லூரி), வைஷ்ணவி (மாணவி, யா/வேம்படி மகளிர் கல்லூரி), சைலேஷ், உமையாள், விஷ்ணுகரன், தரங்கினி, ரவிவர்மன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.10.2008) திங்கட் கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*185/9, கில்னர் லேன்,*
*யாழ்ப்பாணம்.*
*தொ.பே.இல. 021 222 9169*

*தகவல்:*
*தி.குஞ்சிதபாதம்*
*(மருமகன்).*

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 . 01 . 1926



மறைவு 12 . 09 . 2008

### அமரர் சின்னவன் சின்னாச்சி

12.09.2008 அன்று இறைபதமடைந்த எங்கள் இல்லத்தின் குடும்ப விளக்கின் பிரிவுத் துயரில் பங்குகொண்டு எமக்கு ஆறுதல் தந்தும் இறுதிக் கிரியைகளில் பல வகையிலும்உதவி புரிந்தும் தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியோருக்கும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நி. மு:V.C.மோவிட்டபுரம்,
தெல்லிப்பழை.
த.மு: முருகமூர்த்தி கோயிலடி,
உடுவில், சுன்னாகம்.

நீங்காத நினைவுகளுடன்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், சகோதரன்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



S.A.உதயன் டக்ளஸ் தேவானந்தா S.P.M.தர்மராசா

வடக்கு மாகாண செயலணிக்குழுத் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், சமூகசேவை மற்றும் சமூகநலத்துறை அமைச்சரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமாகிய திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களால், 2008 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் எமது றெயின்போ சிறுகைத்தொழில் நிறுவன வளர்ச்சிக்கு நிதி உதவி வழங்கியமையையிட்டு அமைச்சர் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, எமக்கு உதவி புரிந்த யாழ். மாவட்ட ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அமைப்பாளர் எஸ்.ஏ.உதயன் அவர்களுக்கும், வலி.கிழக்கு அமைப்பாளர் S.P.M.தர்மராசா அவர்களுக்கும், தோழர் க.வதிமகன் அவர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகம்,
றெயின்போ சிறுகைத்தொழிலகம்.

(79184)


## தீபத்திருநாளை முன்னிட்டு அதிரடி விலைக் கழிவில்



அதிநவீன NOKIA கையடக்கத் தொலைபேசிகள் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள

Kit தொலைபேசி இணைப்புகளை உங்கள் பெயரில் பதிவு செய்துகொள்ளவும்

Kit card களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும்

**K.K. PHONE SERVICE**
**NO.1, MODERN MARKET, JAFFNA.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# போராட்டம் பற்றிய புரிதலோடு பிரவாகம் எடுக்கும் புத்தெழுச்சி

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தமிழகம் பொங்கி எழுந்திருக்கின்றமை தென்னிலங்கைச் சிங்களத்துக்குப் பேரதிர்ச்சி தரும் செய்தியாகும்.

இந்த எழுச்சியின் பின்னால் உள்ள பல விடயங்கள் சிந்தனைக்கும் ஆழமான ஆராய்வுக்கும் உரியவை.

இதனை வெறும் அரசியல் உணர்வெழுச்சியாகவோ இனவாதக் கிளர்ச்சியாகவோ இனங்காண முடியாது.

இது, இனப் பற்றுணர்வோடு, இனமானத்தின் அடிப் படையில் எழுந்த தமிழின எழுச்சி.

ஈழத் தமிழரின் உரிமைப் போராட்டத்தின் அடிப்படைகளையும் அர்த்த பரிமாணங்களையும் தமிழகம் நன்கு புரிந்து, உணர்ந்து, உள்வாங்கிக் கொண்டதன் விளைவாகவே இந்தப் புதிய பேரெழுச்சி ஏற்பட்டிருக்கின்றது.

இது திடீரென, சடுதியாக ஏற்பட்ட ஒரு மாற்றமல்ல. ஈழத் தமிழர்களுக்கு -அவர்களின் நியாயமான உரிமைப் போராட்டத்துக்கு-ஆதரவாக, 'நீறு பூத்த நெருப்புப் போல' தமிழகத்தில் கனன்று கொண்டிருந்த உணர்ச்சிப் பிரவாகத்தை, சிங்களத்தின் திமிர்த்தனமான செயற்பாடுகளும், நடவடிக்கைகளும், பிரகடனங்களும் காற்றாக ஊதி,பற்றிப் பிடித்து பெரும் உணர்வெழுச்சியாக விளாசி எரிய வைத்திருக்கின்றன.

சிங்களத்தின் இனப் பாகுபாட்டுச் செயற்பாடுகள், இனப்படுகொலை நடவடிக்கைகள் மற்றும் அரச பயங்கரவாதம் போன்ற நடவடிக்கைகளினால் ஈழத் தமிழர்கள் சொல்லொணா துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றனர் என்ற செய்தி மட்டுமே இதுவரை தமிழக ஊடகங்களில் பரபரப்பாக வெளிவந்தன. தமிழக ஊடகங்கள் ஈழத்தில் இடம்பெறும் 'இனப் பாகுபாடு', 'இனப்படுகொலை', 'அரச பயங்கரவாதம்' ஆகியவை பற்றியே அதிகம் கருத்து வெளியிட்டு வந்தன. அதாவது ஈழத் தமிழருக்கு தென்னிலங்கைச் சிங்கள அரசினால் இழைக்கப்படும் கொடுமைகள் குறித்தே தமிழகம் இதுவரை சிரத்தையும் கவலையும் கொண்டிருந்தது. அதன் அடிப்படையில்-இனமான ரீதியில்-தமிழகத்தில் அவ்வவ்போது உணர்ச்சிக் கருத்துகள் வெளிப்படுத்தப் பட்டு வந்தன.

ஆனால் தென்னிலங்கைச் சிங்களத்தின் இந்த இன அடக்குமுறைக்கு எதிரான தமிழர்களின் போராட்டத்தின் நியாயம் குறித்து-அதன் தாற்பரியம்பற்றி- அப்பாதையைத் தேர்தெடுப்பதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்ற ஈழத் தமிழரின் கட்டாயம் சம்பந்தமாக- தமிழகத்தில் இதுவரை சரியான புரிதல் இருக்கவில்லை.

அதனால்தான், ஈழத் தமிழர்களின் பேரவலம் குறித்து அதிகம் சிரத்தை கொண்ட-கூடிய கவனம் காட்டிய-தமிழகத் தலைமைகள் சில, ஈழத் தமிழரின் உரிமைப் போராட்டத்தை 'பிரிவினை' ஆகவும், அதன் வடிவத்தை ''வெறும் பயங்கரவாதம்'' ஆகவும் விமர்சித்து வந்தன.

ஆனால் அந்நிலைமையில் இப்போது பெரும் மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காண்கின்றோம்.

இதுவரை தென்னிலங்கைச் சிங்களத்தினால் மேற்கொள்ளப்படும் 'இனப் படுகொலை நடவடிக்கைகள்' உட்பட்ட 'அரச பயங்கரவாதம்' பற்றி மட்டும் பேசிவந்த தமிழக அரசியல் தலைமைகள், இப்போது அதனையும் தாண்டி, 'ஈழத் தமிழரின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம்' குறித்தும் பேசத் தலைப்பட்டிருக்கின்றமை புதிய சிந்தனை விரிவாக்கமாகும்.

இதுவரை வெறும் தமிழின உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஈழத் தமிழருக்கு ஆதரவாகத் தமிழகத்தில் எழுந்த அரசியல் ஆதரவு அலை இப்போது தமிழரின் உரிமைப் போராட்டத்தின் நியாயத்தை உள்வாங்கி, அதனை நன்கு உணர்ந்த அடிப்படையில் விஸ்தரித்து வியாபிக்கின்றது.

இதுவொரு நல்ல திருப்புமுனையாகும்.

சில அரசியல் சக்திகளின் தவறான வழிகாட்டலினால், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான உணர்வெழுச்சி நிலைப்பாடு தொண்ணூறுகளின் முற்பகுதியில் மழுங்கடிக் கப்பட்டபோதும், நிலைமை சீரடைந்து, தமிழகம் உண்மையைப் புரிந்துகொண்டு, ஈழத் தமிழர்களின் இனமானப் போராட்டத்துக்கு நீதி, நியாயத்தின் அடிப் படையில் நிச்சயம் ஆதரவு தரும் என்று முழு நம்பிக்கையோடும்-அளவுக்கு அதிகமான பொறுமையோடு-நட்புறவுக்கான கரங்களை அகலத் திறந்தபடி காத்திருந்த ஈழத் தமிழர்களின் அரசியல் தலைமைகளுக்குக் காலம் ஈட்டிக் கொடுத்த முழு வெற்றியாகத் தமிழகத்தின் இந்த உணர்வெழுச்சியை நாம் கொள்ளலாம்.

ஈழத் தமிழர்களை யுத்த ரீதியாக அடக்கி, அவர்களின் ஆயுத, இராணுவ வலுவையும், பலத்தையும் அடியோடு சிதைத்து, சிங்களப் பேரினவாதத்தின் காலில் தமிழினம் விழுந்து அடிமைப்பட வேண்டும் என்ற தங்களின் ஒரே நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தும் பேரினவாதம் செருக்கோடு-திமிரோடு-தென்னிலங்கை நடந்து கொண்டமையும், தமது பேரினவாத மேலாதிக்கத்தைப் பறைசாற்றிப் பிரகடனப்படுத்தும் திருப்தியோடு மமதை அறிக்கைகளையும் உரைகளையும் சிங்களத் தலைமைகள் தலைக்கனத்தோடு வெளியிட்டு வந்தமையும் தமிழகத்தில் தற்போதைய உணர்வெழுச்சியைக் கிளறித் தூண்டிவிடக் காரணம் என்பதையும் மறைத்து விட முடியாது.

எது, எப்படியென்றாலும் ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு பெரும் உத்வேகமும் உந்துசக்தியும் அளிக்கும் ஊக்கியாக வந்து அமைந்திருக்கிறது தமிழகத்தின் உணர்வெழுச்சி, தமிழரின் நியாயத்துக்கான உரிமைப் போராட்டம் விஸ்வரூபம் கொள்ள கால்கோள் இட்டிருக்கிறது என்பது இனித்தான்-போகப் போகத் தான்-தென்னிலங்கைச் சிங்களத்துக்குப் புரியப் போகின்றது. அப்போதுதான் அதன் தாக்கத்தை அது உணர்ந்து கொள்ளும்.

# வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழா நாளை காலையில்...



வடமராட்சி, ஒக்.12

வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய தேர்த் திருவிழா நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை வசந்த மண்டபப்பூசை இடம் பெற்று 8 மணிக்குச் சுவாமி எழுந்தருளி 9.15 மணியளவில் சுவாமி தேரில் எழுந்தருளுவார்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சமுத்திரத் தீர்த்தம் இடம்பெறும். அன்று விசேட மேளக் கச்சேரியும் சமயச் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கேணித் தீர்த்தம் இடம்பெறும்.

தேர், தீர்த்தத் திருவிழாக்களை முன்னிட்டு வடமராட்சி சிற்றூர்திச் சங்கம், இ.போ.சபையின் பருத்தித்துறை டிப்போ ஆகியன விசேட பஸ் சேவைகளை நடதத ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆலயச் சூழலில் உள்ள அனைத்து அன்னதான மடங்களிலும் அன்னதானம் நடத்துவதற்கான ஏற்பாடுகளும் செய் யப்பட்டுள்ளன.

ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் தங்க நகைகளை அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலய அறங்காவலர் சபையினர் கேட்டுள்ளனர்.

இந்த ஆலயப் பெருந்திருவிழா கடந்த மாதம் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. (203-236)

# வைகோ கைது குறித்து பொலிஸார் விளக்கம்

சென்னை, ஒக்.12

ஈழத் தமிழர்கள் மீது குண்டுமழை பொழிந்து அவர்களைக் கொடூரமான முறையில் படுகொலை செய்யும் இலங்கை இராணுவத்தைக் கண்டித்து வைகோ நடத்திய போராட்டத்தில் ஒலிபெருக்கிகள் மற்றும் லொறிகள் அப்புறப்படுத்தப்பட்டமை ஏன் என்பது பற்றி பொலிஸார் விளக்கமளித்துள்ளனர்.

இதுதொடர்பாக தமிழகப் பொலிஸார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

2.10.2008 அன்று ம.தி.மு.க. சார்பில் இந்திய அரசு, இலங்கைச் சிங்கள அரசிற்கு இராணுவ உதவி செய்து வருகிறது எனக் குறிப்பிட்டு அதைத் தமிழக அரசு தடுத்து நிறுத்தவேண்டும் என்ற பல கோரிக்கைகளை வலியுறுத்தி 10.10.2008 அன்று காலை காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி அருகில் குழுமி, நுங்கம் பாக்கம் சாஸ்திரி பவன் வரை ஊர்வலம் சென்று அங்கு மறியல் போராட்டம் நடத்த அனுமதி கோரப்பட்டது.

மேற்படி இடம் ஏற்பளிக்கப்பட்ட இடம் அல்ல என்பதாலும், மறியல் போராட்டம் குற்றச்செயல் என்பதாலும், மேற்படி இடம் போக்குவரத்து நெரிசல் மிகுந்த இடம் என்பதாலும், பெண்கள் கல்லூரி அருகில் உள்ளதாலும் அனுமதி மறுக்கப்பட்டு, அனுமதி மறுப்பு ஆணையை 6.10.2008 அன்று அனுப்பி வைக்கப்பட்டது.

இருப்பினும் 10ஆம் திகதி காலை ம.தி.மு.கவினர் பொலிஸ் அனுமதி மறுப்பு ஆணையை மீறி ஏற்பளிக்கப்படாத இடமான காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி அருகில் குழுமியதுடன் போராட்டத்திற்கு வருபவர்கள் உரையாற்ற ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட லொறி ஒன்றை அனுமதியின்றி கூட்ட மேடையாகப் பயன்படுத்த முயற்சித்த போது அப்பகுதியில் வாகன போக்குவரத்திற்கும், பொதுமக்கள் நடமாட்டத்திற்கும் இடையூறு ஏற்படும் என்ற காரணத்தினாலும், காயிதேமில்லத் கல்லூரி மாணவிகளுக்கு இடையூறு ஏற்படும் என்ற காரணத்தினாலும் மேற்படி லொறி மற்றும் ஒலிபெருக்கிகளும் அந்த இடத்தில் இருந்து அப்புறப் படுத்தப்பட்டன.

இதனையும் மீறி போராட்டத்தில் கலந்து கொள்ள வந்த தலைவர்கள் ஒலிபெருக்கியின்றி, உரையாற்றி பின்னர், நுங்கம்பாக்கம் சாஸ்திரிபவன் முன்பு மறியல் செய்யும் நோக்கத்துடன் வைகோ தலைமையில் சுமார் 700 பேர் ஊர்வலமாகச் செல்ல முற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டு அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தப்பட்டனர். பின்னர் அவர்கள் பிற்பகலில் விடுதலை செய்யப்பட்டனர்.

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.12

சாவகச்சேரி டச் வீதி சாம்.கொம். கோல் நிறுவனத்தின் ஓராண்டு நிறைவையொட்டி கணனிப் பயிற்சியினைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான் றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு நிறுவன மண்டபத்தில் நடைபெறும்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர் ம.ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் எஸ்.சிவதட்சணமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக யாழ். தியாகி அறக்கொடை நிலைய பணிப்பாளர் கமலநாதனும் கலந்து கொள்வர். (202-207)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 27 | 13.10.2008 திங்கட்கிழமை |
| திதி: | சதுர்த்தசி பி.இ. 03.29வரை |
| நட்சத்திரம் : | பூரட்டாதி மு.ப. 07.29 வரை |
| சுபநேரம் : | 12.02 -01.32 |
| இராகுகாலம் : | 07.32 -09.02 |

# சிமெந்து விநியோகம்

யாழ்ப்பாணம்,ஒக்.12

அபிவிருத்தி, புனரமைப்பு வேலைகளுக்காக சிமெந்து கோரிக்கைகளை மாவட்ட செயலகத்திற்கு முன்வைத்தவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான ஒதுக்கீடு பட்டியல் யாழ். வணிகர் கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று அரச அதிபர் தெரிவித்தார்.

உரிய விவரத்தை இல 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள வணிகர் கழகத்தில் பார்வையிட்டு அவர்களின் அறிவுறுத்ததலுக்கமைய பொருத்தமான நிறுவனங்கள் மூலம் பயனாளிகள் உட னடியாக பணத்தினை செலுத்தி சிமெந்தினை பெற்றுக் கொள்ளுமாறு அரசாங்க அதிபர் அறியத்தந்துள்ளார். (1)

# குடும்பஸ்தரான தொழிலாளியை காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.12

சண்டிலிப்பாய், மாகியப்பிட்டியைச் சேர்ந்த கூலித் தொழிலாளியான குடும்பஸ்தர் ஒருவரை கடந்த புதன்கிழமை முதல் காணவில்லை என மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அளவெட்டியில் இருந்து மாகியப்பிட்டி நோக்கிச் சென்று கொண்டிருந்த தமது கணவரை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் கடத்திச் சென்றதாக அவரது மனைவி முறைப்பாட்டில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (1-25)

# கடையிற் சுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம்,ஒக்.12

கடையிற் சுவாமிகளின் 118 ஆவது குருபூசை அவர் வாழ்ந்த ஊரான மண்டைதீவில் இன்று ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அபிஷேக, ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளது.

## உங்களுக்குள்ள அடிப்படை மனித உரிமைகளை அறிந்துகொள்ளுங்கள்...

**உறுப்புரை - 9**

*ஒரு தலைப்பட்ட மனப்போக்கான வகையில் கைதுசெய்யப்படுதல், தடுத்துவைக்கப்படுதல், நாடு கடத்தப்படுதல் ஆகியவற்றுக்கு எவரும் உட்படுத்தப்படுதலாகாது.*

**உறுப்புரை - 10**

*தமது உரிமைகள் கடப்பாடுகள் பற்றியும் தமக்கு எதிராகவுள்ள குற்றவியல் குற்றச்சாட்டுக்ள பற்றியும் நீதியான பகிரங்கமான விசாரணைக்கு ஒவ்வொருவரும் உரிமையுடையவர்களாவர்.*

**உறுப்புரை - 11**

*தண்டனைக்குரிய தவறுகள் குற்றஞ்சாட்டப்படும் எவரும் குற்றவாளிகள் என காண்பிக்கப்படும்வரை சுத்தவாளிகள் என ஊகிக்கப்படுவதற்கு உரிமையுடையவர்களாவர்.*

**உறுப்புரை - 12**

*எவரும் அவரது அந்தரங்கத்துவம், குடும்பம் என்பவை சம்பந்தமாக ஒருதலைப்பட்ட மனப்போக்கான தலையீட்டிற்கு எதிராக சட்டப் பாதுகாப்பிற்கு உரிமையுடையவராவார்.*

# இறைவனுடன் இணைந்து வாழ.....

ஒரு நாள் பிறக்கும். அன்று ஆண்டவர் புதியதோர் உலகம் செய்வார். அனைவருக்கும் அறுசுவை உணவு கொடுப்பார். அந்தப் புதிய உலகத்தில் அழுகையின் முக்காடு நீக்கப்படும். மனிதர்களின் கண்ணீரெல்லாம் துடைக்கப்படும். வறுமையும், கொடுமையும், நோயும், சாவும் அழிந்துபோக எங்கு நோக்கினும் பூ சிரிக்கும், கடல் சிரிக்கும். கரை சிரிக்கும். இந்த நாளும் ஒரு நாள் பிறந்தது. புதிய வானத் தையும் புதிய பூமியையும் படைக்கப் பிறந்த இயேசு பெருமான் பன்னிருவரை அழைத்துப் பந்தியில் அமர்ந்தார். அப்பத்தை எடுத்தார்; 'இது என் உடல்' என்றார். இரசத்தை எடுத்தார். 'இது என் இரத்தம்' என்றார்.




அற்புதத்திலும் அற்புதம். அப்பம் இயேசுவின் உடலானது; இரசம் இயேசுவின் இரத்தமானது!

தந்தை ஒருவன் தன் மகனுக்காக விருந்து வைத்ததைப்பற்றி கேட்டிருக்கின்றோம். இயேசு தரும் விருந்து! அந்த விருந்தில் பங்கு கொள்பவருக்குப்பசியும் இராது; தாகமும் இராது(யோ-6:35). எல்லா ஆபத்துகளில் இருந்தும் மனிதனைக் காக்கும் ஆற்றல் இந்த உணவுக்கு உண்டு.

இயேசு அளிக்கும் திருவிருந்தில், மறுக்காமல் தகுந்த தயாரிப்போடும், அன் போடும் நாம் பங்கு கொண்டால் புனித பவுலோடு சேர்ந்து "எனக்கு வறுமையிலும் வாழத் தெரியும்; வளமையிலும் வாழத் தெரியும். வயிராற உண்ணவோ, பட்டினி கிடக் கவோ, நிறைவோ, குறைவோ,எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி பெற்றிருக்கிறேன். எனக்கு வலுவூட்டுகிறவரின் துணை கொண்டு எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு" என்று நம் ஒவ்வொருவராலும் சொல்ல முடியும்.

-நசரேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் ஜனநாயகத்தை உருவாக்கியது போன்று வடக்கையும் விடுவிக்கும் காலம் விரைவில் வரும்

## சர்வகட்சி மாநாட்டில் கருணா

கொழும்பு, ஒக்.12

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அரசு கிழக்கை விடுவித்து ஜனநாயகத்தை நிலைநாட்டியதுபோல் வடக்கிலும் ஜனநாயகத்தை நிலைநாட்டும் காலம் மிக விரைவில் வரும்.

நேற்று அலரிமாளிகையில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்ட தமிழ்மக்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் வி.முரளிதரன் (கருணா அம்மான்) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

நான், விடுதலைப்புலிகள் அமைப்புடன் 22 வருடங்கள் இருந்தவன். அந்த அனுபவத்தின் மூலம், புலிகள் தங்களை பலப்படுத்திக் கொள்வதற்காகவே எப்போதும் சமாதானப் பேச்சுக்களை நாடுவார்கள் என்பதை நன்கு அறிவேன்.

சர்வதேசத்தின் அனுசரணையோடு இலங்கை அரசுடன் பல்வேறு சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டன. அவற்றில் நானும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதியாகப் பங்குபற்றினேன். இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சமஷ்டி முறையினை ஏற்பதாக இரு தரப்புக்களும் இணக்கம் கண்டன. ஆனால், புலிகளும் சமஷ்டியை ஏற்றுக்கொள்வதாக பிரபாகரனுடன் ஆலோசிக்காமல் அன்ரன் பாலசிங்கம் அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தார். பிரபாகரன் சமஷ்டி தீர்வை நிராகரித்ததுடன் இயக்கத்தை பலப்படுத்தும் பொருட்டு பேச்சுக்களை குறைந்தது 5 வருடங்களுக்கு இழுத்தடிக்குமாறும் கூறினார்.

அந்த சமயத்தில்தான் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலகும் முடிவை நான் மேற்கொண்டேன். இந்த இராணுவ நடவடிக்கைகளால் ஆகக் குறைந்தது 80 ஆயிரம் மக்கள் தமது வாழ்வை தொலைத்தும் ஆயுதப் போராட்டத்தால் சாதிக்க முடியவில்லை என பிரபாகரனிடம் எடுத்துக் கூறினேன். ஆனால் அதனை ஏற்பதாக இல்லை. இதனால்தான் புலிகள் தோற்கடிக்கப்படுவது அவசியம் என்று நான் கூறுகிறேன். இது புலிகளை நிராகரித்துள்ள வடக்கு மக்களுக்கு அவசியமானது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுயாதீனமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்தி கிழக்கில் பல முக்கியமான மாற்றங்களை கொண்டு வந்துள்ளார். இப்போது கிழக்கின் அனைத்து சமூகத்தினரும் அங்கு இடம்பெறும் அபிவிருத்திப் பணிகளில் பங்கெடுத்துள்ளனர்.

கிழக்கு மக்களிலும் பார்க்க வடக்கு மக்கள் பிரபாகரனின் தலைமைத்துவத்தை நிராகரித்துள்ளார்கள். ஜனாதிபதி மீது நான் வைத்துள்ள நம்பிக்கை காரணமாகவே அர சாங்கத்துடன் இணைந்து கொண்டேன் - என்றார்.

(அ-2)

### கருணா குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் அணியைச் சேர்ந்த ராஜேந்திரன் (வயது 18) என்பவர் மரணமானார்.

### அனைத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதியான எஸ்.குமரகுருபரன், இராணுவ நடவடிக்கையில் காட்டப்படும் வேகம் , அரசியல் தீர்வுகாணும் விடயத்தில் காணப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

வடக்கை விரைவில் மீட்டுவிடுவோம். அத்துடன் பயங்கரவாதம் முடிவுக்கு வந்துவிடும் என ஜனாதிபதி தெரிவித்த கருத்தை ஆதரித்து தென்பகுதிக் கட்சிகளின் பிரதிநிதிகள் உரையாற்றினர்.

கிழக்கு மீட்கப்பட்டது போல வடக்கும் பயங்கரவாதிகளிடம் இருந்து விரைவில் மீட்கப்படும் என்ற செய்தியை அனைத்துக் கட்சிகளுக்கும் தெரிவிக்கவே இங்கு அழைத்தேன் என ஜனாதிபதி கூறினார்.

அரசியல் தீர்வு யோசனை தொடர்பாகவோ, அரசியல் தீர்வு தொடர்பாகவே ஆராயப்படாமல் கூட்டம் மதிய போசனத்துடன் கலைந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஜாதிக ஹெல உறுமய, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, ஐ.தே.கட்சி ஜனநாயக பிரிவு, ஈ.பி.டி.பி., அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், மேலக மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், தேசிய சுதந்திர முன்னணி ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் கலந்துகொண்டனர். ஐ.தே.கட்சி, ஜே.வி.பி. ஆகியன கலந்துகொள்ளவில்லை.

(அ-1)

### 750 மெ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன. ஓரிரு தினங்களில் 750 மெற்றிக்தொன் உணவுப் பொருள்கள் வன்னிக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐ.நாவின் மேற்பார்வையில் வாகன அணியில் எடுத்துச் செல்லப்படும் பொருள்கள் அரச அதிபர்கள் மூலம் மக்களுக்கு வழங்கப்படும் - என்று அவர் கூறினார்.

வாகன அணி செல்லும் பாதையில் மாற்றங்கள் செய்யப்பட்டதால் வாகன அணி செல்வது தாமதமாகும் என முன்னர் தகவல்கள் தெரிவித்தன. அவ்வாறிருக்க இன்னும் ஓரிரு தினங்களில் வாகன அணி செல்லும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் கூறியுள்ளார். (அ-1)

### மட்டக்களப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப் புலிகள் தெரிவித் துள் ளவை வருமாறு:-

வெல்லாவெளி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாலையடிவெட்டையில் உள்ள சிறப்பு அதிரடிப்படை முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் சிறப்பு அதிரடிப் படையினர் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்கள் தும்பாலை பாலத்தை அண்மித்த போது வழிமறித்த விடுதலைப் புலிகள் மின்னல் வேக அதிரடித்தாக்குதலை நடத்தினர்.

இதில் சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர்.

ஏனைய படையினர் காயமடைந்தவர்களைத் தூக்கிக்கொண்டு தப்பிச்சென்றனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக் கின்றனர்.

(அ-சி)

### ஆயுதங்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தளவு கடினமாக இருப்பினும், அரசியல் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வுகள் காணப்பட வேண்டும், அதற்கான வழி முறைகள் தொடரப்பட வேண்டும்என்பதேஎனதுநம்பிக்கையாகும்.

அரசியல் பிரச்சினைகளுக்கு இராணுவத் தீர்வுகள் இல்லை என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. மக்கள் தமது நோக் கங்களையும் அபிலாசைகளையும் உணர்ந்து அதற்காகப் பணிபுரிய வேண்டும் என்ப தற்காகவே எங்களைத் தெரிவு செய்துள்ளனர்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் மக்கள் அனுபவிக்கும் ஜனநாயக உரிமை களை வடக்கில் உள்ள தமிழ் மக்களும் அனுபவிக்க வாய்ப்புகளை உண்டாக்கு வது எங்களுடைய கடமையாகும்.

நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டி நாடு முழுவதிலும் ஜனநாய கத்தை நிலை நிறுத்துவதற்காகவே இரா ணுவ நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன.

எமது தாய் நாட்டிலிருந்து பயங்கர வாதத்தை அழித்து அமைதியை தோற்று விக்கும் மிக முக்கியமான கட்டத்தை நாம் இப்போது அடைந்துள்ளோம். இந்த அமைதி நாட்டின் சகல பகுதிகளிலும்வாழும்மக்களுக்குக்கிடைக்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

நாட்டின் சகல மக்களுக்கும் அமைதி கிடைக்க நாம் பாடுபடுகிறோம். எமது நாட்டு மக்கள் வடக்கு, தெற்கு, கிழக்கு அல்லது மேற்கு - எங்கு வாழ்ந்தாலும் அவர் கள் சம உரிமைகளுடனும் சலுகைகளுட னும் சுதந்திரமாகவும் கௌரவத்துடனும் வாழ வேண்டும் என்பதற்காகவே நாம் உழைக்கிறோம்.

எத்தனை கடினமாக இருந்த போதி லும், அரசியல் பிரச்சினைகளுக்கு அரசி யல் தீர்வுகள் காணப்பட வேண்டும் என் பதே எனது அசையாத விருப்பமும் நோக்க மும் ஆகும்.

குறுகியகால அழைப்பை ஏற்று இங்கு சமுகமளித்துள்ள உங்கள் எல்லோரையும் மிகுந்த மரியாதையுடன் வரவேற்கிறேன் - என்றார்.

(அ)

### ஈழத்தமிழர் படுகொலையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சார்பில் கடையடைப்பு நடத்தப்படவுள்ளது.

இதுதொடர்பில் தமிழக வணிகர் சங்கங்களின் பேரவைத் தலைவர் த.வெள்ளையன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

ஈழத் தமிழ் மண்ணில் சிங்கள இனவெறி அரசு மேற்கொண்டு வரும் இனப் படுகொலையைக் கண்டித்தும், இந்தத் தமிழினப் படுகொலையை இந்திய அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமெனக் கோரியும், கடல் சார்ந்து வாழும் மண்ணின் மைந்தர்களான தமிழக மீனவர்களை ஈவு இரக்கமில்லாமல் - கண்மூடித்தனமாகச் சுட்டுக்கொல்லும் இலங்கைச் சிங்களக் கடற்படைக்குப் பாடம் புகட்டக்கோரியும் எதிர்வரும் 17ஆம் திகதி தமிழகம் முழுவதும் கடையடைப்பு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ள பெரு வணிகர்கள் முதல் சிறு வணிகர்கள் வரை அனைவரும் இதில் பங்கேற்பார்கள். வணிகர்களின் வாடிக்கையாளர்களான பொதுமக்கள் இந்தக் கடையடைப்புப் போராட் டத்தின் அவசியத்தையும், அவசரத்தையும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் உயிரோடும், உணர்வோடும் தொடர்புடைய போராட்டம் என்பதால் இந்தக் கடையடைப்புப் போராட்டத்திலிருந்து எந்த வர்த்தகப் பிரிவுக்கும் விதிவிலக்கு கிடையாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மிகச்சிறிய தேநீர்கடை முதல் மிகப்பெரிய நகைக் கடைகள் வரை, அனைத்துக் கடைகளையும் அடைத்துவிட்டு தமிழர்களின் உணர்வை வணிகர்கள் வெளிப்படுத்த வேண்டும் - என்றுள்ளது.

### தண்ணிமுறிப்புக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன என்று புலிகள் மேலும் தெரிவித்திருக்கின்றனர்.

இதேவேளை-

ஆண்டான்குளம் பகுதியில் வெள்ளிக்கிழமை காலை கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.

இந்த மோதல் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை இடம்பெற்றது. இந்தச் சண்டையில் விடுதலைப் புலிகளின் முக்கிய காவலரண்கள் படையினரால் மீட்கப் பட்டுள்ளன என்று இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் ஆறு உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்; 37 பேர் காயம் அடைந்தனர். இரண்டு படையினர் கொல்லப்பட்டனர்; மேலும் நால்வர் காயம டைந்தனர்என்றுஇராணுவத்தரப்பு மேலும் அறிவித்தது. படையினரின் முன்னேற்ற முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது என விடு தலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.


வெளிவந்து விற்பனையாகிறது

★ O/L தமிழ் மாதிரி வினா விடை (MODAL PAPER)
புதியபாடத்திட்டம் (தொகுப்பு)
ஆக்கம்:-
சிவஞானசுந்தரம் M.A.
விலை - 80/=

★ தரம் -9 மாகாண மட்டம் (PAST PAPER)
7-பாடங்கள்
விலை - 300/=

★ O/L சிங்களம் PAST PAPER
(இரண்டாம் மொழி) 2001-2007
விலை - 175/=

★ தீபாவளி வாழ்த்து மடல்கள் 2008 - புத்தம் புதிய டிசைன் சுவாமி, சினிமா, சீநெறி கட்டிங், காட் உட்பட வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு

அன்னை புத்தகசாலை
இல.7, ஆஸ்பத்திரி வீதி


## மரண அறிவித்தல்கள்

### சின்னக்குட்டி மார்க்கண்டு



கோப்பாய் தெற்கு, பழைய பொலிஸ் நிலைய வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி மார்க்கண்டு 09.10.2008 வியாழக்கிழமை நீர்கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி-தங்கம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற சின்னப்பு-சின்னட்டி தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசாத்தியின் அன்புக் கணவரும், சுந்தரத்தின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற செல்வராஜா மற்றும் சந்திராதேவி (லண்டன்), இந்திரராஜா (ஜேர்மனி), புவனேந்திரராஜா (சுவிஸ்), லலிதாதேவி, கமலாதேவி (சுவிஸ்), தங்கராணி (கம்போடியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயந்தி, சத்தியசீலன் (லண்டன்), ஜெயமணி (ஜேர்மனி), ஜெனிதா (சுவிஸ்), ரவீந்திரநாதன், ரங்கநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கிரிசாந்தன், சர்மி, தர்சிகா (ஜேர்மனி), தர்சனா(ஜேர்மனி), கிரி (சுவிஸ்), கமலன், மேவிகா (லண்டன்), ஹரிகரன், விஜிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரின் கோப்பாய் தெற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இருபாலை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*பழைய பொலிஸ் நிலைய வீதி,*
*கோப்பாய் தெற்கு.*

*தகவல்:*
*சி.சுந்தரம் (சகோதரன்.)*

### V.K.சுப்பிரமணியம்
### (சுப்பு மாஸ்டர் Rtd. S.R.D)

நவிண்டில், கரணவாய் மத்தி, கரவெட் டியைச் சேர்ந்த வீரகத்தியார் கந்தர் சுப்பிரமணியம் நேற்று (11.10.2008) சனிக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் கரணவாய் மத்தி வீரகத்தியார் கந்தர் - வள்ளியம்மை தம்பதியினரின் புத்திரரும் காலஞ்சென்ற V.K.கதிரவேலு (கிராமத் தலைமைக்காரர்), V.K.முருகேசு (வங்கியாளர்), V.K.வீரவாகு (நீர்ப்பாசன தொழில்நுட்ப உத்தியோகத்தர்), V.K.ஆறுமுகம் (ஓய்வுபெற்ற உதவி பொலிஸ் அத்தியட்சகர்), V.K.தாமோதரம்பிள்ளை (Fld DOA), திருமதி கதிராட்சிப்பிள்ளை, திருமதி பார்வதிப்பிள்ளை, திருமதி வேதநாயகி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற இராசலிங்கத்தின் மாமனாரும், திருமதி இராசலிங்கம் மலரதியம்மா, செல்வி சோதிமலர் ஆகியோரின் தகப்பனாரும், தெய்வேந்திரம் பத்மா (சுவிஸ்), ஜெயபாலராஜா (பிரதேச செயலகம், கரவெட்டி), லலிதை (HNB, நெல்லியடி), பஞ்சலிங்கம், மைதிலி (லண்டன்) ஆகியோரின் பேரனும், நவீன், நிலக்ஷன், நிஷாந், நிதுஷன், காத்யாயினி, சர்மிதா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.10.2008) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'மலர் வாசா',*
*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.*

தகவல்:
திருமதி ல்.ஜெயபாலராஜா.


ஏசியன் தளபாட நிலையம்

தீபாவளியை முன்னிட்டு கழிவு விலையில் பாவனைக்குரிய தளபாடங்கள், அலுவலக பாவனைக்குரிய தளபாடங்கள் மற்றும் பிளாஸ்ரிக் கதிரை வகைகள் அனைத்து விதமான மெத்தை வகைகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

உள்நாடு மற்றும் வெளிநாட்டிற்கான பொதிகள், ஆவணங்கள் குறைந்த கட்டணத்துடன் மூன்று நாள்களிற்குள் பாதுகாப்பாக அனுப்பிவைக்கப்படும்.

★ லண்டன், சுவிஸ், பிரான்ஸ், கனடா - 1Kg 760/=

தொடர்பிற்கு:

யாழ்ப்பாணத்தில்:
ஏசியன் தளபாட நிலையம்
133, மின்சார நிலைய வீதி (பஸ் நிலையம் அருகில்),
யாழ்ப்பாணம். T.P.: 021 222 7892
asian_133@yahoo.com

கொழும்பில்:
மாருதி ஏஜென்ட்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org